விலை ரூபா 2-00

16 பக்கங்கள்

# ஈழநாடு
வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 ஆடி 7 ஷவ்வால் 22 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (22—7—84) இதழ் 158

## இலங்கைத் தமிழர் பிரச்னை:
## இந்திரா கடிதம்!

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்டருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இலங்கையின் இனப் பிரசனையைத் தீர்ப்பது தொடர்பான அதிகார மாற்றம்பற்றியே இவர் இக் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாக பி. ரி. ஐ. தெரிவித்துள்ளது. (16ம் பக்கம் பார்க்க)

ஒரு வாரம் துக்கம்

# 24ல் உண்ணுவிரதம்!

# 25, 26ல் பூரண ஹர்த்தால்!!

## ● தமிழர் கூட்டணி பொதுச் சபை தீர்மானம்

ஏ. வி. மாணிக்கம்

ஓராண்டுககு முன்னர் நடந்த ஜூலை கலவரத்தில் இறந்தவர்கள் நினைவாக நாளை முதல் ஒரு வாரத்தைத் துக்க தினமாகக் கொண்டாடுவதென்று தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச் சபை நேற்றுத் தீர்மானித்தது. அத்தோடு வரும் 24ம் திகதி உண்ணுவிரதமும், 25, 26 ஆகிய இரு நாட்களும் பூரண ஹர்த்தாலும் அனுஷ்டிப்பதென்ற முடிவும் எடுக்கப்பட்டது.

ஜூலை கலவரத்தின் பின் முதற்தடவையாக நேற்றே பொதுச் சபை இந்த முடிவுகளை எடுத்தது குறிப்பிடத்தக்கது.

திருநெல்வேலியிலுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் கூட்டணியின் தலைவர் திரு.எம். சிவசிதம்பரம் தலைமையில் பொதுச்சபைக் கூட்டம்நேற்று நடைபெற்றது.

காலை 10 மணிக்கு ஆரம்பமான இப்பொதுச் கூட்டம் பிற்பகல் 3 மணிவரை நடைபெற்றது.

கூட்டணியின் செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட திருகோணமலை முன்னாள் எம். பி. திரு. இரா. சம்பந்தன், மட்டக்களப்பு முன்னாள் மாநகர முதல்வர் திரு. அம்பலவாணர், பின்னர் மாவட்ட சபையின் தலைவர் திரு.கைலாசமள்ளை மற்றும் கூட்டணியின் பொதுச் சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனா.

கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் மிகவும் அந்தரங்கமாக இக்கூட்டம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விபரம் வருமாறு:

''நாளை 23-ம்திகதி தொடக்கம் 29 வரை ஒரு வாரத்துக்குதமிழ் மக்கள் ஆடம்பரமான வைபவங்கள், கேளிக்கைகள் போன்றவற்றைதவிர்த்து, அமைதியான முறையில் துக்கதினம் அனுஷ்டிக்கவேண்டும்

''கடந்த ஆண்டு ஆயுதப் படையினரின் அட்டூழியங்களுக்குப் பலியானவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாகவும், தொடர்ந்தும் அட்டூழியங்களுக்குஆட்சேபம்தெரி விக்குமுகமாகவும் 24-ம்திகதிநல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில் உண்ணுவிரதம் இருக்கவேண்டும்.

25-ம், 26-ம் திகதி களானஇரு நாட்களிலும் பூரணகர்த்தால் அனுஷ்டிக்க வேண்டும்.

## சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிக்க 4அம்சத் திட்டம்!

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் ஆணையின் அடிப்படையில் நான்கு அம்சத் திட்டத்தில் ஒரு சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிப்பதென்று நேற்றுத் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச் சபை முடிவு எடுத்துள்ளது.

பொதுச்சபைத் தீர்மானங்கள் குறித்து விடுத்த அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''1972-ம் ஆண்டு முதல் 1982-ம் ஆண்டுவரை அரசாங்கத்துடன்பலதடவைகள்பேச்சுவார்த்தை நடத்தி பலன் எதுவும் காணாத சூழ்நிலையில், அரசுடன் மேற்கொண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதில்லை என்று கடந்த வருடம் ஜூலையில் நடைபெற்ற மன்னார் மாநாட்டில் தீர்மானித்திருந்த போதிலும் இந்தியாவின் நல்லெண்ணத்தலையீட்டுனாலும், புதுடில்லியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில திட்டங்களின் அடிப்படையில் நாம் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டோம். நாம் அப்படிப் போயிருந்தும், அரசாங்கம், பெரும் பான்மை அரசியல் கட்சிகளும், சிங்கள பௌத்த ஸ்தாபனங்களும் கைக்கொண்ட பிடிவாதப்போக்கினால் புதுடில்லியில் ஒப்புக் கொள்ளப்பட்ட அடிப்படைத் திட்டங்கள் கைவிடப்பட்டு சர்வகட்சிமாநாடு மூலம் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய எவ்வித மாற்றுத்திட்டமும் உருவாக்கும் சாத்தியமற்ற காரணத்தினாலும், மன்னார் மகாநாடு தீர்மனித்த பிரகாரம், கூட்டணிக்கு தமிழ் மக்கள் அளித்த ஆணையின் அடிப்படையில் ஒரு சாத்வீக விடுதலைப் போராட்டத்தை ஆரம்பிப்பதென்று இன்று கூடியபொதுச்சபை தீர்மானித்தது. அதற்காக பின்வரும் நான்கு அம்சத்திட்டத்தையும் பொதுச்சபை ஏற்றுக் கொண்டுள்ளது.

[1] தமிழ்ப்பேசும் மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலைக் (16ம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸூம் அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

25, 26 ஆகிய இரு நாட்களையும் பூரண ஹர்த்தாலாக அகில இலங்கை தமிழ் கங்கிரஸூம் அனுஷ்டிக்கும்.

தமிழ் காங்கிரஸ் அரசியல் பீடம்நேற்றுகாங்கிரஸ் தலைவர் எஸ். ஆர். கனநாயகம் தலைமையில் கூடிய போது இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டது

இத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

1983 ஜூலை 25, 26ம் திகதிகளில் நடந்தவை தமிழ் மக்க்ளை உள்ளத்தைவிட்டு அகலமாட்டாது. தமிழ் மக்கள் அடிமை வாழ்வை அகற்ற வேண்டிய உணர்வை உலக நாடுகள் மத்தியில் ஏற்படுத்திய தினங்களே இவையாகும்.

தமிழ் மக்கள் ஒன்றுபட்ட உணர்ச்சியை வெளிப்படுத்திய தினங்களாக இத்தினங்களைத் தமிழ்க் காங்கிரஸ் கருதுகிறது

தமிழ்மக்களின் போராட்டம்,ஒன்றுபட்ட எதிர்ப்புச் சக்தியை அமைதியான முறையில் ஜனநாயக வழியில் வெளிப்படுத்தவேண்டும்'' (சூ)

## நாளை மாநாட்டில் கூட்டணி இல்லை!

(யாழ்ப்பாணம்)

நாளை நடக்கும் சர்வகட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்து கொள்வதில்லை என்ற முடிவை அதன் பொதுச் சபை எடுத்துக்கொண்டுள்ளது அடுத்து நடக்கும் மகாநாடுகளில் கலந்து கொள்வதென்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## சர்வகட்சி மகாநாட்டில் தமிழ் கரங்கிரஸ்!

(இ. கந்தசாமி)

நாளை கூட்டும் சர்வகட்சி மாநாட்டில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கலந்து கொள்ளும் இந்தத் தகவலை அதன் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் நேற்று வெளியிட்டார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில்தெரிவித்துள்ளதாவது:

''கடந்த சில நாட்களாக வடக்கிலும் கிழக்கிலும் பெருவாரியான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, முகாம்களில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் இந்நிலையில், சர்வகட்சி மகாநாட்டுக்குச் சென்று இவ்விடயத்தை அரசின் உயர்பீடத்துக்கு அறிவிப்பதற்கு இது நல்ல சந்தர்ப்பம் எமது இளைஞர்கள் 25ம் திகதிக்கு பின்னரே ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டுமென்று கோரியுள்ளனர். இதனால் மகாநாட்டுக்குப் போவதில் பிழையில்லை.''

## 4½ மாதத்தில் ஒரு லட்சம் பாஸ்போர்ட்

(கொழும்பு)

நான்கு மாதத்தில் ஒருலட்சத்து ஐயாயிரம் பாஸ்போர்ட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. குடிவரவு குடி அகல்வு திணைக்களத்தின் என்றுமில்லாத பெரும் சாதனை இதுவாகும்.

இப்போது தினசரி பாஸ்போட்டுக்கு ஆயிரம் விண்ணப்பங்கள் திணைக்களத்துக்குகிடைக்கிறது.

### ஆசிரியர் நேர்முகப் பரீட்சை:
## யாழ். தேர்தல் கந்தோர் இன்று திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி ஆசிரியர், பிற ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்குத் தேவைப்படும் வாக்காளர் இடாப்புப் பிரதி வழங்குவதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ் தேர்தல் அலுவலகம் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை முதல் மேற்படி நேர்முகப் பரீட்சை நடைபெறவிருப்பது தெரிந்ததே.

வாக்காளர் இடாப்புப் பிரதி தேவைப்படும் விண்ணப்பதாரிகள் பிரதி ஒவ்வொன்றுக்கும் ரூபா 15 உடன் ஒரு ரூபா முத்திரையும் இன்று கொண்டுவர வேண்டுமென்றும் தேர்தல் அலுவலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

(மா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## விற்பனைக்கு

Northtown 4 நாள் சேவல் குஞ்சு 1-65 வெள்ளை பேட்டுக் குஞ்சு 8-75 குறஸ் பிறலேஸ் 4-50. ''ராதாகிருஷ்ணஸ்'' 392, நாவலர் றோட், கயிலாச பிள்ளையார் கோவிலடி. யாழ்ப்பாணம், [921]

வல்வெட்டித்துறை சிவன் கோவில் வீதியிலுள்ள ''கலா பவனம்'' வீடும்' காணியும் (சகலவசதிகளுடன்) விற்பனைக் குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். 910

பதிவுசெய்யப்படாத Honda C 90, C 70, M D 90 யும் 86 Sri தொடரிலிக்க C D 125 மோட்டார் சைக்கிளும் சதாஸ் மோட்டோர்ஸ், 56/2, ஸ்ரான்லி வீதி (இலங்கை வங்கி அருகாமையில்) உடன் விற்பனைக்கு உண்டு. 996

கடைகளுக்குப் பாவிக்கக் கூடிய பெரிய நிலைகள் கதவுகள் சிறிய நிலைகள் கதவுகள் யன்னல்கள், அடைவு கடைக்குப் பாவிக்கக்கூடிய 24 லாச்சி இரும்புப் பெட்டி, இரும்புக் கூடு, சுருக்குக் கேற் ஆதியன விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு செ. பொன்னம்பலம், 405, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். 965

நல்ல பராமரிப்பில் உள்ள கினோ மோட்டோ உழவு யந்திரம் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்க: விளம்பர இல: 981. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 981

நல்ல இன அல்ஷேசன் நாய்க்குட்டிகள் [ஒரு மாதம்] (Pure Bred Alsation) உடன் விற்பனைக்குண்டு. 58. சங்கிலியன் வீதி, நல்லூர் 922

7 3 க. அடி எலக்ரலக்ஸ் (Electrolux) குளிர்சாதனப் பெட்டி குறுகிய காலம் மட்டுமே பாவித்தது. விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு: ஆர் எஸ். நத்தானியல், No. 36, சென் ஜோன்ஸ் லேன், (ஆஸ்பத்திரிவீதிப் பக்கமாக) யாழ்ப்பாணம். 985

அம்மி, ஆட்டுக்கல், கல்உரல் திருகை, கோவில் தள வரிசைகள் அனைத்தும் கருங்கல்லில் கைதேர்ந்த கலைஞரால் கடையப்பட்டது. தயாரித்து விநியோகிப்பவர்கள், சூர்யா ஸ்டோர்ஸ், வவுனியா. சுண்ணுகத்தில் கிடைக்குமிடம்; ஈஸ்வரி இரும்புக்கடை, கே.கே எஸ் வீதி சுண்ணுகம். 706

கச்சேரிக்கு அருகாமையிலும் சுண்டுக்குழி மகளிர் பாடசாலைக்கு அண்மையிலும் நல்ல சுற்றுடலிலும் சென் ஆன்ஸ் வீதி (கச்சேரி-கிழக்கு ஒழுங்கை)யில் அரைவாசி கட்டப்பட்ட வீட்டுடன் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T. வரதராஜா 45 கொழும்புத்துறை வீதி. சுண்டுக்குழி. 1022

சொந்த தனிப்பாவிப்பிலுள்ள இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 7 ஸ்ரீ 7000 தொடர் இலக்கம் உள்ள மொரிஸ் ஒக்ஸ்போட் கார் விற்பனைக்கு உண்டு தொடர்பு: 45. கொழும்புத்துறை வீதி சுண்டுக்குழி 1021

நாவற்குழி சந்தியிலிருந்து ½ மைல் தூரத்தினுள் கேரதீவு வீதிக்கு அருகாமையில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு தொடர்பு: இ. திருஞானசம்பந்தர் கேரதீவு வீதி, நாவற்குழி. 1023

## விற்பனைக்கு

HONDA MD 90 பதிவு செய்யப்படாதது மிகவும் நல்ல நிலையில் உடன் விற்பனைக்கு K. விக்னராஜா, 79, செட்டித்தெரு, நல்லூர். 1020

புன்னலைக்கட்டுவன் வடக்கில் ஐயனார் கோவிலுக்கு அருகாமையிலும் பிரதான வீதியிலிருந்து 50 யார் தூரத்தில் வீடு கட்டக்கூடிய காணி 10 பரப்பு (பரப்பு 30,000 ரூபா). தோட்டக்காணி 15 பரப்பு (பரப்பு 30,000 ரூபாவுக்கு மேல்). கிணறு உட்பட விற்பனைக்குண்டு. தொடர்பு: ப. செகராஜசேகரன், குருக்கள் கோவிலடி, நவாலி வடக்கு, மானிப்பாய். 958

நல்லூர் மூத்தவிநாயகர் வீதியிலுள்ள 2 1/2பரப்புக்காணியில் 1 1/4 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: ''லக்சுமி'', 204 A புதிய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு அல்லது 6/21, முத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 975

பதிவுசெய்யப்படாத லொறி (Dodge) 6 சிலிண்டர்கள் 18' X 7 3/4', 15 தொன் லெயிடின் வெயிற், Audi 11 Sri கார் 80 GL விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி சந்திரபால், 'சுஜஸ்தான்' அச்சுவேலி [தபாற் கந்தோருக்கு அருகாமையில்], தொலைபேசி : 228, 978

கைதடி நுணுவில் கண்டி வீதிக்கருகாமையில் பதினெரு பரப்பு குடியிருப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: ''குயிக் றவல்ஸ் அன்ட் ரூர்ஸ்'' சரஸ்வதி பூங்கா' சாவகச்சேரி. தொலைபேசி : 273. [991]

Z X கொம்பியூற்றர், 16 K ராமுடன் J V C கசெட் ரெக்கோடர், றீ சாஜபிள் சேவர், தஞ்சாவூர் வீணை, Hifi ஸ்ரீரியோ செற் (Poineer) றொன்டோ 2000 விற்பனைக்குண்டு. தொடர்பு:எஸ். சுதர்ஷன், மே/பா செல்லத்துரை முதலியார் கோவில் லேன், தாவடி தெற்கு, கொக்குவில். 998

நல்லின 1 1/2 மாத Alsation நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. P. மனோகரதாசன், நவாலி தெற்கு, மானிப்பாய். 1013

Singer Zig Zag தையல் மெஷீன் ஒன்று உண்டு, தொடர்புகொள்ளவும்: 625/5, ஆஸ்பத்திரி வீதி (அடைக்கல மாதா கோவில் முன்ஒழுங்கை) யாழ்ப்பாணம். 1007

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலடியில் கண்டி வீதிக்கு அருகாமையில் நான்கு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு; ''அருளகம்'', கண்டி வீதி, கிளிநொச்சி. 1017

85 ஸ்ரீ Honda 125 N கலனுக்கு 130 மைல் ஓடக்கூடியது. சிறந்த நிலையில் விற்பனைக்கு உண்டு. திருமதி P. சிங்கராசா, அம்மன் கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், 1008

## கல்வி

G.C E.(O/L)மாணவர்கட்கு ஆங்கில இலக்கண, இலக்கியம் (Literature). ஆங்கிலப் பேச்சு தனி பட்டமுறையாக ஆரம்பத்திலிருந்து கற்றுக் கொடுக்கப்படும். குமாரு வேலு, அதிபர், இணுவிற்பெக்டர் குருசாமி இல்லம், இணுவில் மடம், யாழ்ப்பாணம்.(961)

## தேவை

யாழ். இந்து வேளாள குலத்தை சேர்ந்த பெற்றோர் தனது மகளுக்கு மணமகன் தேடுகிறார்கள். வயது 34 உயரம் 5' 3½'' 8ச் செவ்வாய் ஆக நற்குணங்களும் அடங்கியவர் காசு 1 லட்சமும் காணியும், நகையும் சீதனமாக கொடுக்கப்படும். விரும்புவர் சகல ஜாதக குறிப்புகளுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 983 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 983

மேக்கன்ரையில் பாதுகாப்பு சேவைக்கு பாதுகாவலர்கள் தேவை. வயசு 25க்கு மேல். ஓய்வுபெற்றபொலிஸ், தரைப்படை, கடற்படை உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. 25-7-84 மட்டும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் தொடர்பு: Mercantile and Security Service 77/5 1st Cross Street Jaffna. 1010

25 வருட அனுபவம் உள்ள 49 வயது அப்போதிக்கரி, தகுந்த [illegible]வ்வித வேலையும் செய்யவிரும்புகிறார் தொடர்பு க. சந்திரசேகரம் 127 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 972

கிளிநொச்சி - கோணுவில் காந்தி கிராமம் கூட்டுப்பண்ணைக்கு விவசாய அனுபவம்-படிப்புள்ள முகாமையாளரும், அங்கு தையல் தொழிலை நடாத்தக்கூடிய அனுபவமுள்ளவரும், தருமபுரம் அன்னை கஸ்தூரிபாய் மகளிர் இல்லத்துக்கு பாலர் பாடசாலை அனுபவமுள்ள மேற்பார்வையாளரும் தேவை. சமூகசேவை நோக்குடைய 35 வயதுக்கு மேல் உள்ளவர்கள் வழமைப்படி 31-7-84க்கிடையில் விண்ணப்பிக்கவும். ஊதியம் உண்டு. பொதுச் செயலாளர், அகில இலங்கை காந்தி சேவா சங்கம், உருத்திரபுரம். 1001

இரவு காவல்காரர் தேவை. நற்குணமும், ஆங்கில அறிவும் உள்ள இளைப்பாறிய பொலிசார் விரும்பப்படுவர். நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். எல்பிகெம் வாளித் தொழிற்சாலை, மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 992

## வாடகைக்கு

கிளிநொச்சி பஸ் நிலையத்துக்கு அண்மையில், கண்டி வீதியில் புதிதாகக் கட்டப்படும் 7 கடைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு: V இராசலிங்கம். 61, மருதடி வீதி. யாழ்ப்பாணம். 979

பலாலி வீதி ஊரெழுவில் கடைக்கும் போதனுநிலையத்திற்கும் உகந்த கட்டிடம் வாடகைக்குண்டு. தொடர்பு; சி. குணேந்திரம் ஊரெழு கிழக்கு உடையார் வீதி 949

## தவறிவிட்டது

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கியினுல் எனக்கு வழங்கப்பட்ட புத்தகம் யாழ்ப்பாணத்தில் 17ம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். பூலோக விஷ்ணு தாஸன் லங்கா ரேடிங் அயன் வேக்ஸ் 71, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். தொலைபேசி; 23856 (1019)

## WANTED

Doctor M.B BS. Apply: Dr. Chandrapal (E N T surgeon) Sujasthan Atchuveli. (977)

## FOR SALE

Generator Caravan Immaculate Condition Contact Andriesz and Co Ltd, Kandy Road, Navatkuli, Kaithadi. Phone: 22788. (1011)

# சித்திரவதைகள் பற்றிய நூல்

1977ம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்றது 'அம்னஸ்டி இன்ரநெஷனல்' இயக்கம். இவ்வியக்கம் அண்மையில் வெளியிட்டுள்ள (Torturein the Eighties) நூலில் இன்று 9 8 நாடுகளில்மனிதசித்திரவதை நடைபெறுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு காதுகளிலும் ஒரேசமயத்தில் தொடர்ந்து பலமாக அறைந்து செவிப்பறைகளை உடைப்பது, நாட்கணக்காக தலைகீழாக கட்டித்தொங்க விடுவது' எலக்றிக் ஷாக் தருவது, நகங்களைப் பிய்த்தெடுப்பது, மூச்சுத் திணறும் வரை தண்ணீரில் அமிழ்த்திப் பிடிப்பது, சிகரெட்டால் சுடுவது, திராவகத்தால் உறுப்புக்களை எரிப்பது —இவ்விதமாகச் சித்திரவதைகள் நடைபெறுவதாக இந்நூல்கூறுகிறது.

— சச்சி

## WANTED

Wanted Manager Trainee for cinema, Middle aged, good personality fluent in all three languages experience not necessary send testimonials. If you canvass you will not be selected. apply Regal Cinema, Jaffna. (1005)

Vacancies for retired Executives to handle correspondences independently and lady Cashier with cash security. Apply before 28th. Radhakrishna's, 392, Navalar Road, Jaffna. (999)

PHOTO STAT
பிரதிகளுக்கு
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

# காசாளர் தேவை (CASHIER)

யாழ். நகரில் உள்ள வரையறுக்கப்பட்ட கொம்பனிக்கு வங்கி அனுபவம் உள்ள இளம் காசாளர் தேவை.

**விண்ணப்ப முடிவு திகதி 30-07 84**

**விளம்பர இல. 126**

ஈழநாடு லிமிட்டெட் — யாழ்ப்பாணம்

# மின்தறிநெசவாளர்தேவை

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்க மின்தறி நெசவாலையில் 20மின்தறி நெசவாளர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு விண்ணப்பிக்க விரும்புவோர் 31-07-84ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். அனுபவத்திற்கும் திறமைக்கும்ஏற்ப சம்பளம் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களை சங்கக் காரியாலயத்தில் ரூபா 1/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை பொதுமுகாமையாளரிடம் நேரடியாகவோ தபால் மூலமோ சமர்ப்பிக்கலாம்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.
993

மாந்தை மேற்கு பல. நோ. கூ. சங்கம்
திருக்கேதீச்சரம்.

## வெற்றுச் சாக்கு விற்பனைக்கு
# கேள்வி கோரல் (4600)

மேற்படி சங்கத்தால் கீழ்க்காட்டப்பட்ட வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு முத்திரை இட்ட கேள்விப்பத்திர மூலம் கேள்வி கோரப்படுகிறது கேள்விகள் அனைத்தும் ரூபா 25/- செலுத்தி எமது சங்கத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து 1984-07-31ம் திகதி நண்பகல் 12-00 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாக **பொதுமுகாமையாளர், மாந்தை மேற்கு பல. நோ. கூ. சங்கம், திருக்கேதீச்சரம்** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பம் பெறும்போது விண்ணப்பதாரிகள் மீளப் பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 500/- சங்கத்தில் செலுத்துதல் வேண்டும். தபால் உறையில் இடதுபக்க மேல்மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்வி'' எனக்குறிப்பிடல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | சாக்கு (2½ புசல்) | 483 |
| 2. | மாவுச்சாக்கு (150 இரு. பிறீமா) | 1040 |
| 3. | சீனிச்சாக்கு (2 அந்தர்) | 350 |
| 4. | சுமார் 2½ புசல் | 402 |
| 5. | கட்டை கறுப்பு குறி | 1413 |
| 6. | இளக்கம் | 547 |
| 7 | கட்டை சீனி | 365 |

இவற்றை வேலை நாட்களில் காலை 9-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை எமது தலைமைச் சங்கத்தில் பார்வையிடலாம்.

N. சிவபாதம்,
பொது முகாமையாளர்
987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

## லண்டனிலிருந்து ஒரு கடிதம்

இலங்கை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இன்னொரு ''டியகோ கார்சியா''வாக மாறி வருகிறது என்று புதுடில்லியிருந்து லண்டனை வந்தடையும் செய்திகள் தெரிவிக்கின்றன.

''ஈழப் போராளிகளை'' கட்டுப்படுத்துவதற்கு இலங்கை அரசுக்கு உதவி அளிப்பது என்ற போர்வையின் கீழ் அமெரிக்கா இலங் என்றும் சொல்லப்படுகிறது.

பிரிட்டனின் ''ஸ்பெஷன் ஏயர் சேர்விஸஸ்'' (எஸ். ஏ. எஸ்.) எனப் பெயர் பெறும் மிகத் திறமை வாய்ந்த கமாண்டோ அணியிலிருந்து 500 பேர் கடந்த ஆறு மாத காலமாக இலங்கையில் தங்கியிருந்து இலங்கைத் துருப்புகளுக்கு விசேஷபயிற்சி அளித்து வந்துள்ளதாகக் கூறப்படுவது பற்றி இந்திய அரசும் பிரிட்டிஷ் அரசிடம் ஆட்சேபனை

முதலில் இராஜினாமா செய்ய வைத்தோ இளைப்பாற வைத்தோ ஒழுங்கு செய்துவிட்டு, அதன் பின் அவர்களை ஏதாவது ஒரு வெளிநாட்டில் ஒரு (தனியார்) கூலிப்படைக் கம்பனியாக இயங்க வைப்பது வழக்கமாம். இதன் பின் இந்தக் கூலிப்படைக் கம்பனியிலிருந்து எஸ். ஏ. எஸ். கமாண்டோக்கள் உதவிசெய்யத் தீர்மானித்துள்ள நாட்டிற்கு அனுப்பப்படுவர். பிரிட்டிஷ் அரசோ, அது ஒரு தனியார் ஏற்பாடு, கூலிப்படைக் கம்பனிக்கும் தனக்கும் தொடர்பில்லை என்று நல்ல பிள்ளைக்கு விளையாடி, தனது கையை விரித்துவிடும் என்று இந்தநூல் கூறுகிறது. இத்தகைய இயக்கங்கள் ஆபிரிக்கா

## வல்லரசுப் போட்டிகளுக்கு இந்து சமுத்திரம் களம் ஆகிறதா?

கையை தனது இராணுவத் தளமாக மாற்றி வருகிறது. உத்தியோக பூர்வமான இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஏதும் ஏற்படுத்தாது பல்வேறு மறைமுகமான வழிகளில், தனது நேசநாடுகளின் உதவியுடன் இலங்கையை ஒரு இராணுவத் தளமாக மாற்றும் முயற்சி நடைபெற்றுவருகிறது என்று அச்செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்க காங்கிரஸிற்கு 1984 - 1985 நிதியாண்டு ஆரம்பத்தில் உரையாற்றும் போது அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் கஸ்பார் வைன்பேகர் தெரிவித்தது இதே திட்டத்தையே தென்மேற்கு ஆசியப் பிராந்திய நாடுகளோடு உத்தியோக பூர்வமான பாதுகாப்பு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவதைத் தவிர்த்து அவற்றை இயன்றவரை (மறைமுகமான வழிகளில்) அமெரிக்காவோடு தொடர்புடையன வாக்க வேண்டும் என்பது அவரது கோட்பாடு இந்த தென்மேற்கு பிராந்தியத்தின் விளிம்பில் இலங்கை அமைந்துள்ளது இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்க கடற்படைக்கு கிடைக்கக் கூடிய சகல வசதிகளைப் பற்றியும் தொடர்பு சாதனங்களைப்பற்றியும் குறிப்பிடுகையில் இத்துறையில் ஏற்கனவே பெருவெற்றி கிடைத்துள்ளதாயும் இனி வரும் காலங்களில் மேலும் பெரிய சாதனைகள் எதிர்பார்க்கப்படுவதாயும் கஸ்பார் வைன்பேகர் கூறியதாக தெரிய வருகிறது.

இஸ்ரேலின் உளவு ஸ்தாபனமும், உலகின் மிகக்கொடிய உபஇராணுவ அமைப்புக்களில ஒன்றுமான ''மொஸாட்'' இலங்கைக்கு வந்துவிட்டது என்றும் இவர்களது பணி தமிழ்ப்போராளிகளுக்கு எதிரான திட்டங்களை வகுப்பது மட்டுமல்ல, முழுத்தென் மேற்கு ஆசியாவுக்குமே எதிராக வியூகங்கள் வகுப்பதும் தெரிவித்ததாக தெரிய வருகிறது இந்தக்குற்றச்சாட்டை பிரிட்டிஷ் அரசு மறுத்துள்ளது. இலங்கைக்குச் சென்றுள்ள எஸ் ஏ. எஸ். கமான்டோக்கள் பிரிட்டிஷ் அரச சேவையிலிருந்து ஏற்கனவே இராஜினாமா செய்தவர்களோ அல்லது ஓய்வு பெற்றவர்களோ தான் என்றும் அவர்கள் ஓமானில் தனிப்பட்ட முறையில் கூலிப்படையாக இயங்கிவந்தார்கள் என்றும் பிரிட்டிஷ் அரசு குறிப்பிட்டுள்ளது. அவர்கள் தனிப்பட்ட ''கொந்தராத்து'' ஒன்றின் கீழ் இலங்கைக்குச் சென்றிருக்கலாம் அந்த ஒழுங்குகளுக்கும் பிரிட்டிஷ் அரசுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது அதைத் தடுக்கவும் பிரிட்டிஷ் அரசுக்கு உரிமையில்லை என்று பிரிட்டிஷ் தரப்பில் கூறப்படுகிறது.

### ★ உதயதாரகை

**சரிதான் ஆனல் உண்மையல்ல!**

இந்த வாதம் உத்தியோக பூர்வமான ரீதியில் சரியாக இருக்கலாம் ஆனல் உண்மை அதுவல்லவாம் ''பிரிட்டிஷ் உளவுச் சேவையும் அதன் இரகசிய நடவடிக்கையும்'' என்ற தலைப்பில் பிரபல இராணுவ நூலாசிரியர்களான ஜொனதன் பிளோச், பற்றிக் பிற்ஸ்செரால்ட் ஆகியோர் எழுதி 1983ல் ஜங்ஷன் புக்ஸ் பிரசுரத்தால் வெளியிடப்பட்ட நூலில், நூலாசிரியர்கள் எஸ் ஏ எஸ் பிரிவின் இத்தகைய இயக்கங்களை மிக விரிவாக அணுகியுள்ளனர், எஸ் ஏ. எஸ். பிரிவின் சேவைகளை ஒரு அயல் நாட்டிற்கு மிகவும் இரகசியமான முறையில் அளிப்பதென்றால் அதற்கு முன்னடி அந்தப் பிரிவிலிருந்து சிலரை பிரிட்டிஷ் அரசு

மலேயாவில் நடைபெற்றதை இந்நூல் மேற்கோள் காட்டியுள்ளது.

இந்த நூலில் அம்பலப்படுத்தப்பட்ட விஷயங்கள் பிரிட்டிஷ் அரசுக்குப் பெரிய தலைவலியைத் தந்தன. இதன் விளைவாகப் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு இந்தநூலின் பிரசுரகர்த்தாக்களுக்குத் தொல்லைக்குமேல் தொல்லை கொடுத்து சந்தைப்படுத்தப்பட்ட இந் நூலை ஏறத்தாள வாபஸ் பெறச் செய்துவிட்டது.

பிலிப்பைன்சின் சூபிக் வளைகுடாப் பகுதியிலிருந்து புறப்பட்டு மேற்கு நோக்கிச் செல்லும் அமெரிக்க உளவு விமானங்களுக்கு எண்ணெய் நிரப்பும் தளமாக இலங்கை விளங்கி வருகிறது என்பது புதுடில்லியிலிருந்து வரும் ஒரு குற்றச்சாட்டு ஆகும்.

கடந்த வருட இறுதியில் ''வொய்ஸ ஆப் அமெரிக்கா'' ஒலிபரப்பு ஸ்தாபனத்துடன் இலங்கை புதுப்பித்த ஒப்பந்தத்தில் கீழ், 1951 ஒப்பந்தத்தின் கீழ் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒலி செலுத்திகளைவிட 500 மடங்கு சக்திவாய்ந்த ஒலி செலுத்திகளை இலங்கையில் நிறுவ இடமளிக்கப்பட்டுள்ளது. புத்தளத்திற்கணித்தாக நிறுவப்படும் இந்நிலையத்தின் கட்டுப்பாடு அமெரிக்காவின் கையிலிருப்பதோடு, அதன் ஒலிபரப்புகள் இந்தியாவைப் பிரதம இலக்காகக் கொண்டிருப்பதையிட்டு புதுடில்லிவட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

திருமலைத் துறைமுகத்தில் உள்ள 10 இலட்சம் தொன் எண்ணெய் சேகரிக்கக்கூடிய எண்ணெய்த் தாங்கிகளைக் குத்தகைக்கு எடுப்பதற்கான சர்வதேச ரெண்டர்கள் கோரப்

[14ம் பக்கம் பார்க்க]

## சமாதான வாரம்

பிணக்கும் போரும் எவ்வாறு மனித உள்ளத்தில் உருவாகின்றனவோ அவ்வாறே சமாதான உணர்வும் அங்கே ஊற்றெடுக்கவேண்டும்.

வாக்கு வன்மையோ, பத்திரிகைப் பிரசாரமோ சமாதானத்தை உருப்படுத்த உதவாது.

இருதய அந்தரங்கத்தினின்று எழுவதே உண்மைச் சமாதானப் பண்பு.

இன்று இந்த நாட்டில் இப்பண்பு அவசியம் வேண்டப்படுகிறது. இதற்கொரு பிரத்தியேக வாரம் ஒதுக்கி விடுவதால் எதனையும் வெட்டிப் பிடுங்கலாமென நினைப்பது ஏமாற்றத்தில் முடியும்.

மனமே மூலவேர் என்பதை வற்புறுத்த மதத்தலைவர்கள் இவ்வாரத்தில் எடுக்கும் நடவடிக்கைகள் பலனுள்ளதாக இருக்கவேண்டும்

கருணையும் கொடூரமும் தனிப்பட்ட பண்புகள் அல்ல. பூனையின் பல் கருணைக்கு இருப்பிடமா. பூனைக்குட்டி 'ஆம்' என்னும். ஆனல் எலியே 'நொன்சென்ஸ்' என்னும்.

அரசியல்வாதிகளால் சமாதானம் உருவாகாது என்று சொல்லப்படுகிறது. எனவே சமயத்தலைவர்கள்- சமயவாதிகள் அல்ல - இப்பணியில் இறங்கி இருக்கின்றனர்.

தமிழர் பிரச்னை அரசியல் பிரச்னை. பூனையும் எலியுமென்ற பகைமைக்கு காரணம் அரசில் கோளாறே; அதற்கு மருந்து அவசியம்.

சமாதான உணர்வு அம்மருந்துக்கு இன்றியமையாத பத்தியமென அறிக

## நெஞ்சில் நிறைந்த அரசியலார் சிலர்

ஒரு சிறு சம்பவத்தைக் கூட பெரிது படுத்தி மக்கள் தொண்டனாகக் காட்டிச்செல் வாக்குத் தேடுவது அரசியல்வாதிகளின் பழக்கம். இதற்கு விதிவிலக்கானவர்களும் உண்டு.

ஒருமாணவனுக்கு அவன் படிக்கும் பாடசாலையில் படிப்பிக்கும் ஓர் ஆசிரியர் பாடசாலைக்குச் செல்லும் வழியில் ஓர் ஒழுங்கையில் வைத்துக் கண்டபடி அறைந்து விட்டார் மாணவன் தனது தந்தையிடம் சென்று முறையிட்டான். தந்தையார் அயலிலுள்ள மற்றும் மாணவர்களின் பெற்றோருடன் கலந்தாலோசனை செய்தார்.

இந்த விஷயத்தைச் சும்மா விடக்கூடாது. எங்கடை எம்.பியிடம் சொல்லி வாத்தியார் மேல் கடும்நடவடிக்கை எடுக்கச் செய்ய வேண்டும் என்று பெற்றோர் தீர்மானித்தனர்.

பாதிக்கப்பட்ட மாணவனையும் அழைத்துக் கொண்டு இவர்கள் எம் பியின் வீட்டுக்குச் சென்றனர்.

மாணவனையும் பெற்றோரையும் பார்த்த எம். பி என்ன விஷயம் என்று கேட்டார்

மாணவனுக்கு வாத்தியார் [illegible] அடித்துவிட்டார் என்ற விபரத்தை மாணவனின் தந்தையும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள்

''நீங்கள் பொலிசில் அல்லவா போய்ப் புகார் செய்திருக்க வேண்டும்: இங்கே எதற்கு வந்தீர்கள்'' என்று எம். பி கேட்டார்.

வந்தவர்களுக்கு முகம் கறுத்து விட்டது.

வேறொரு அரசியல் வாதியாக இருந்தால் 'அப்படியா விஷயம்' நான் இப்பவே பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொள்கிறேன்; வித்தியாதிபதியுடனும் பேசுகிறேன் அந்த வாத்தியாருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன் ஆளையும் அந்தப்பாடசாலையிலிருந்து தூர இடத்துக்கு மாற்றச் செய்கிறேன் வித்தியாதிபதியிடம் நானே உங்களைக் கூட்டிச் செல்கிறேன் என்று ஒரு பெரிய ஆர்ப்பாட்டமே நடத்தி வந்தவர்களிடம் ''இவர் அல்லவா மக்கள் தொண்டன்'' சபாஷ் வாங்கியிருப்பார்

''பொலிசுக்குப் போகாமல் இங்கே ஏன் வந்தீர்கள்?' என்று கேட்ட எம். பி யார் தெரியுமா?

### எஸ். எம். ஜி.

சிந்தனைச் சிற்பி என்று பலராலும் அழைக்கப்பட்ட முன்னாள் கோப்பாய் எம் பி. அமரர் சி கதிரவேலுப்பிள்ளை!

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக வாக்குத் தேடும் நோக்கம் அவருக்கு இருந்ததில்லை.

யாழ்ப்பாணத் தொகுதியிலும் அவர் போட்டியிட்டிருக்கிறார். யாழ் மாநகரசபைத் தேர்தலிலும்கூட அவர் போட்டியிட முன்வந்திருக்கிறார்.

தாம் சார்ந்த கட்சியின் நலனுக்காகவே இதனைச் செய்தார். அரசியலைப் பொறுத்த வரையில் திரு கதிரவேலுப்பிள்ளை சுயநலனைப் பேணியதில்லை.

**பிரிவினையும் தமிழ் ஈழமும்**

தமிழ் ஈழக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுத் தீவிர பிரசாரம்மேற்கொள்ளப்பட்ட சமயம் அரசாங்க வட்டாரங்களிலும் தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களிலும் 'பிரிவினைத் தடைச் சட்டம்' கொண்டுவர வேண்டுமென்ற குரல் எழுந்தது.

இச்சமயத்தில் பாராளுமன்றத்தில் நடந்த ஒரு விவாதத்

[14ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய உலகு

ஈ.கே.ஆர்

## இலக்கிய வட்டத்தின்

## 'செய்திமடல்'

யாழ். இலக்கிய வட்டத்தின் முதலாவது 'செய்திமடல்' வெளிவந்திருக்கிறது. செம்பியன் செல்வனின் கைவண்ணத்தில் இது உருவாகியிருக்கிறது அவரின் முத்திரை பதிந்திருக்கிறது. 'விவேகி'யை மாற்றி அமைத்து வெளியிட்டதில் ஜோ. எ. எம். தாஸ், என்போன்ருேர்க்கு முக்கிய பங்குண்டு என்று சொல்வதைப்போல இந்தச் செம்பியனுக்கும், செங்கை ஆழியானுக்கும் பெரும் பங்கு உண்டு. அப்போதே ஒரு சஞ்சிகையைத் தம்மால் நடாத்த முடியுமென்பதைக் காட்டினர்.

இம்மடலில் காலாண்டு சிறு கதைப்பரிசு அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இலங்கையின் தமிழ்ப் பத்திரிகை சஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் மிகச்சிறந்த இரு சிறுகதைகளைத் தெரிவு செய்து முதற் பரிசாக 150 ரூபாவும், இரண்டாம் பரிசாக 100 ரூபாவும், யாழ். இலக்கிய வட்டச்சான்றிதழும் வழங்கப்படவுள்ளன. தரமாக எழுத்துக்களை ஊக்குவிக்க நல்ல அம்சம் இது! அக்டோபர் 10ம் திகதிக்குள் சிறு கதைகள் வெளிவந்த பிரதியொன்றை செய்திமடல் ஆசிரியருக்கு அனுப்பிவைக்கக் கோரப்படுகின்றனர். முகவரி: இல 10, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

யாழ். இலக்கிய வட்ட அங்கத்தினர்கள் தங்களைப்பற்றிய சகல விபரங்களையும் எழுதி அனுப்பும் படியும் கோரப்பட்டுள்ளனர். கலை இலக்கியப் பணி பற்றிய விபர வங்கியொன்றை வருங்காலத்துக்காகத் தயாரிப்பதே முதன் நோக்கம் என்கிறுர் ஆசிரியர்.

'இரசிகமணி' கனக செந்திநாதன் நினைவுநாவல் போட்டி பற்றியும் குறிப்பு வெளிவந்துள்ளது. முடிவு திகதி ஆகஸ்ட் 15 என அறிவிக்கப்பட்டுள்ளது.

எது எப்படியிருந்தாலும் செங்கை ஆழியானைப்போல செம்பியனிடம் நிறைய இருக்கிறது! இவரிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தான் வந்து கொண்டிருக்கிறது!

## தமிழகத்தில்

## ஈழத்தவர் நூல்கள்

ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் நூல்கள் தமிழகத்தில் பெருமளவில் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளன. கே. டானியல், ஸி. வி. வேலுப்பிள்ளை, செ. கணேசலிங்கம், டொமினிக் ஜீவா, எஸ். அகஸ்தியர், தெணியான், திக்குவல்லைகமால், செ. யோகநாதன் ஆகியோரின் நாவல்கள், சிறுகதைகள் புத்தகங்களாக வெளிவந்துள்ளன.

## இலங்கை

## இலக்கியம்

'இலங்கை இலக்கியம் எங்கே செல்கிறது?' என்று கேட்கிறீர்களா? 'தாய்' என்ற தமிழ்நாட்டு எம். ஜி. ஆரின் சஞ்சிகையில் நமது எழுத்தாளர் ஒருவர் நால்வரைப்பேட்டி கண்டு எழுதியிருந்தார். அதைப்பற்றி 'சஞ்சீவன்' தனது பக்கத்தில் எழுதியுள்ள சிறு குறிப்பை நீங்களும் நிச்சயம் படிக்கத்தான் வேண்டும்! 'மாற்று'மே இதழ் இப்போது தான் என் கைக்கு கிட்டியது. அதில் தான் சஞ்சீவன் நல்ல சில விஷயங்களை எழுதியுள்ளார். யோகேந்திர லிங்கம் அமைதியாக இருந்து இந்தச் சஞ்சிகையை நடாத்துகிறுர்.

## இலங்கை

## ஒலிபரப்பில்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில், இப்போது பல புதிய மாற்றங்கள். வானொலியையும், நேயர்களையும் இணைக்கும் விதத்தில் தயாரிக்கப்படும் அம்சங்களாக அவை இருப்பதை அவதானிக்கக்கூடியதாக விருக்கிறது. 'போர்' அடித்த சமய நிகழ்ச்சிகள் கூட காதுக்கு விருந்தளிக்கும் 'கோபுர தரிசன'ங்களாக ஒலிக்கின்றன. தரமான நிகழ்ச்சிகளைத் தருவதற்கு நல்லதயாரிப்பாளர்களும், அறிவிப்பாளர்களும், அங்கு இருக்கிறுர்கள் என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

ஆனலும், இவர்களையெல்லாம் முடுக்கிவிட்டு. புதுமைகளைப் புகுத்தி, செயல்படுத்தும் திறமைமிக்க ஒருவர் தமிழ் சேவைப் பணிப்பாளராகப் பதவி ஏற்றிருப்பது தான் இந்தமாற்றங்களுக்கெல்லாம் முழுக்க முழுக்கக் காரணம் என்று சொல்லலாம்! புதிய பணிப்பாளர் திரு. வி. ஏ. திருஞானசுந்தரம் புதிய பொறுப்பை ஏற்று ஆறுமாதத்திற்குள் பெருமளவு மாற்றங்களைச் செய்திருக்கிறுர். 'வீரகேசரி'யில் பத்திரிகையாளராகப்பணியாற்றிய அனுபவத்தை மிகப்பெருமையாகக் கருதும் இவர், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பொறுப்பான பதவிகளை வகித்திருக்கிறுர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் இருந்திருக்கிறுர். ஒலிபரப்புத்துறையிலும், தொலைக்காட்சித்துறையிலும்ஜப்பான், மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பயிற்சி பெற்றிருக்கிறுர். இவற்றையெல்லாம் விட இருபத்தைந்து ஆண்டு காலங்கள் இலங்கைவானெலியில் கடமையாற்றி இயல், நாடக, கட்டுப்பாட்டாளராக இருந்து ஒய்வுபெற்ற லலிதக் கலைஞர் வி. ஏ சிவஞானத்தின் வழிகாட்டல்தான் இவரின் வெற்றியின் ரகசியம். 'திரு'விடம் நிறையத்திறமை இருக்கிறது! நிச்சியம, அதனல் பயன்பெறப்போவது நேயர்களே!

## சாந்தன்

## வந்து சேர்ந்தார்!

சாந்தன் சோவியத் யூனியனுக்கான தமது ஒருமாத கால கலாசார சுற்றுப் பயணத்தைவெற்றிகரமாக முடித்துக்கொண்டு கடந்த வாரம் நாடு திரும்பினர்.

இலங்கை-சோவியத் நட்புறவுக் கழகம் தன் வெள்ளி விழாவையொட்டி 1982 ல் நடத்திய கட்டுரைப் போட்டியில முதலிடம் பெற்றதன் மூலம் சாநதனுக்கு இவ்வாய்ப்புக் கிட்டியது.

இந்த ஒரு மாத காலமும் சோவியத் - இலங்கை நட்புறவுக் கழகத்தின் அதிபதியாக ருஷ்யாவில் தங்கியிருந்த அவர் மாஸ்கோ' லெனின்கிராத் ஆகிய இருமாநகரங்களிலும் உள்ள கலைக்கூடங்கள், அரும்பொருட்காட்சிச் சாலைகள் ஆகியவற்றைப் பார்வையிடுவதில் காலத்தைச் செலவிட்டார்.

சோவியத் வாழ்முறையை நேரிற் கண்டறிந்ததும், ருஷ்ய நாட்டுத் தமிழறிஞர்களைச் சந்திக்க முடிந்ததும் மேலதிக வாய்ப்புக்களாகும்.

இந்த அநுபவங்கள், சாந்தனது இலக்கிய முயற்சிகளை

(14ம் பக்கம் பார்க்க)

# நன்னீர்ப் பிரச்னை:

# தீர்வுக்குச் சில யோசனைகள்

இலங்கை வாழ் தமிழர்களில் பாதிக்கு மேற்பட்டோர் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே வசிக்கிருர்கள். இப்பகுதியில் பூகோள ரீதியாகச் சிலவசதிகள் இருக்கின்றமையினுல் இந்நிலை ஏற்பட்டது.

யாழ்குடாநாட்டின் பூகோள அமைப்ப இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்தும் வேறுபட்டது இப்பகுதியில் நிலத்திற்குக் கீழே சுண்ணும்புக்கற்படிவங்கள் உண்டு. இவைகளிடையே இடைவெளிகள் உண்டு. இவ்விடைவெளிகளில் மழைநீர் கீழேசெல்வதன் காரணமாக நன்னீர்ப்படிவங்கள் ஏற்படுகின்றன. கிணறு தோண்டுவதன் மூலம் இந் நன்னீரைப் பயன்படுத்த முடிகிறது.

சூரியனைப் காற்றையும் போல உயிரினங்கள் மனிதர்கள் உட்பட எல்லாவற்றிற்கும் நன்னீரும் மிகவும் அவசியம். இந்தநீரை எமது முன்னோர்கள் தங்கள் தேவைகளுக்கும் விவசாயத்திற்கும் பயன்படுத்தினர்கள். குளங்கள் தோண்டி மழைநீரைச் சேமித்தார்கள். தூர்ந்து போன குளங்களிலிருந்து மண்ணை வெளியில் எடுத்துக் குளங்களை ஆழமாக்கி வைத்திருந்தார்கள்.

## யந்திரம் மூலம்

## நீர் எடுத்தார்கள்

படிப்படியாகச் சனத்தொகை அதிகரித்து வந்தது. அத்துடன் தொழில்நுட்ப அறிவும் வளர்ந்து வந்தது. இதனல் நீர் கூடுதலாகப்பயன்படுத்தப்பட்டது துலாமூலம் இறைப்பதை விட்டு நீரிறைக்கும் யந்திரம் மூலம் கிணற்றிலிருந்து நீரைஎடுக்கத்தொடங்கினர்கள். இன்று இரவுபகலென்று பாராமல் யந்திரங்கள் மூலம் நீர் வெளியே எடுக்கப்படுகிறது. இந்நிலையில் நாம் கவனிக்கவேண்டியது யாது? எவ்வளவு நன்னீர் வெளியே எடுக்கப்படுகிறதோ அவ்வளவு மழைநீர் சேமிக்கப்படவேண்டும். இச்சமநிலை தவறும் பட்சத்தில் கடல்நீர் நாட்டிற்குள் வருவதன் மூலம் குடாநாட்டிலுள்ள நன்னீரில் உப்புத்தன்மை அதிகரிக்கும் இது எமது இளம்சந்ததியினருக்கு ஒரு சவால் ஆகும். குறிப்பாக விஞ்ஞானம் படிக்கும் மாணவர்கள் இதுபோன்ற விடயங்களில் கூடிய கவனம்செலுத்த வேண்டும்.

## குடாநாட்டைச் சுற்றி

## அணை அமைத்தால் என்ன?

நாம் மேற்கூறியதற்கு உதாரணமாகப் புத்தூரிலுள்ள நிலாவரைக்கிணற்றை எடுக்கலாம். அதன் ஆழம் இன்னமும் கணிக்கப்படவில்லை. யந்திரங்கள் மூலம் அதிலிருந்து நீர் எடுக்கப்பட்டது. சுமார் 40 அடி நீர் வற்றிய பின்னர் அதில் உப்புத்தன்மை தோன்றத் தொடங்கியது. இதுபோன்ற ஆபத்து குடாநாட்டில் ஏற்படாது இருக்க நாம் பதில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## குடாநாட்டைச் சுற்றி

## அணை கட்டலாம்

முதலாவதாக மழைநீரைக் கடலுக்குள் ஓடிவிடாது சேமித்து நிலத்திற்குக்கீழே செல்லக்கூடியதாக வழிவகுக்க வேண்டும் இதற்காகக் கிராமங்களில் உள்ள குளங்களை ஆழமாக்கிக் கூடுதலான நீரைச் சேமிக்கலாம். எமது குடாநாட்டின் சுற்றளவு அதிகமாக இல்லாததால் அதனைச் சுற்றி அணைகட்டுவதைப்பற்றி எமது பொறியியலாளர்கள் சிந்திக்க வேண்டும்.

இரண்டாவதாக தொண்டமானுறு, வழுக்கியாறு, ஆனையிறவு போன்ற ஏரிகளிலிருக்கும் நீரின் உப்புத் தன்மையைக் குறைப்பதற்குத் தற்பொழுதே திட்டங்கள் உண்டு. இவை திறம்பட அமுல் செய்யப்படவேண்டும். அமரர் கௌரவ கே. பாலசிங்கம் போன்றவர்கள் மகாவலியை வடக்கே திருப்பி ஆனையிறவு ஏரியை நன்னீர் ஏரியாக்கலாம் எனக் கனவு கண்டார்கள். இது சாத்தியமா எனச் சிந்திக்கவேண்டும் மகாவலி நீரை யாழ்ப்பாணம் வரை கொண்டு வர ஏற்படும் செலவை வரும் நீரின் மூலம் ஈடு செய்யமுடியுமா. என ஆராயப்பட வேண்டும் பல நாடுகளில் ஈரலிப்புப் பிரதேசங்களிலுள்ள ஆறு

## ★ அம்பிகா

களை வறட்சிப் பிரதேசங்களுக்குக் கொண்டுவந்து பாசன நீரும் குடிநீரும் பெறுகிறுர்கள்.

## கால இடைவெளி விட்டு

## நீர் இறைக்க வேண்டும்

மூன்ருவதாக விவசாயிகள் சிந்திக்கவேண்டியது. கிணறுகளிலிருந்து 'பம்'கள் மூலம் நீர் எடுக்கும்போது கிணறுகளுக்கு ஊற்றெடுப்பதற்கு இடைவெளிவிடவேண்டும்.

நாலாவதாக ஏரிகள் குளங்களில் உள்ள நீர் ஆவியாவதைத் தடுப்பதற்கும் மழைவீழ்ச்சியைக் கூட்டுவதற்கும் போதுமான மரங்களை நாட்டவேண்டும்.

ஐந்தாவதாக சூரிய ஒளி மூலம் உப்பு நீரை நன்னீராக மாற்றலாம்- பணம் படைத்தவர்களும், படித்தவர்களும்- பல்கலைக்கழக மாணவர்களும்- விரிவுரையாளர்களும்- இவ்விடயத்தில் தமது சக்தியைப் பயன்படுத்தவேண்டும்.

மேலும் சென்ற வருடம் பருவமழை பிந்திப் பெய்தமையால் நெல் அறுவடை, வெங்காயம், உழுந்து உருளைக்கிழங்கு செய்கை போன்றவற்ருல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். எனவே வடிகால், வாய்க்கால் மூலம் வெள்ளம் கூடுதலாக ஏற்படும் காலத்தில் அதனைக் கடலுக்குள் செலுத்தவும், வெள்ளம் குறைந்த காலத்தில் சேமிக்கக்கூடியதாகத் திட்டங்கள் வகுத்துச் செயல்பட வேண்டும்.

இதுபோன்ற விடயங்களில் எமது பொறியியலாளர்கள். விஞ்ஞானிகள் பணம் படைத்தவர்கள், விவசாயிகள், அரசின் அமைப்புக்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

வெளிநாட்டு உழைப்பு உத்தியோகங்களை நாம் வெகு நாட்களுக்கு நம்பி வரமுடியாது. மேற்சொன்ன திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் எமது வருங்கால சந்ததிகள் நன்னீரைப்பெற்று பயனடைய வழி வகுக்கலாம்.


நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர
நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்.


போன்: 23199 தந்தி 'வைரம்'

T. C. C. குளியலறைத் தளக்கற்கள்
BATHROOM FLOOR TILES
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்
ரெருசோ மாபிள் நிலம்
அமைப்பவர்கள்
SPECIALIST IN TERRAZZO FLOORING
மின்சார வசதிஅற்ற இடங்களிலும்
ரெருசோ நிலம் அமைத்துக் கொடுக்கப்படும்
த ரெருசோ கொன்ருக்ரேஸ்
அன் கொன்சல்ரன்ஸ்
தலைமை அலுவலகம் :-
69, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
64, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சட்டநாதர் சிவன்கோவில் அண்மை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சிறுகதை

# மாற்றம்!




## சிவமலர் செல்லத்துரை

"அத்தான்!"

—எத்தனையோ விம்மல்களினிடையே அழைத்தாள் மாலதி நிர்மலன் அவளைத் திட்டித்தீர்ப்போம் என்ற கோபத்துடன் அவள் பக்கம் பார்வையைத் திருப்பினன்.

"கொழும்பு நோக்கிப் புறப்படும் கடுகதிப் புகையிரதம் இன்னும் சிலநிமிடங்களில் மேடைக்கு வரும்" என்ற அறிவித்தல் ஒலிபெருக்கியினூடாக வந்தது. எல்லோரும் அவசரப்படலானார்கள்.

"அத்தான்! ஏனத்தான் என்னிலை கோவிக்கிறீங்க அப்பிடியெண்டால் வாயைத் திறந்து ஒரு சொல்லுச் சொல்லுங்கோ, நீ இனி வேலைக்குப் போக வேண்டாமெண்டு...... நான் ஒரேயடியா வேலையை விட்டிட்டு நிண்டிடுவன்" என்று விம்மல்களிடையே முணுமுணுத்தாள் மாலதி.

நிர்மலன் அதிர்ந்துபோனன்.

'எனக்கு மாதாமாதம் இரண்டாயிரம் வந்தாலும் இருபது வருஷத்துக்கு முந்தி இருநூறு எடுத்தவனைவிட எத்தனையோ மடங்கு தொல்லைப்படுறன். அதுவும் தனிச் சீவியம் சீவித்தே இந்தப்பாடு. இவள் பாவி என்னடாவென்டால்...' என்று அவன் மனம் கலங்கியது. "சீ...மாலதி! நீ என்ன சின்னப்பிள்ளையா? இந்த மாதிரி இந்த இடத்தில் வந்துநிண்டு அழுறியே!" என்று தணிந்த குரலில் அதட்டினன் அவன்.

மாலதி கண்களை மெல்லச் சுழற்றிப் பார்த்தாள். சனங்கள் எல்லாம் தன்னையே பார்ப்பதைப் போலிருந்தது; அவர்களுடைய இக்கட்டான நிலையைச் சமாளிக்கவருவதுபோல் மாலைப்புகையிரதம் வந்தது,

"என் அன்பரே! மரணத்தால் கூடப் பிரிக்கமுடியாத நானும் நீங்களும் கேவலம், இந்தச்சதிகார உத்தியோகத்தினல் பிரிந்திடுவோமா? மூன்றே மாதம்பொறுத்திருங்க. தவணை விடுமுறையில் உங்களிடம் ஓடிவருவேன்" என்ற சிறிய விஷயத்தைச் சொல்வதற்குள பெரிய அழுகை அழுது தீர்த்தாள் மாலதி.

அவளுடைய அழுகையையும் எடுத்துக்கொண்டு புகையிரதம் புறப்பட்டு விட்டது. மனைவியையும் பிள்ளையையும் மாலைப் புகையிரதத்தில் ஏற்றி அனுப்பிவிட்டுத் திரும்பவும் தன அறைக்கு வந்தான். நிர்மலன் அவனுடைய மனத்தைப் போலவே அதுவும் வெறிச்சோடிப் போயிருந்தது. "சீ! என்ன வாழ்க்கை" என்று மனம் எந்தச் சிந்தனையுடனும் கலக்காமல் எங்கோ ஓடியது. அந்தச் சூனியத்தை அனுபவிக்க முடியாதவனக அறையைப்பூட்டிக் கொண்டு வெளியேறிய அவன் ஹோலைக் கடந்து கொண்டிருந்தபோது அவன் தங்கியிருக்கும் அந்த மாடி வீட்டின் கீழ்ப் பகுதியில் குடியிருக்கும் பெண்களெல்லாம் அங்கே கூடி இருந்து அரட்டையடிப்பதைக கவனித்தான். அந்தப் பெண்களுள் ஒருத்தியாக அமர்ந்திருந்த ஷீலா மட்டும் அரட்டையில் பங்கு கொள்ளாமல் எங்கோ கவனமாயிருப்பதையும் கவனித்தான்.

"என்ரை கொம்பனிக்கு இலங்கையின் எப்பாகத்திலும் கிளைகளில்லை. ஆனபடியால் எனக்கு இடமாற்றமுமில்லை. ஷீலாவோ ஒரு பெண் உபாத்தி. இங்கே ஏதோ ஒரு பள்ளிக்கூடத்திலை சிக்குப்பட்டிருக்கிறள்.அந்தப்பள்ளிப் பிள்ளைகளின் நலன்களை முன்னிட்டு அவளுக்கு இடமாற்றமில்லையாம் அப்ப அவன் பாடு... ஹூம்!" என்று அந்த ஷீலாவைப்பற்றி யோசித்த அவன் மனம் மறுபடி தன்னைப்பற்றி யோசித்தது.

அவனுக்கு ஆயிரக்கணக்கான சம்பளம். அழகிய மனைவி. அருமை மகன்... எல்லாம் இருந்து மென்ன, ஒன்றும் இல்லாத மாதிரி ஒரு நிலைமை அந்த மாடி வீட்டின் கீழ்ப் பகுதியில் ஒரு அறையுள் அவன் வாழ்வு முடங்கிக் கிடக்கின்றது. அங்கே அவனது தனிமை பரவிக்கிடக்கின்றது. அவனது அடுத்த அறையிலே மூன்று பெண்கள், அவர்கள் அறைக்குள்ளேயே சமைத்துச் சாப்பிட்டு உறங்கி விழித்து நாளைக் கடத்துவார்கள். அங்கேயுள்ளே ஏதோ ஒரு தொழில் நுட்ப நிறுவனத்[illegible]கின்றார்கள் அதையடுத்த அறையில் ஷீலா. அவள் அந்தப் பகுதியிலேயுள்ள பாடசாலையில் படிப்பித்து விட்டு வீட்டில் கனவுகண்டு காலத்தைக் கடத்துகின்றவள். அவளுக்குக் கணவனுகும் தறுவாயினுள்ள காதலன் ஒருவன். அவன் அங்கிருந்து நூறு மைலுக்கப்பால் ஏதோ ஒரு அதிகாரியாயிருக்கிறன். இவள அவனோடு சேர விரும்பி இடமாற்றமொன்றுக்கு ஆலாய்ப் பறக்கின்றாள். அதுவோ முயற்கொம்பாகி நிற்கின்றது. இரண்டு வாரங்களுக்கு முன்பு ஷீலாவுக்கு இந்த வருடமும் இடமாற்றமில்லை என்ற கடிதம் வந்தது. கடிதத்தைக் கையில் பிடித்தபடி ஷீலா அழுதாள். "ஐயோ! என்னுடைய இளமை வருடாவருடம் இடம்மாறிக்கொண்டு எங்கோ போகுது. நாங்கள் அநியாயமாக நினைவில் வாழ்ந்து கிழமாகிறோம். இந்த மேலதிகாரிகளோவெண்டால் இடமாற்றம் தாறுங்களில்லை. என்ரை காதலரோ "சாப்பிட்டால் ஒழுங்காச் சாப்பிட்டாகவேணும். இல்லாவிட்டால் உபவாசம் எனகிற கட்சியைச் சேர்ந்தவர். ஒன்றுக வாழமுடியாதவரை கல்யாணம் செய்யமாட்டேன். என்று மிரட்டுகிறர்.

"அவர் நலலவர். நல்ல காதலர். ஆனல் கணவரான பின் இப்படி இருப்பாரோ? எப்படியாவாரோ? நாலைந்து குழந்தைகளைப் பெத்த பிறகும் இதே அன்போடை என்னைப் பராமரிப்பாரெண்டால் உத்தியோகத்தை உதறித்தள்ளி விடுவன். ஆனல் மனிதனை மனிதன் நம்பமுடியாத காலமிது. அந்த மனிதரைநம்பி என் பற்றுக்கோடான உத்தியோகத்தைக் கைவிடமுடியவில்லையே!" என்று அழுதாள்.

அப்போது அங்கே கணவனுடன் தவணைவிடுமுறையைக் கழிக்க வந்து நின்ற மாலதியும் கூடவே அழுதாள் "ஷீலா! உன் நிலைமை கூட அவ்வளவுபரவாயில்லை. எட்ட இருக்கிற காதலர் எட்டியே இருந்திடட்டும் என்று மனதைச் சமாளிக்கலாம். ஆனல் என் நிலைமையைப்பார்! தின்னப்பழம் கொடுத்துப் பாதியிலே தட்டிப் பறிக்கிறமாதிரி இந்தக்கடவுள் ஒரு கணவரையும் கொடுத்து ஒரு உத்தியோகத்தையும் கொடுத்து என்னை இரண்டும் கெட்டானாக்கிவிட்டாரே!" என்று மாலதி அழுதாள்.

மாலதி பாவம்! அவா கல்வி கற்பிக்கும் பாடசாலையை 'முள்ளின் நடுவே ரோஜா' என்று வர்ணிக்லாம். அந்தப் பாடசாலையைச் சுற்றி வளவெல்லாம் முட்பற்றைகள் தான். அந்தப்பற்றையை செருப்பின் துணைகொண்டு தாண்டிப்பிரதான பாதைக்கு வரும்போது அந்தச்செருப்பு தன்னோடு ஒரு கூடைமுள்ளையும் சேர்த்து வைத்திருக்கும். சாடையான பயங்கரமுள்ள அந்தக்காட்டுப்பகுதியின் பாதையில் பலமணிநேரம் நின்றாலும்கூட அவளை எட்டி இரவல் கண்ணால் பார்க்கவும் மனுப்பிறவி வராது. எனவே பயத்தைப்பக்கத் துணையாக வைத்துக்கொண்டு பஸ்தரிப்பில் நின்று கொள்வாள். இப்படியாகஇனிமையான இளமை நாட்களின் ஒரு முழுநாளைத் துன்பமான பயணத்தில் சுழித்துக்கணவன் தங்கியிருக்கும் அந்தமாடிவீட்டிலுள்ள அறையை வந்தடையும்போது கூடவே அலுப்பும்வந்துவிடும். இப்படிப் பல சிரமங்களை அனுபவித்து ஒரு கணவனை அடைவதில் என்ன இலாபம் என்று அவள் அடிக்கடி வாழ்க்கையின் நயநட்டக்கணக்கைப் பார்ப்பாள், "சீ! இதுவும் ஒரு வாழ்வா?" என்று மனம் குமுறும் அதேவேளை கணவன் பக்கமும் பிழையில்லை என மனம் கூறும்.

அவளுடைய கணவன்... அதாவது நிர்மலன் ஒரு கூட்டுத்தாபன ஊழியன் அரசாங்க உத்தியோக காரரை விட அவனுக்கு நாளாந்தம் வேலைநேரம் அதிகம். போதாததற்குச் சனிக்கிழமைகளிலும் வேலை. அதுமட்டுமல்ல அவன் பெரிய அதிகாரி என்பதால் வேலைப்பராக்கும் அதிகம் என்று சொல்வான். ஆனபடியால் அவனுக்கு மனைவியைத் தேடிக் கொண்டு போய்ச்சங்கடப்பட முடியாது. அவளாகத்தேடி வரும்போது கண்டு கொள்வான் அவ்வளவுதான். ஆனபடியால் இடையில்வரும் சனி ஞாயிறு போன்ற விடுமுறையில் இருவரும் சந்திப்பதில்லை. தவணைவிடுமுறையில் மட்டும் தான் இருவரும் சந்திப்பார்கள். தவணை விடுமுறை முடியும்போது அழுதழுது பிரிவார்கள். ஒருவருடம் முன்புவரை இப்படித்தான் நடந்தது இப்போதெல்லாம் அவர்களின் மகன் அமலனும் கூடவே அழுகிறன். இப்படியான விரக்தியால் இருவரும் பிரிய நேரிட்டால்... "பாவம்! பையன்" என்ற எண்ணம் இருவர் மனத்தையும் அரிக்கத் தொடங்கிவிட்டது. இந்த விபரமெல்லாம் இலாகாப்பெரியார் ஒருவர் காதில் போட்டால் அவர் இரங்கி இடமாற்றம் தந்து இணைத்துவைப்பார் என்று சிலர் சொன்னர்கள்.

நிர்மலன் போய் அந்தப் பெரியாரைச் சந்தித்து விபரமெல்லாம் அவர் காதிலோதிக் கண்ணீர் மல்கவைத்து அவர் அப்படிக் கசிந்துருகிய களைப்பைப் போக்கக்கொஞ்சம் தண்ணீரும் வாங்கிக் கொடுத்து விட்டுத்தான் வந்தான். அவன்

அப்படி அலுவல் பார்த்துவிட்டுப் போனகிழமைதான் வந்தான் அவன்பின்னலேயேமாலதிக்குக் கடிதம் வந்துவிட்டது அதிலே இந்த வருடம் யாருக்கும் இடமாற்றமில்லையாம் என்றிருந்தது. ஏனென்றல் அவர்களுடைய பள்ளிப்பிள்ளைகள் பாவங்களாம்? அதை மீறி வற்புறுத்திக் கேட்பவர்களிடம் "நீங்கள் வேலைக்கு வந்தபோது இலங்கையின் எப்பாகத்திலும் வேலை செய்யத் தயார் என்று சொல்லிவிட்டு வந்தவர்களல்லவா? இப்போ நாங்க சொல்றஇடத்தில்வேலை பார்க்க மறுக்க முடியுமா?" என்று பெரியவர்கள் கோபங் கொள்ள "நாங்கள் கேட்கிற இடங்களும் இத் தீவுக்குள் தானேயருக்கிறது" என்று சிறியவர்கள் முணுமுணுக்க இந்தப்பொதுநாடகம் தொடர்கிறது. "ஐயையோ! நானும் என்னைப்போல பெண்களும் கொஞ்சம் வாழ்க்கைக்குவசதியாயிருக்கட்டுமே என்றுஉத்தியோகத்துக்குப் போனல் இவர்கள் எங்கள் குடும்பத்தைப் பிரித்து எங்களை வாளாவெட்டியாக்குகிறர்களே என்றுபகல் முழுவதும் அழுதுவிட்டுத்தான் மாலதி மாலைப்புகையிரதத்தில் ஏறினள். அவளைப் பிரிந்து திரும்பிவந்து தனியறையைப் பார்த்து அலுத்துப்போய் மீண்டும் கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பியநிர்மலனுக்குக் கோபம் கோபாக வந்தது.

'பழைய காலத்தில பெற்றரையும் உற்றரையும் கேட்டுக கல்யாணம் செய்ததுபோல் இனிமேல் செய்யுறது பிழை. இந்த இலாகாப் பெரியவங்களை ஒரு சொல் கேட்டுச்செய்யுறதுதான் சரி'- என்று தனக்குத் தானே கோபமாக முணுமுணுத்தவன், மறுகணம் "ஆனல் உங்கள் மாலதியின்ரை பெரியவங்கள் ஒரு நாளும் அடுத்தவங்களை உறப்படவிடமாட்டாங்கள் உங்களுக்குக் குடும்ப வாழ்வின்ரை மகத்துவம் தெரியாது. அதோடை உவங்கள் ஏதோ ஒரு குடும்பத் திட்டச் சங்கத்தின்ரை கைப்

(12ம் பக்கம் பார்க்க)

## நீள் பயணம்

பயங்கரங்கள் போக்கவெழும் பயங்கரத்தின்
கூக்குரலோ
தயங்குமிருட் பாதைதனிற் தான்துணையோ சாத்தான்கள்!
மயங்குமன நோயகற்ற மந்திர உச் சாடனங்கள்
ஜெயங்கொண் டயலொளிர ஜீவபயம் நீள்பயணம்

ஆந்தையயல் நின்றலறி அச்சுறுத்தும் நீதிகெட்டு
சாந்தமனம் ஏக்கமுறச் சாக்குருவி ஓலமிடும்
மீந்ததுயர் நல்லிதயம் மிகவருந்த ஆட்சி செய்யும்
ஏந்தவொளிச் சுடர்தேடி இருட்டினிலே நீள்பயணம்.

ஊளையிடும் நாய்களினல் உறக்கமில்லை காவலில்லை
வேளையொரு பேரிரைச்சல் விடிவுவரை ஓய்வுஇல்லை
சூழியமர் ஊர்வலங்கள் சுதந்திரத்தின் மௌனவலம்
பாழிருட்டில் அச்சமிகப் பயங்கரத்தில் நீள்பயணம்

தாழ்ந்தநிலை மேலோங்கத் தளராத உழைப்போடு
சூழ்ந்தவிருள் நீக்கநமைச் சுற்றியெங்கும் ஏற்பாடு
ஆழ்ந்ததுயில் விட்டெழும்ப அயலிலெங்கும் கூப்பாடு
வீழ்ந்தமனம் தான்களிக்க விடிவுக்காய் நீள்பயணம்

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரினிலே ஒரு பாலித்தீவு

# பாலித் தீவினர் களவென்பதை அறியாதார்

(முன் தொடர்ச்சி)

பாலியின் உலகிலே மிகவும் சிறந்த அம்சம் நேர்மை கடைகள், வீடுகளில் அநேகமாக கதவுகள் சாத்துவதில்லை. விலையுயர்ந்த சிலைகள் உள்ள சில கடைகளில் சில வேளைகளில் கடையில் ஒருவருமில்லாவிட்டால் கடைக்காரர் வரும்வரையும் வாங்கவந்தவர்கள் காத்திருப்பார்கள் களவு என்பது அவர்களுக்கு தெரியாது. எல்லாப் பொருளும் எங்களுடையதென்று மனதில் படுவதால் நான், என்னுடையது என்ற எண்ணங்கள் மனதில் உதிப்பதில்லை இதனால் திருட்டுக்குமனதில் இடமில்லை. திருவிழா நாட்களுக்கு முதல் இரவு சந்திகளிலுள்ள சிலைகளுக்கு விலையுயர்ந்த பட்டுக் குடைகள் சிலைகளுக்கு மேல் கட்டிவிடுவார்கள் ஒருவரும் இக்குடைகளை திருடுவதில்லை. இந்தியா, இலங்கையைப் போல் இங்கும் கோவில்களில் பட்டுக்குடை பாவிக்கிறார்கள். பாலிப்பட்டுக்குடை யொன்று ஞாபகத்திற்கு வாங்கினோம் இக்குடையை யாழ்ப்பாண அத்தியடி பிள்ளையார்கோவிலுக்கு கொடுத்தோம் இதை பிள்ளையாருக்கு பிடிக்கிறார்கள். இவர்கள் நேர்மையைப்போல் பிறநாட்டாரை உபசரிப்பது இன்னுமொரு சிறந்த குணம். ஒவ்வொரு முறையும் நாங்கள் பாலி சென்றால் தலைநகரமாகிய டென்பசாரில் (பசா என்பது இந்தியாவில் உபயோகிக்கும் சொல் பஜார் இருக்கும் சந்தைக்கு போவது வழக்கம். எங்களை கண்டதும் யாராவது வியாபாரம் செய்யும் பெண் தனது கடமையை அடுத்த கடை பெண்ணிடம் ஒப்படைத்துவிட்டு எங்களைக்கூட்டிக்கொண்டு கடை கடையாக காண்பித்து நாங்கள் வாங்க வேண்டிய பொருள்களை வாங்கிக்கொடுப்பார் எங்களுக்கு இந்தோனீஷியமொழி நன்கு தெரிந்ததால் உரையாடிக்கொண்டேபோவோம் கடைசியில் எங்கள் வண்டியில் பொருள்களை ஏற்றிவிட்டு விடைபெறுவார். இப்பெண்மணி முதல் முறை நாங்கள் போனபொழுது விடயம்தெரியாமல் இறுதியில் பணம் கொடுக்க மறுத்தது மல்லாமல் இப்பெண் கவலையும் பட்டார். இப்படி உதவி செய்வது தங்கள் வாழ்க்கைமுறையில் ஒன்று என்று கூறுவார்கள். பின் பலமுறை சென்றபொழுது பணம் கொடுக்க எத்தனிக்கவில்லை. உலகிலே வேறு எந்த நாட்டில் தன் கடையைவிட்டுவிட்டு முன் பின் தெரியாத பிறவூர் காரர்ளுக்கு இப்படி உதவி செய்வார்கள் இன்னுமொரு நல்ல அம்சம் எல்லா மக்களும் ஒற்றுமையாயிருப்பார்கள் கிராமங்களில் எல்லா வாழ்க்கை முறையிலும் ஒற்றுமையைக் காணலாம். நடனத்திலும், விவசாயத்திலும், கோவில் தரிசனங்களுக்கு செல்லும் பொழுதும், வேறுபல வாழ்க்கை முறையிலும் ஒற்றுமையை காணலாம். குளிக்க ஆற்றுக்குபோகும்போதுகூட்டமாக ஆண்களும் பெண்களும் செல்வார்கள் எல்லா உடையும் களைந்து கரையில் வைத்துவிட்டு ஆண்களும் பெண்களும் ஆற்றுக்குள் இறங்கி குளிப்பார்கள். இவர்கள் தலைமுறை தலைமுறையாக இப்படி செய்வதால் அதில் ஒன்றும் வெட்கப்படுவதற்கோ அல்லது கூச்சப்படுவதற்கோ இடமில்லை ஒருமுறை நானும் மனைவியாரும் பாலிக்கடற்கரைக்கு சென்றிருந்தோம். அப்பொழுது கரையில் இருபது மக்கள் வரையில் கூடியிருந்தார்கள். பார்க்கும்பொழுது எங்கள் அந்தியட்டிபோல தோன்றிற்று. வினவினதும் அதே அந்தியட்டி என்று கூறினார்கள். இறந்த கணவனுக்கு மனைவியார் கிரியை செய்துகொண்டிருந்தார். எல்லாம் முடிந்ததும் படைத்த சில பொருள்களை கடலில் எறிந்துவிட்டு குளித்துவிட்டு வரும்படி இப்பெண்ணுக்கு கூறினார்கள். அந்தப்பெண் பொருட்களை கடலில்வீசிவிட்டு எல்லா உடையையும் அந்த இடத்திலே களைந்துவிட்டு கடலில் குளித்த பிறகு உடுப்பை கடற்கரையிலே அணிந்து கொண்டுவந்தார். பெண்ணுக்கோ நாணமிருந்ததாக தோற்றவில்லை. அங்கே கூடியிருந்தவர்களுக்கும் இந்த முறையில் ஒரு கூச்சம் இருந்ததாக தோன்றவில்லை ஆனால் எனக்கும் மனைவியாருக்கும் ஒரு விதமாகவிருந்தது.

நா. மாணிக்க இடைக்காடர்

தகனமிடுவதில்

புதுமை

பாலியில் இறந்தவர்களை தகனமிடுவது ஒருபெரிய திருவிழா. அமெரிக்காவிலிருந்தும் இதை பார்க்க வருவார்கள். இறந்ததும் பொது மக்களாயிருந்தால் கிரியைக்கு பிறகு பிணத்தை மண்ணில் புதைப்பார்கள். ஒரு தனவந்தர் இறந்ததும் புதைத்த பிணங்களை வெளியே எடுத்து ஒரு பெரிய தேரில் தனவந்தரின் பிணத்துடன் தாளவாத்தியத்துடன் ஊர்வலமாக கொண்டு போய் சுடலையில் தகனம் செய்வார்கள். தேர்போன்ற இந்தமரமேடையை மூன்னூறு நானூறு ஆட்கள் சுமந்து கொண்டுபோவார்கள். இதன் தாற்பரியமென்ன வென்றால் பொது மக்களுக்கு செத்த வீட்டுச்செலவில்லாமல் கிராமத்து தனவந்தரின் செலவில் சமாளிப்பதே!

உலகிலே உல்லாசபயணிகளுக்குபாலிஒரு சுவர்க்கம். ஒவ்வொரு விமானமும் இவர்களை கொண்டுவரும். இவர்களுக்கு பாலியின் இயற்கைவளம் பொருந்திய கிராமங்கள். நடனம், ஓவியம், சிலைகள், வாழ்க்கைமுறைகள் கவர்ச்சியாக விருக்கின்றன. முக்கியமான பிரயாணிகள் அமெரிக்காவிலிருந்துவருவார்கள் வெளியிடங்களிலிருந்து வருவோரின் கெட்ட பழக்கங்களிலிருந்து அகப்படாமலிருப்பதற்கு அரசாங்கம் மிகவும் விழிப்பாகவிருக்கிறது. பாலி ஆளுநரை நான் சந்தித்தபொழுது இதுவே தனது முதல் கடமையென்றார் (priority nunber 1) யாரும் வெளிநாட்டார் ஒரு முறைதவறி நடந்தால் உடனே விமானநிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு முதல் விமானத்தில் அனுப்பிவிடுவார்கள். பாலியை ஒருமுறை பார்த்த பிறநாட்டார் பணவசதியிருந்தால் மறுபடியும வருவார்கள்.

இந்தோனீஷியாவில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் குறைந்தது ஒரு பல்கலைக்கழகமுண்டு. பாலி பல்கலைக்கழகத்தின் பெயர் உதயான (UDAYANA) பாலிமொழிக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது நானும் பாரியாரும் உதயானத்திற்கு சென்றிருந்தோம் மலேசியாவில் இந்து சமயத்தைப்பற்றி மலேசியா அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு நூல் இருபது ஆண்டுகளுக்கு முன் எழுதியிருந்தேன். இது மலாய் மொழியில். இதன் பிரதிகள் இரண்டும் ஆங்கில மொழியில் எல்லா உபநிஷத்தன் ஒரு பிரதியும் அன்பளிப்பாக கொடுத்தோம். நாங்கள் என்ன கைம்மாறு செய்ய வேண்டு[illegible]ந்தர் கேட்டதற்கு முழு உபநிஷத்தையும் அவர்கள் மொழிபெயர்த்து நூல்வடிவத்தில் பிரசுரித்தால் எங்களுக்கு போதுமென்றேன்.

உல்லாசப் பிரயாணிகளின் வருகையால் சிலர் தங்கள் வருவாயில் ஒருபகுதியை இதன் மூலம் பெற்றுக் கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்களின் முக்கிய தொழில்விவசாயம். இதில் நெல் விவசாயம் முதல் இடம் பெறும். கோப்பிச் செடி பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் உண்டு. கோப்பிச் செடியிலிருந்து கோப்பி பெறுகிறார்கள். அதோடு காற்று வேகமாக வீசும் மலைப்பகுதிகளில் இச்செடியை காற்றின் வேகத்தை அடக்குவதற்கும் (as wind belts) உபயோகப்படுத்துகிறார்கள். மாடு, ஆடு, பன்றி, கோழி, வாத்து வளர்க்கிறார்கள் ஐம்பது அறுபது வாத்தை ஒரு சிறு பையன் வயல் பக்கங்களுக்கு உணவுக்கு கூட்டிக்கொண்டுபோய் பிறகு வீட்டுக்குத் திருப்பிக்கொண்டு வருவதைப் பார்த்தால் இதுவும் ஒரு கலைபோல் இருக்கிறது ஒரு நீட்டு மூங்கில் நுனியில் ஒரு சிறுசிவப்புத் துணியைக் கட்டி நிலத்திலிருந்து மூன்று அடி உயரத்தில் நீட்டிப் பிடிக்க எல்லா வாத்தும் துணிக்குப் பின்னால் ஒழுங்காக செல்லும். பாலி ஒரு தீவு ஆகையால் சுற்றியிருக்கும் கடலில் மீன்பிடிப்பார்கள்.

சந்தோஷமாக வாழ்வதற்குத் திருப்தியே முக்கியம். இதை மகாபாரத்தில் நச்சுப் பொய்கை அருகில் தருமபுத்திரருக்கும் அசரீரியாய் வந்த யமதேவனுக்கும் இடையில் நடந்த உரையாடலில் தெளிவாகத்தெரிகிறது இதையறிந்தோ வேறு காரணமோ பாலி மக்கள் வாழ்க்கையில் மிகவும் திருப்தியாக விருக்கிறார்கள். அடுத்த வீட்டுக் காரரிடம் ரீ வி. (T. V.) பெட்டி இருக்கிறது; எங்களிடம் ஒன்று இல்லையேயென்று குத்திமுறிவதில்லை இருக்கும் வசதிகளுடன் திருப்தியாக வாழ்கிறார்கள். உலகம் மெச்சக் கூடிய கலைகளை தொடர்ந்து வளர்க்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்து சமயத்திற்குத் தாய் நாடான இந்தியாவுடன் அதிகம் தொடர்பில்லாமல் சமயத்தையும் கலாசாரத்தையும் காப்பாற்றி வருகிறார்கள். உலகம் இருக்கும்வரைக்கும் பாலி மக்களிற் சமயமும் கலாசாரமும் இருக்கும் நேருஜீ கண்ட பாலி என்றென்றும் அப்படியேயிருக்கும். நாம் செய்த புண்ணியம் இந்தச் சுவர்க்கத்தைத் தரிசிக்கக்கூடியதாயிருந்தது.


## வெளிநாடு செல்வதற்கு

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை (வங்கியின் கட்டணத்தில்)
- விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக் கொடுக்கப்படமாட்டாது. இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை.)

இன்றே நாடுங்கள்

**மக்கினேன் டிரவல்ஸ் லிமிட்.**

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways) பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154


## கைலாசபதி கலையரங்கில்

### கானமழை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே புதிதாக அமைக்கப்பட்டுள்ள கைலாசபதி கலை அரங்கம் இவ் ஆண்டுத் தொடக்கத்திலே செயற்படத் தொடங்கியதைத் தொடர்ந்து பல கலைநிகழ்ச்சிகள் இம்மண்டபத்திலே நடைபெற்று வருகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக விளங்கும் இராமநாதன் நுண்கலைப்பிரிவைச்சேர்ந்த ஆசிரியர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இதில் அடங்குவன. இக்கலை நிகழ்ச்சித்தொடரில், சங்கீத பூஷணம் எம். வி. என். நவரத்தினம் அவர்களின் இன்னிசைக்கச்சேரி இம்மாதம் நான்காம் திகதி நடைபெற்றது. சுமார் ஒரு மணித்தியாலயம் நடைபெற்ற அவரின் கானமழை சம்பிரதாய பூர்வமான ஒரு கர்நாடக இசைக்கச்சேரி யாகும்.

முழுமையான

இன்னிசை விருந்து

'இசையால்' எனத்தொடங்கும் இசைப்பாடலுடன் ஆரம்பித்துத் திருப்புகழுடன் முடிவுற்ற இவ்இசைக்கச்சேரி குறுகிய நேரத்தில், அதாவது ஒரு மணிநேரத்தில், நிகழ்த்தப்பட்ட முழுமையான ஓர் இன்னிசை விருந்தாகும் இதிலே பெருமளவு தமிழிலும், சிறிதளவு தெலுங்கிலும், ஹிந்தியிலும் பல்வேறு ராக தாள அமைப்புகளைக்கொண்ட ஒன்பது இசை உருப்படிகள் இடம் பெற்றன. 'இசையால்' எனத் தொடங்கும் ஊர்மிகிராகப்

**வி. சிவசாமி**

பாடலுடன் கச்சேரி ஆரம்பமாயிற்று தொடர்ந்து இடம் பெற்ற பியாகட ராகத்தில் அமைந்த 'சிதம்பரம்' எனத் தொடங்கும் நந்தனாரின் கீர்த்தனையுடன் கச்சேரி நன்கு களை கட்டிவிட்டது. நந்தனார் சிதம்பரம் செல்லவிருந்த ஆவலையும் அத்திருத்தலச் சிறப்பையும் விவரிக்கும் அக்கீர்த்தனையின் பொருளைக் கலைஞர் தக்க பாவங்களுடன் இசைத்துக் காட்டினார் இதைத் தொடர்ந்து ஆநம்மை'எனத் தொடங்கும் கீர்த்தனம் நன்கு இசைக்கப்பட்டது தொடர்ந்து இடம்பெற்ற தியாகராஜ சுவாமிகளின் 'நின்னுவினா' எனும் தோடி இராகக்கீர்த்தனையும் 'ராக ஸுதா' எனும் ஆநதோளிகா இராகக் கீர்த்தனையும் நன்கு குறிப்பிடற்பாலன. முன்னையதில் இவ் இசைவித்துவான் ஏற்படுத்திய ராக ஆலாபனை மிகக்கம்பீரமாகவும், பாவப்பொலிவும் கொண்டிருந்தது. இவற்றின் பின் குமரகுருபர சுவாமிகளின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் உள்ள "தொடுக்கும் கடவுட்பழம் பாடல்" எனத் தொடங்கும் சிறந்த பாடலைக் கலைஞர் மெய்மறந்த நிலையில் அதற்குரிய இசைச்சிறப்புடன் பாடினார். அவ்வேளையிலே தம்

(12ம் பக்கம் பார்க்க)

## தேவர்க்கும் இனிய தமிழ்

மூவேந்தர் காத்த தமிழ்
முடிமன்னர் படித்த தமிழ்
பாவேந்தர் வளர்த்த தமிழ்
பருவமகள் போன்ற தமிழ்

வைகையிலே தவழ்ந்த தமிழ்
வாரியிலே மிதந்த தமிழ்
பொய்கையிலே பூத்த தமிழ்
பூவையர்கள் பேசு தமிழ்

காவியங்கள் தந்த தமிழ்
கவிஞர்களைப் பூத்த தமிழ்
ஓவியங்கள் போன்ற தமிழ்
ஔவையார் தந்த தமிழ்

நாவல்கள் சொல்லு தமிழ்
நாவலர்க்கு ஏற்ற தமிழ்
ஏவல்கள் இட்ட தமிழ்
ஏருழவர் பாடு தமிழ்

விஞ்ஞானம் கண்ட தமிழ்
வீரத்தில் சிறந்த தமிழ்
மெய்ஞ்ஞானம விண்ட
தமிழ்
மேதினியில் சிறந்த தமிழ்

தேவாரம் இசைத்த தமிழ்
தெம்மாங்கு பாடு தமிழ்
பூவாரம் போன்ற தமிழ்
புலவர்கள் போற்று தமிழ்

மந்திரத்தில் வல்ல தமிழ்
மங்கையர்க்கு நல்ல தமிழ்
தந்திரத்தில சிறந்த தமிழ்
தாரணியில் விளங்கு தமிழ்

முத்தான மூன்று தமிழ்
மூதறிஞர் படித்த தமிழ்
பத்தருக்கு மிசைந்த தமிழ்
பாமரரை ஈர்த்த தமிழ்.

— முருகவே. பரமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

நீண்ட நாட்களுக்குப் பின் சுபா ஒரு கடிதம் எழுதியிருந் தாள்

மிக நீண்ட கடிதமது.

பழக்கப்பட்ட கையெழுத்தி னூலானது எனக் கண்டதும் அவன் மனம் கனக்கத் தொடங்கிவிட்டது

இனமறியாத பயஉணர்வு

''என்ன எழுதியிருப்பாள்?'' என்பதை மனம் கேட்டுக் கொண்டே இருந்தது.

8-7-84 வார இதழில்
வெளிவந்த
என் கே. துரைசிங்கம்
எழுதிய
'எதற்காகச் சீதனம்,
என்ற
புதுக் கவிதைக்கு
ஒரு பதில்

## தருகிறோம்

## சீதனம்

கருப்பு தின்னக் கைக்கூலி
உங்களுக்கு நாம் தருவோம்
காளையர் நீங்கள்
சொகுசாய்க் காற்ருய்ப்
பறக்க
ஒரு ஹொண்டாவும்
கொண்டே வருகிறோம்
ஆம்! கொத்தாய்க் காசும்
கொண்டே வருகிறோம்
எம் பெற்றோர்
தம் உதிரத்தால்
உழைத்தவற்றைத்
தருகிறோம்!
எதற்கென்ருல்,
எமக்கு மூன்று வேளை சோறு
போட
மொத்தமகாவும் மூலதன
மாகவும்
தந்தே வருகிறோம்.
திருமணமாம்—
சீதனமாம்!

—சீதா.பொன்னையா

## பேய்

அவள் உங்களைப் பார்க்கி
ருள்
அந்தப் பார்வையில்
ஒரு வித விரக்தி தெரிகிறது
ஆனுல் நீங்களோ
அந்தப் பார்வையின்
கொடூரத்தை உணரவில்லை
மாருக
நீங்கள் அவளைப் பார்த்துப்
புன்னகை வீசுகிறீர்கள்
பதிலுக்கு
அவளிடமிருந்து
புன்னகை கிடைத்தால்
நீங்கள் பொன்னகை
கேட்கிறீர்கள்

அவளது பார்வையிலிருந்து
வீசும் தீக்கற்றைகள்
நிச்சயம்
ஒருநாள் உங்களை எரிக்கும்
இத் தீச்சுவாலைகள்
நீங்கள் எண்ணுவது போல்
இதுவரை கட்டடங்களை
எரித்த
தீப்பிழம்புகள் அல்ல

அவளது பார்வையிலிருந்து
அவளுக்குப்
பேய் பிடித்துவிட்டதென
நீங்கள் நினைக்கலாம்
உங்கள் எண்ணத்தில்
எந்தவித தவறுமில்லை
ஏனெனில்
அவளுக்குப் பேய்தான்
பிடித்துள்ளது
ஆனுல்
அது சாதாரண பேயல்ல
அவள்
சீதனப் பேயால்
பிடித்து உலுப்பப்படுகிருள்

—கரம்பொனூர்
ரமேஷ். வேதநாயகம்

''அன்புள்ள சுபே...'' என்றே அவள் விளித்திருந் தாள்.

இதுவரை அவள் அவனை ''அத்தான்'' என அழைத்தது மில்லை. கடிதங்களில் விளித் தெழுதியதுமில்லை

பல்கலைக்கழகத்தில் ஆரம் பத்தில் பழகும்போது பெயர் சொல்லி அழைத்து வந்தபழக் கம் போலும்...

''சுபா பழைய சுபாவாகவே நின்று எழுதுகிருள். உங்களுக் குரியவளாகவே நின்று எழுது கிருள்

நாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு உறவைப் பகிர்ந்துகொண்டு பழகி இன்று பல ஆண்டுகளை கடந்து வரு கின்ரேம். இந்த நிலையிலும் நான் உங்களைத்தான் மணக் கப்போவதாக வீட்டாருக்கு சொல்லிவிட்டேன்.

என்னிலே முழுநம்பிக்கை யையும் வைத்திருக்கும் பெற் ருர் உங்களை யார் என்ரே என்ன நிறமென்ரே? இல்லை நான் மாப்பிள்ளை பார்த்துத் தான் சொல்லுவனென்ரே? ஏதும் கூருமல் என் விருப்பப் படியே ஒமென்று சொல்லிவிட் டனர்.

என் வாழ்வில் ஏதும் தடங் கல் ஏற்படுமென்று பயந்தி ருந்த எனக்கு எவரும் அந் தப் பயத்தைத் தரவில்லை'

எங்கள் அப்பாவையும் அவர் குணத்தையும் உங்களிடம் எத் தனையோ முறை சொல்லியிருக் கிறேன்!

ஆரம்பத்தில் என் முடிவை எதிர்த்த அம்மாவைக் கூட அப்பா பெட்டிப்பாம்பாக்கி விட்டார். இந்த முடிவைத் தான் அக்காவோ அண்ணுவோ ஏற்கப்போகிருர்கள்.

உங்கள் குடும்பப் பிரச்னை யைக்கூட அப்பாவிடம் சொல்லிவைத்தேன். க்ல்யாண மாகாது இருக்கிற உங்கள் அக் காவுக்காக மிகவும் வருத்தப் பட்டார் அனுதாபப்பட்டார்.

இப்படி வருத்தப்படுகின்ற அப்பா என்கல்யாணம் தடைப் பட்டிருப்பதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டார். அவர் அதையும் கண்டிப்பாகவே சொல்லிவிட்டார்.

சுபா... எப்படியும் உன் கல் யாணம் இந்த வருடத்துள் நடந்துவிடவேண்டும் இல்லை யென்ருல் தன் இஷ்டப்படி தான் கல்யாணம் நடக்கும் என்று.

அவரது கண்டிப்பு நிறைந்த அழுத்தம் திருத்தமான இந்த சொல்லை மீறும் நிலை இனி எனக்கு இல்லை.

நீங்களே யோசித்துப் பாருங் கள்.

என் இஷ்டப்படி நடக்க விட்டு என் சொல்லுக்கே மதிப்பளித்துவந்த அப்பாவின் சொல்லை நான் இனிமேலாவது கேட்டாக வேண்டியது என் கடமை, இல்லையென்ருல் அவர் என்னை ஒருமகள் ஸ்தானத்தில் வைத்துப் பார்க்கமாட்டார்.

இந்த பெரிய உள்ளத்தை மதித்து நடக்கவேண்டுமென்று நான் சதா தியானித்துக் கொண்டிருக்கின்றேன் இதற்கு நீங்களும் சட்டாயம் ஒத்து ழைத்தே ஆகவேண்டும்.

எனது நிலையை இதைவிட தெளிவாக இனிச்சொல்ல முடி யாது எனவே எங்கள்விடயம் உங்களின் முடிவில் தான் முழுக்க முழுக்க தங்கியிருக் கின்றது. எனவே கூடிய சீக் கிரம் ஒரு நல்ல முடிவை நீங் கள் கண்டாகவேண்டும்.

# தொடர் நவீனம்

சுபா மிகவும் தாழ்மையுடன் தான் வேண்டுகோளை சமர்ப் பித்திருந்தாள்.

நீண்டநாள் போராட்டத் தின் பின் தான் அவள் இந்தக் கடிதத்தை எழுதியிருந்தாள்.

...இந்த வருடத்துள் நீங்கள் நல்ல ஒரு முடிவுக்கு வரவேண் டும். இல்லையென்ருல் அப்பா வின் முடிவுதான் என் முடிவா கவும் இருக்கும். அப்பாமிகவும் கண்டிப்பானவர்...

இந்த வாசகத்தை கடிதத் தில் அழுத்தமாக எழுதியிருந் தாள்.

இந்த வாசகம் அவர்மனதை புண்படுத்தி விடுமோ என்று கூடப்பயந்திருந்தாள்.

''தமக்கை இருக்க தம்பிக்கு கல்யாணமாம், அதுவும் பத் துப் பன்னிரண்டுவயது குறைந் தவருக்கு!''

''படிக்கேக்க ஒரு தொடுப் பாம்.''

இப்படி காறி உமிழும் சமு தாயம் வழுக்கி விழுந்தவனை நிச்சயம் கைதூக்கி விடாது. மேலும் மிதிக்க துடிக்கும். அதில் இன்பம் காணத் துடிக் கும்.

இந்த அவல சமூகத்தில் பிறந்த இந்திரன் சுபாவின் கடிதத்தை எப்படி ஏற்பான். அவன் குற்ற உணர்வு அவனை நெருடிக்கொண்டே இருந்தது.

தான் காதலித்த ஒரு பெண்ணை காலமெல்லாம் இப் படி காத்திருக்க வைத்திருப் பது.. தான் செய்த தவறு என்று ஒப்புக் கொள்கிருன்.

...இந்த வருடத்துள் நீங்கள் நல்ல ஒரு முடிவுக்குள் வர வேண்டும், இல்லையென்ருல் அப்பாவின் முடிவுதான் என் முடிவாகவும் இருக்கும். அப்பா மிகவும் கண்டிப்பானவர்

அழுத்தமாக எழுதிய அந்த வாசகத்தை அவன் திரும்பத் திரும்பப் படித்துக்கொள்ளு கின்ருன்.

கண்களை மூடிக்கொள்கி ருன்... என் அக்காவின் திரு மணம் இந்தவருடத்துள் நடக் கப்போவதுமில்லை சுபாஎன்னை அடையப் போவதுமில்லை. இவை சாத்தியப்படக்கூடிய சூழ்நிலை அவன் குடும்பத்தில் இருப்பதாகவும் தெரியவில்லை

அவன் நினைவினுள் சுபா எழுதிய அந்தக் கடிதம் கசங் கிக்கொண்டே இருக்கிறது.

தோட்டமொன்றே தன் தேட்டமென்று உழைத்துவந்த சிற்றம்பலத்தார் ஏதோ சன்னி கண்டவர் போல் பாயில் படுத்துவிட்டார்.

இராசம்மா நாடிக்கு கை குடுத்தவளாய் அவர் தலை மாட்டிலேயே கிடக்கிருள்.

பெண் பிள்ளைகள் இரண்டும் தான் வேண்டிய சமயலைச்செய் தாலும் தகப்பனுக்கு பத்தி யம் சமைத்தாலும்... அந்த தர்மவானுக்கு இப்படியொரு வருத்தமோ... வலம் சலமே போகுதில்லையாம். சாப்பாடு கொடுக்க முடியாதாம். அயலவர்கள் கதைத்துக்கொள் கிருர்கள் ஏலாத உடம்போ டும் பார்வதி தமையனைப் பார்த்து விடவேண்டுமென்று ஒன்றுக்கு இரண்டு மூன்று முறை வந்து பார்த்துவிட் டாள்.

அவனை உயிரோடு பார்த்து ஆறுதலாய் ஏதும் கதைக்க வேண்டுமென்ற ஆசை.

சகுந்தலா சுபேந்திரன் கூட தாயை ஆஸ்பத்திரிக்கு கூட் டிச்சென்று மாமாவை காட்டி யிருக்கிருர்கள்.




இரண்டு மூன்று நாட்களாக மூச்சுப்பேச்சின்றி ஊசலாடிய அந்த உடம்பு நிரந்தரமாக விடுதலை பெற்றுவிட்டது.

இந்திரனே எல்லாவற்றை யும் முன்னின்று கவனித் தான் மாமா ஏதும் தனக் கென்று சேர்த்து வைத்திரார் என்பது அவனுக்குத் தெரி யும். செலவுகள் யாவற்றை யும் அவனே ஏற்றுக்கொண் டான்.

இராசம்மா தலைதலையாய் அடித்து குழறிக்கொண்டான். பிள்ளைகள் இரண்டும் அப்பா அப்பா என்று கதறிக்கொண் டார்கள். பார்வதி, சகுந்தா கூட தங்கள் கூடாத விதியை நொந்து அழுது கொண்டார் கள்.

இரு குடும்பங்களைப் பொறுத்த வரையிலும் சிற் றம்பலத்தாரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது தான்.

இரண்டுபிள்ளைகள் கொண்ட அவர் குடும்பம் இனி எந்த வருமானத்தைக் கொண்டு சீவனம் நடாத்தப் போகிருர் கள்.

ஆலோசனையுடன் நின்று விடும் தங்கை குடும்பத்தின் ஆள் உதவியையும் தலை மைத்துவ உதவியையும் இன்று இந்தக் குடும்பம் இழந்துநிற்கின்றது.

மாமா குடும்பத்தின் சுமை யையும் தாங்கவேண்டிய துர்

[10ம் பக்கம் பார்க்க]

# ஓர் அமெரிக்க நெறியாளரின் இரு திரைப்படங்கள்

அதிதீர சாகசங்கள், அரை குறை ஆடை நடனங்கள், நிமிடத்திற்கொரு முத்தக் காட்சிகள் நிறைந்த அமெ ரிக்க திரைப்படங்களையே பெருமளவில் பார்க்க முடி கின்ற சூழலில் இவற்றிலிருந்து மாறுபட்ட இரண்டு திரைப் படங்களை அண்மையில் பார்க்க முடிந்தது. ஒன்று 'அப்போகலிப்சே நௌ' மற் றது 'பிளக் ஸ்ராலியன்' இந்த இரண்டு திரைப்படங் களையும் ஒருவரே நெறிப்படுத் தியிருந்தார் - பிரான்சிஸ் போர்ட் சொப்போலா என் பவர் ஒளிப்பதிவு நேர்த்தி, சத்தச்சிறப்பு, நெறியாளர் திறன் கொண்ட பல திரைப் படங்களைச் சர்வதேசத் தரத் துக்கு வழங்கியவர் கொப் போலா. பல சர்வதேச திரைப்படங்களைத் தட்டிக் கொண்ட இவரது 'கோட் ஃபாதர்' சர்வதேச மட்டத் தில் பேசப்பட்ட திரைப் படம்.

'அப்போகலிப்சே நௌ' வியட்நாம் யுத்தத்தைப்பகைப் புலமாகக் கொண்டது இத் திரைப்படம் 979ம் ஆண்டு கான்ஸ் திரைப்படவிழாவில் சிறந்த திரைப்படத்திற்கான 'கோல்டின் பாம்' பரிசைப் பெற்றது 980ல் சிறந்த ஒளிப்பதிவுக்கும் ஒலிப்பதிவுக் கும் இரண்டு அக்கடமி பரிசு களையும் பெற்றுக் கொண்டது.

வால்ட்டர் குட்ஸ் என்ற கேர்ணல் அமெரிக்கப்படை யிலிருந்து ஓடிப்போனவர்களை யும், பழங்குடிப் படையொன் றையும் வைத்துக்கொண்டு அமெரிக்காவுக்குத் தலையிடி கொடுக்கின்ருன். அவனைக் கொல்ல வில்லாட் என்ற கப் டனை அமெரிக்கப் பெருந்தலை வர்கள் கம்போடியாவுக்கு அனுப்புகின்றன. பல சிரமங் களுக்கிடையில் குட்ஸ் கொல் லப்படுகிருன். திரைப்படத் தின் போக்குடன் கப்டன் விர்லாட்ஸின் உளவியல் பாதிப்புக்கள் மூலம் யுத்தம் விளைவித்த அனர்த்தமும் அச் சமும் வெளிப்படுத்துகின்றன.

✶ சசி. கிருஷ்ணமூர்த்தி

இத்திரைப்படம் பெரும் பாலும் பட்டியலாக அமைந் துள்ளதால் புரிந்துகொள்வது மிகவும் கடினமாக உள்ளது. இருந்தாலும் திரைப்படத் தின் நேர்த்தியான நெறி யாள்கை, யுத்தகொடுமை களையும் அழிவுகளையும் பட மாக்கிய விதம் வியப்பை அளிக்கிறது. இதனுல் நான் வியட்நாம் பற்றிப்பல திரைப் படங்கள் வெளிவந்தபோதும் இத் திரைப்படம் அவற்றில் முக்கியமான தொன்ருகக்' கருதப்படுகின்றது.

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோவியத் பகிஷ்கரிப்பினுல் 'ஒலிம்பிக்' அமைப்பு சிதையும் அபாயம்!

விளையாட்டு

- அனந்த்

**21**-வது நவீன ஒலிம்பிக் போட்டிகள், 976ம் ஆண்டு கனடாவின் மொன்ட்றீல் நகரிலே நடைபெற்றன. இப் போட்டிகளில் அரசியல் பிரச்சனைகள் மீண்டும் தலைதூக்கின. சீனக்குடியரசு என்ற பெயரில் பங்குபற்ற முடியாது என கனடா அறிவித்ததைத் தொடர்ந்து தாய்வான் நாடு போட்டியிலிருந்து விலகிக் கொண்டது

இருந்த காரணத்தால், 34 தங்கப் பதக்கங்களை மட்டுமே பெற்று மொத்தமாக 94 பதக்கங்களைப் பெற்ற அமெரிக்கா 3ம் இடத்துக்குத் தள்ளப்பட்டது.

நாடியா கொமான்சி என்ற ருமேனிய வீராங்கனை 5 பதக்கங்களைப் பெற்று. ஜிம்னாஸ்டிக் விளையாட்டில் ஒலிம்

முறை ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றவேண்டாம் என்ற அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தனதுநாட்டு வீரர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அமெரிக்காவுடன் 35ஆதரவு நாடுகளும் இப்பகிஷ்கரிப்பில் சேர்ந்து கொண்டன. விளைவு. 81 நாடுகள் மட்டுமே மாஸ்கோ ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டன.

சோவியத்யூனியன் 197பதக்கங்களையும், கிழக்கு ஜெர்மனி 126 பதக்கங்களையும், பல்கேரியா 40 பதக்கங்களையும் பெற்று முன்னணியில் திகழ்ந்தன.

சேர்ந்து கொண்டுள்ளமையும் லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கை சோபை இழக்கச் செய்வதாகவே அமையும். இதனை அமெரிக்காவும் நன்கு உணருகின்றது. அதன் அரசியல் தலைவர்கள் மற்றும் சர்வதேச ஒலிம்பிக் ஆர்வலர்களும் சோவியத்தின் இப்பகிஷ்கரிப்பு முடிவினுல் மிகவும் வேதனைக்குள்ளாகியுள்ளனர்.

போது நுழைந்துள்ளதை அறியமுடிகின்றது. சில நாடுகளின் பகிஷ்கரிப்புக்களும் இடம்பெற்றேயுள்ளன. ஆனுல் அப்பகிஷ்கரிப்புகள் அதிசிறந்த விளையாட்டுத்துறை நாடுகள் ஒன்றுசேர்ந்து பங்கு பற்றிய போது ஒரு துரும்பாகவே காணப்பட்டன

### கம்யூனிஸ்ட் 'ஒலிம்பிக்'

தற்போது எழுந்து நிற்கும் நிலைமை வேறு. சோவியத் கடந்த பல ஒலிம்பிக் போட்டிகளில் முன்னணியில் திகழ்ந்த ஒருநாடு. கிழக்கு ஜெர்மனியும் அதனுடன் பல வெற்றிகளைப் பெற்ற நாடு. கியூபா, செக்கோஸ்லாவாக்கியாபோன்றனவும்சிறந்தசர்வதேச தரத்திலான வீரர்களைக் கொண்டிருப்பவை. எனவே இவற்றின் ஒன்றுசேர்ந்த மற்றும் இவற்றுக்கு ஆதரவான

'ஒலிம்பிக்' தீபம் அமெரிக்க நகரங்களூடாக லாஸ் ஏஞ்சல்ஸ் கொண்டு செல்லப்படுகிறது! பணஞ்செலுத்தி குறிப்பிட்டதூரம்வரை தனிப்பட்டவர்களோ, ஸ்தாபனங்களோ கொண்டுசெல்லலாம் என அமெரிக்க ஒலிம்பிக் கமிட்டி தெரிவித்துள்ளது. இப்பணவசூல் முறைக்கு 'ஒலிம்பிக்'கின் தாயகமான கிரேக்கத்தின் ஒலிம்பிக்கமிட்டி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது!

அடுத்த பிரச்சினை தென்னாபிரிக்காவுடன் விளையாட்டு ரீதியிலான தொடர்புவைத்துக் கொண்ட நியூசிலாந்து இப் போட்டிகளில் பங்குபற்றுவதை எதிர்த்து 24 ஆபிரிக்க நாடுகள் போட்டிகளிலிருந்து விலக்கிக்கொட்டன.

இறுதியில் 93 நாடுகள் மட்டுமே பங்குபற்றிய இப் போட்டிகளில் சோவியத் யூனியன் 125 பதக்கங்களைப் பெற, கிழக்கு ஜெர்மனி 90 பதக்கங்களைப்பெற்றது. அவற்றில் 40 தங்கப்பதக்கங்களாக

பிக் சரித்திரத்தில் மிகவும் உயர்ந்த இடத்தைத்தட்டிக் கொண்டதும் இப்போட்டிகளின் போதுதான்.

### மாஸ்கோ ஒலிம்பிக்

22வது ஒலிம்பிக் போட்டிகள் 1980-ம் ஆண்டு மாஸ்கோ நகரில் நடைபெற்றன. இம்முறையும் அரசியல் பிரசனை தொடர்ந்தது. ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் தலையீட்டை எதிர்த்து இம்

### லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்

எதிர்வரும் 28ந் திகதி அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 23வது ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகவிருக்கின்றன. இவை ஆகஸ்ட் மாதம் 12ந் திகதி வரை இடம் பெறவிருக்கின்றன.

140நாடுகளிலிருந்து பதினோராயிரம் முதல் பன்னீராயிரம் வரையிலான விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் இப்போட்டிகளில் பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும் சோவியத் யூனியன் இந்த ஒலிம்பிக் பந்தயங்களைப் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளமையும், இம்முடிவுக்கு ஆதரவாக பல சோவியத் சார்பு நாடுகள் சோவியத்துடன் பகிஷ்கரிப்பில்

★ கலைஞர்

கே. [redacted]திரன் எழுதும்

## ஒலிம்பிக் போட்டிகள் — 11

### அமெரிக்க பந்தயங்கள்

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம் விழாக்கோலம் பூண்டுவருகின்றது பலநாட்டு வீரர்களும் அணி அணியாக லாஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையம் வந்திறங்குகின்றனர். ஆனுல் எத்தகைய தடல்புடலான ஏற்பாடுகள், வரவேற்புகள் காணப்பட்டாலும், அதிசிறந்த சர்வதேச விளையாட்டு வீரர்களைக் கொண்டுள்ள சோவியத் யூனியன், கிழக்குஜெர்மனி, செக்கோஸ்லாவியா, கியூபா, போன்ற நாடுகளின் பகிஷ்கரிப்பு ஒரு வெறும் அமெரிக்க விளையாட்டுப்பந்தயங்களைப் பார்க்கும் உணர்வையே லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் உருவாக்குமென்பதை முழு உலகமும் உணருகின்றது.

யுத்தங்களினுல் 'ஒலிம்பிக்' பந்தயங்கள் தடைப்பட்டுள்ளன ஆனுல் அவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன.

'ஒலிம்பிக்' வரலாற்றில் அரசியல் பிரச்னைகள் அவ்வப்

வேறு சிறுநாடுகளினதும் பகிஷ்கரிப்பு 'லாஸ் ஏஞ்சல்ஸ்-23வது ஒலிம்பிக்கில் பெரிய தொரு இடைவெளியையே ஏற்படுத்தவிருக்கின்றது.

இந்த இடைவெளி எதிர்காலத்தில் 'கம்யூனிஸ்ட் ஒலிம்பிக்' என்ற புதிய தொரு பிரிவை தோற்றுவிக்குமோ? என்பதே சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியினரின் அங்கலாய்ப்பாகும்.

### கோபர்டினின் பேரவா

இந்நிலையில் நவீன ஒலிம்பிக்கின் தந்தை என்று வர்ணிக்கப்பட்ட கோபர்டின் அவர்களின் பேரவாவை உலகநாடுகள் அனைத்தும் நினைவு கூர வேண்டியது அவசியமாகும்.

பூசல்கள் அற்ற சர்வதேச சகோதரத்துவத்தை நவீன ஒலிம்பிக்போட்டிகள் கட்டி எழுப்ப வேண்டுமென்றே அப்பெருமகனுர் விரும்பினுர். தமது சொந்த விருப்பு, வெறுப்புகளை 'ஒலிம்பிக்' போட்டிகளில் உலக நாடுகள் காண்பிக்கக்கூடாதென்பது

[10ம் பக்கம் பார்க்க]


## குறெஸ் ட்ரவல் சேர்விசஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?

கொழும்பு சென்று பிரயாண ஒழுங்குகள் செய்ய வேண்டுமா?

என்ற கவலையே வேண்டாம்!

உலகின் எப்பாகத்திற்குச் செல்ல வேண்டுமானுலும் உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவு செய்துகொள்ள உடன் எமது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

குறிப்பு: பிரான்ஸ், இத்தாலி, கனடா செல்வதற்கான விசா, பயணச் சீட்டுக்கள் மற்றும் சகல ஒழுங்குகளும் மிகக்குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

Cross Travel Services (Pte) Ltd.

PASSENGER SALE AGENT FOR SWISSAIR

Telephone: No : 22040, 22065.

TELEX No. 22207 (C. T. S) C E

CTS

எமது ஸ்தாபனத்தின் இணைந்த சேவையாக தற்பொழுது "குறெஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை" ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

★ வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினருடன் தொடர்பு கொள்ள வேண்டுமா? உங்கள் இல்லங்களிலுள்ள தொலைபேசியிலேயே உறவாடி மகிழ்ந்திட எம்மை நாடுங்கள்.

★ உலகின் சகல பாகங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் நேரடித் தொலைத் தொடர்பு சேவையையும், டெலெக்ஸ் சேவையையும் ஒரு நொடிப்பொழுதில் தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

Cross International Telecommunication Services

(குளிரூட்டப்பட்டது–பஸ்நிலையம் முன்பாகவுள்ள மேல்மாடி)

STAGE II, MODEL MARKET

No, 5, 1st FLOOR

BUS STAND CENTRE ROAD, JAFFNA.

Phone No : 22040, 22065. Telex No. 22207 (C. T. S) C E




## ஒரு பத்திரிகாசிரியர் ஓய்வு பெற்றுர்

மன்னுபுகழ் இதழாய் வளர்வீர கேசரிக்குச்
சொன்ன மணமாம் சுவைசேர்த்துக் - கன்னலெனக்
காதினிக்கக் கண்குளிரக் காலைதோறும் காந்தமாய்
மேதினியில் செய்தாய் விழைந்து

○

திக்கெலாம் செய்திதமைத் தேர்ந்தெடுத்து வந்துநிதம்
புக்கநறும் பொங்கர் மலர்வண்டாய் - மிகுமணம்
வீசவைத்தாய் நாடெங்கும் வீரகேச ரிப்புகழைப்
பேசவைத் தாய்நீ பெரிது.

○

முப்பதாண்டுச் சேவையில் மூத்தோனுய் முன்னேறி
ஒப்பிலாப் பத்திரிகைப் பூட்கையுடன் - இப்புவியில்
நேர்ந்த கடமை நிலைத்தோங்கக் கண்ணியமும்
தேர்ந்தநின் பண்பே பணி.

○

மக்கள் மனதில் மகிழ்ந்து நடமாடி
மிக்கபேர் அன்பை மிகக்கொண்டாய் - தக்கோய்
உவப்புத் தலைகூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

● 'வீரகேசரி' முன்னுள் ஆசிரியர் திரு. ஈ. வி. டேவிட் ராஜு அவர்களுக்குக் கொழும்புத் தமிழ்ச்சங்கம், கல்ஹின்ன தமிழ்மன்றம், 'வீரகேசரி' பத்திரிகை நிறுவனம் கூட்டாகக் கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் அளித்த பிரியாவிடை வைபவத்தில் வழங்கப்பெற்ற வாழ்த்து மடலிலிருந்து சில பாடல்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறிச்சோடிய யாழ்ப்பாணம்

**1658,** பங்குனி, 6ஆம் திகதி.

அதிகாலை ஒல்லாந்தப்படை, நாகதேவன் துறையை வந்தடைந்தது. காலைக்கதிரவனின் தண்கதிர்களின் தழுவலில், அவர்கள் முன்விரிந்து கிடந்த கடல் நீரேரி நேற்று மாலை அங்கு நிகழ்ந்து முடிந்தநிகழ்ச்சிகளின் சுவடு எதுவுமின்றி அமைதியாக அலையெறிந்தது.

நாகதேவன் துறையிலிருந்து யாழ்ப்பாணப் பட்டினத்திற்கும், சசிசாய்த் துறைக்கும் செல்வதற்கான படகுகள், போர்த்துக்கீசர் படைவீரர்களால் தகர்த்து எறியப்பட்டிருந்தன. சில படகுகளை அவர்கள் கைப்பற்றி அக்கரைக்குச் சென்றிருந்தார்கள். நிச்சயமாக அந்தப்படகுகளும், அக்கரையில் உடைத்து எறியப் பட்டிருக்கும்.

கொமுசாறி வன்கோயன், அடங்கா ஆத்திரத்துடன், அக்கரையைப் பார்த்தான். கரும் சுவராக அடிவானத்தில் பனை மரங்களின் கூடல் தெரிந்தது. அவர்கள் அக்கரைக்குச் சென்றே ஆகவேண்டும். அவன் திசைவீரசிங்கனை ஏறிட்டு ஏமாற்றத்துடன் பார்த்தான். திசைவீரசிங்கன், வன்கோயனின் பார்வையில் தொனித்த வினாவின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டான். அவன் கண்கள் எதிர்க்கரையில் நிழலாகத் தெரியும் கையாக உப்பு விளைந்திருக்கும். '' என்ற திசைவீரசிங்கனை வன்கோயன் கலக்கத்துடன் பார்த்தான்.

''பதினறு லீக்...? வேறு குறுகிய வழி இல்லையா? ''

''இல்லைத்துரை அவர்களே...''

''என்ன இடம் என்றீர்?...''

''ஆனையிறவு... அந்த இடத்தில் தான் பூநகரிப் பிரதேசத்திலிருந்து யானைகள் அக்கரைக்குச் செல்லும்...''

8

''காட்டு யானைகள் வழியில் தென்படுமோ?...''

''நாங்கள் கரையோரமாகவே செல்வோம். யானைகள் தென்படாதென நினைக்கிறேன் அப்படிக்குறுக்கிட்டாலும் பணிக்கன் நாராயணன் இருக்கிறான்...''

வன்கோயன் உடனே தன்னைச்சமாளித்துக் கொண்டான். ''யானைகளுக்கு நாம் பயப்படலில்லை. பீரங்கியின் சத்தம் கேட்டால் அவை ஓடிவிடும்..''

ஒல்லாந்தப்படை வீரர்கள், நாகதேவன் துறையிலிருந்து. கிழக்குத்திசையில் கரையோர பாக்கிகளைத் தயார்படுத்திக் கொண்டார்கள்

''பயப்படத்தேவையில்லை, துரை அவர்களே! ஆனையிறவு நெருங்குகிறது. ஆனையிறவில் இயற்கையாக இந்தப்பருவத்தில் உப்பங்கழி விளைந்திருக்கும் யானைகளுக்கு உப்பு வெகு பிரியமான சாப்பாடு... கற்கண்டாக உண்ணும் ஆதலால் உப்பங்கழியில் யானைகள் நிற்பதற்கான குறிகள் தெரிகின்றன..'' என்று திசைவீரசிங்கன் ஆறுதல் கூறினன்.

அவன் கூறியவாறு தூரத்தில் மலைக் குன்றுகளாக யானைக் கூட்டம் ஒன்று உப்பங்கழியில் நின்றிருந்தது. சிறிதும் பெரிதுமாக இருபத்தைந்து வரையில் இருக்கும் அக்கூட்டத்தின் தலைவன்போன்று காணப்பட்ட, கொம்பன்யானை ஒன்று சுற்றுடலை அவதானமாகக் கவனிப்பதும், காதுகளை வீசி, எதையோ கிரகிப்பதுமாக நின்றிருந்தது.

வன்கோயன் தூரத்தில் நின்றவாறு. அந்தயானைக்கூட்டத்தை வியப்புடனும் பயத்துடனும் பார்த்தான். 'இவ் வளவையும் பிடித்து சூனர் (முஸ்லீம்) வர்த்தகர்களுக்கு விற்ருல், பத்தாயிரம் பற்ருகோஸ் கிடைக்கும். யப்னுப் பட்டினம் வளமானதுதான். இதைப்போலஎத்தனை கூட்டம் யானைகள் இங்கிருக்கும்?

மனிதவாடையை, கொம்பன் யானை மோப்பம் பிடித்துக் கொண்டது. திடீரென அது ஒரு மூசல் மூசியது அவ்வளவுதான், எல்லாயானைகளும் தென்புறமாகவிரைந்துசென்று அடர்கானத்துள் மறைந்தது போயின.

அவர்கள் ஆனையிறவைக் கடந்து, பச்சிலைப்பள்ளியில் பிரவேசித்தார்கள்.

சிங்கன் இதயம் அவர்களைக் கண்டதும் கலங்கியது.

அவர்கள் வழியில் அதிக காலம் தரித்து நிற்கவில்லை. யாழ்ப்பாணப் பட்டினத்தை நோக்கி விரைந்து சென்றார்கள்.

யாழ்ப்பாணம் வெறிச்சோடியிருந்தது. யாழ்ப்பாணம் போர்க்களமாக மாறப்போகின்ற செய்தி எங்கும் பரவிவிட்டதால், வீதிகளில் சன நடமாட்டம் எதுவும் இருக்கவில்லை. வீடுகளில் மக்கள் இருப்பதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை. பலர் யாழ்ப்பாணத்தைக் கைவிட்டு கிராமப்புறங்களுக்கு ஓடியிருந்தார்கள்.

மன்னரிலிருந்து தப்பிஓடி வந்த போர்த்துக்கீசப் படை

(12ம் பக்கம் பார்க்க

# கடல்கோட்டை



செங்கை ஆழியான்

கச்சாய்த்துறையை ஆவலோடு நோக்கின.

அவன் அதிகாரம் செலுத்தியதுறை. அவன் ஆட்சி செலுத்திய பிரதேசம் அவற்றை இன்றுஅவன் இழந்து அநாதையாக இக்கரையில் இன்னெரு அந்நியப்படையின் வழிகாட்டியாக நின்றிருக்கிருன். அவன் முகத்தில் கவலையின் ரேகைகள் படிந்தன.

''முதலியார் அக்கரைக்குப் போவதற்கு என்ன வழி?'' என்று வன்கோயன், அவனைக் கேட்டான் வார்த்தைகள் சற்றுப் பலமாகவே வந்தன.

''வழி இருக்கிறது, துரை அவர்களே நாங்கள் கால் நடையாகவே இந்தக்கடலைக் கடந்து அக்கரைக்குச் செல்ல முடியும்...''

வன்கோயனின் முகம் மலர்ந்தது. ''ஆழம் குறைவா, முதலியார்?''

''இல்லை... இந்த இடத்தில் இக்கடலைக்கடக்க முடியாது இங்கிருந்து கிழக்குத் திசையில் பதினறு கட்டை சென்ருல் ஆனையிறவு என்ற ஒடுங்கிய நீரிணை வரும்... அவ்விடத்தில் இந்தப் பருவத்தில் கடல் வற்றியிருக்கும். இயற்மாக ஐந்து மணிநேரம் நடந்தார்கள். உவர்த்தரையில், பீரங்கிவண்டில்கள் புதைந்து, புதைந்து நகர்ந்தன. சேற்று நிலங்களும் சிற்ருறுகளும் உப்பங்கழிகளும்குறுக்கிட்டன. உவர் நிலவளரிகள் கரையோரங்களில் வளர்ந்திருந்தன.

படைவீரர்களின் ஆர்ப்பாட்டமான நகர்வால், கரையோரத்தாழைமரங்களில் அமர்ந்திருந்த கடல்பறவைகள் வானில் கலவரத்துடன் எழுந்தன. கரையோரத்திலிருந்து விலகி, பனங்கூடல்களும் குடிசைகளும் தெரிந்தன.

ஆனையிறவை அவர்கள் நெருங்கியபோது, சிற்ருறு ஒன்று குறுக்கிட்டது. அது நன்னீரைக்கொண்டிருந்ததால் படைவீரர்களும் மாடுகளும் தாகந்தணித்துக்கொண்டனர் சிற்ருற்றைக்கடந்து, அவர்கள் சிறிது தூரம் சென்றிருப்பார்கள். பணிக்கன் நாராயணன், இயற்கையின் செய்தியைப் புரிந்து கொண்டு, அவர்களை எச்சரித்தான்

''யானைக்கூட்டம் ஒன்று அண்மையில் நிற்கிறது...''

படைவீரர்கள் கலவரம் அடைந்தார்கள். தமது துப்

''போர்த்துக்கீசர் புத்திசாலிகள் அல்லர்'' என்ருன் வன்கோயன். ஆனையிறவில் நிச்சயமாக அவர்கள் ஒரு காவற்கோட்டை அமைத்திருக்க வேண்டும். பெருநிலத்தையும் யப்ருைப்பட்டினத்தையும் இணைக்கின்ற இந்தக்குறுகிய கடல்வழியில் அவர்கள் கோட்டை அமைக்காதது தவறு.

அவர்கள் பச்சிலைப்பள்ளியை நோக்கி நடந்தார்கள். இயக்கச்சியைக் கடந்தபோது மீண்டும் ஒரு யானைக்கூட்டத்தை அவர்கள் காணநேர்ந்தது. ஒரு தென்னந்தோட்டத்தினுள் காட்டு யானைக்கூட்டமொன்று புகுந்திருந்தது. ஓங்கிச்செழித்து வளர்ந்திருந்த தென்னை மரங்களை முட்டி மோதிச்சரித்துவிட்டு அவை தென்னங்குருத்துக்களையும் ஓலைகளையும் அட்டகாசமாக உண்டு கொண்டிருந்தன. அத்தோட்டத்தினுள் இருந்த குடிசை துவம்சம் செய்யப்பட்டிருந்தது. அவற்றை ஒல்லாந்த வீரர்கள் பயத்துடனும் வியப்புடனும் பார்த்தனர்

பச்சிலைப்பள்ளியில் இளைப்பாறிவிட்டுத் தமது பயணத்தைத்தொடர்ந்தனர். தென்மராட்சியை அடைந்தபோது திசைவீரசிங்கனை அவன் உறவினர்களும் நண்பர்களும் எதிர்கொண்டனர். திசைவீர

தொடர் நவீன சித்திரம்




2

# காதலுக்கே அர்ப்பணித்தாள்

ஊரார்கள் வாய்க்குமொரு வேலியிடலாமோ
உள்ளமுறு காதலர்கள் மூடியெவருக்கும்
சேராத அந்தரங்கம் என்றிருப்பதெல்லாம்
தெருவினிலே வருகின்ற மாயமிது வென்ன,

பற்கடித்தான் தந்தையவன் வாய்கடித்தான் தமையன்
பகலெல்லாம் கண்ணீராற் பாய்நனைத்தாள் அன்னை
நற்குடிக்கு மாசென்றூர் நங்கையர்கள் பல்லோர்
நல்லதொரு சோடியென நயந்திட்டார் சில்லோர்.

பளிங்காடி முன்றிலுக்குப் பன்னீரால் ஊற்றுப்
பாய்ந்து கவினளிக்கவெனிற் பண்ணைகளிலெல்லாம்
புளிங்காடி குடித்துவரும் ஏழைகளின் கண்கள்
புண்ணாகிக் கண்ணருவி பொழிந்திடவேவேண்டும்.

தந்தத்தால் மஞ்சத்துச் சாய்ந்திருக்கும் மாடி
தங்கத் தனித்தூண்கள் தாங்குதற்கு வேண்டில்
வெந்துவெயில் வேகவரும் ஏழை கழுத்தெல்லாம்
விம்மிவரப் பாரங்கள் ஏறிடவே வேண்டும்

கண்ணாடிக் கலசத்துக் களிப்பூட்டும் மதுவில்
கன்னியர்கள் கன்னம்போலச் சிவப்பேற வேண்டில்
உண்ணுத ஏழைகளின் முதுகுகசை யடியில்
உதிரஒழுக் காருகப் பெருகிடவே வேண்டும்.

இவ்வாறு பொருள்சேர்க்கும் தந்தையவர் தாமோ
இதயத்துக் காதலொளி கண்டிடுவ ராமோ
எவ்வாறு பொருள்குவியும் இரக்கமெனும் ஈரம்
இதயத்தி லிருப்போர்க்கு என்பதறி யோமோ!

இட்டவொரு ஆணைக்கு எதிர்வார்த்தை கூறி
எலும்பொடிந்து மண்ணின்கீழ்ப் புதைந்தோர்கள் கோடி
கட்டளைக்கு மாறியொரு கண்பார்வை செய்து
கண்ணிழந்து மண்ணினுக்குட் புதைந்தோர்கள் கோடி.

கைகாட்டக் காலடியிற் பணிகேட்பார் கோடி
கண்காட்டக் கொலைபுரியக் கையாட்கள் கோடி
சைகையினுக் கோடிவரும் தையலர்கள் கோடி
தன்மானம் விற்காது தலையிழந்தார் கோடி.

அத்தகைய தந்தையுடை அரமியத்தில் நின்று
ஆதவனின் பொன்னொளியால் அறுகநுனி தூங்கும்
முத்தான பனித்துளியின் அழகுதனில் மூழ்கி
மோனத்து நின்றவளின் முனைவந்து நின்ருன்.

கண்பேசும் மொழியாலே காதலர்கள் பேசிக்
களித்திருக்கும் அந்நிலையைக் கண்டாரத் தந்தை
பெண்பேதை அதன்விளைவை அறிவாளோ மீண்டும்
பேசுதற்கே மறுநாளும் அரமியத்து நின்ருள்.

கீழ்வானம் பூத்துவரச் சாளரத்து நின்ருள்
கெஞ்சுமவன் கொஞ்சுமுகம் மல்லிகையின் பந்தர்த்
தாழ்வாரம் பூக்குமெனத் தையலவள் காத்து
தன்விழிகள் பார்த்தவழி பூத்ததன்றி யுண்டோ.

க. சச்சிதானந்தன்

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரம் எப்படி?

### மேஷம்

அதிக ஆசையினுல் அவதிப் படுவீர்கள். நிதானம் வேண் டும. சிலர் இவ்வாரம் வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ளலாம், குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும். அமைதி நன்று. சூரியபகவானை வழிபடவும்.

### ரிஷபம்

பெரிய இடத்துச்சிநேகம் ஏற் படலாம். கற்றதனுல் பலன் கைமேல் கிடைக்கும். நுட்ப மான வேலைகளில் ஈடுபடு வோர் போற்றப்படுவர். குடும் பத்தில் மகிழ்ச்சி நிலவும். பத் திரகாளி அம்மனை வழிபட வும்.

### மிதுனம்

சகோதர வழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும். உள்வீட்டிலேயே பூசல்கள் தலை தூக்கும் இவ்வாரம் உஷாராக இருக்கவேண்டும் தொழில் புரியும் இடத்தில் கண்துடைப்பு வேலைகள் நடை பெறும். நண்பர்கள் சூழ்ச்சி வலை விரிப்பதற்கு முற்படு வார்கள். மகா விஷ்ணு சுவா மியை வழிபடவும்.

### கடகம்

வாகன விருத்தியும் தனத் துடன் வாழ்வும் கிடைக்கும். எதிரிகள்கூட உங்களை வர வேற்பார்கள். மருத்துவத் துறையில் ஈடுபடுவோர்களுக்கு இவ்வாரம் மகத்தான வார மாகும் முன்னேற்ற முண்டு. பார்வதி அம்மனை வழிபடவும்.

### சிம்மம்

மகிழ்ச்சியான செய்தி யொன்று கிடைக்கலாம். நீண்டநாள் பிணி நிவர்த்தி யாகும். புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும். சூரிய பகவானை வழிபடவும்.

### கன்னி

உதவி செய்யப்போய் உபத் திரவத்தைத் தேடிக்கொள் வீர்கள். தானிய நஷ்டமுண்டு. பொருமையின் நிழல் தொட ரும். அமைதி நன்று. துர்க்கை அம்மனை வழிபட வும்.

### துலாம்

பொதுத்துறையில் அதிக நாட்டம் செலுத்துவீர்கள் காதலர் வாழ்வில் தடைவில கும். பெற்ருேர் ஆதரவும் உண்டு. வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பங்கள் ஏற் படும். வார இறுதியை அவ தானமாக கழிக்கவும் சுப்பிர மணியர் வழிபாடு நன்று

### விருச்சிகம்

தொழில் விடயத்தில் அதிக கவனம் எடுக்கவும். எக்காரி யத்திலும் உடனுக்குடன் முடி வெடுக்கவும். இவ்வார இறுதி யில் எதிர்பாராத விளைவுக்கும் இடமுண்டு. சண்முகப்பெரு மானை வழிபடவும்.

### தனுசு

இதயத்தின் ஏக்கம் தணி யும் தேடியபொருள் காலடி யில் கிடைக்கும். தந்தைவழி ஆதரவு தப்பாமல் கிடைக் கும். தடைகள் எல்லாம் தவிடுபொடியாகி தனிக்கொடி பறக்கும். சூரியபகவானை வழி படவும்.

### மகரம்

பூரிப்பான சம்பவங்கள் இடைக்கிடை நடைபெறும். தொழில் துறையில் புதிய சாதனை உருவாகும். இடமாற் றத்துக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படும். பெரு மாள் சுவாமி வழிபாடு நன்று.

### கும்பம்

புதிய நண்பர்களை இவ்வா ரம் தேடிக்கொள்வீர்கள். சகல துறைகளிலும் முன்னேற்ற முண்டு. பொன்ஞன சந் தர்ப்பமொன்று உங்களைப் பூரிப்படையச்செய்யும். தேடிய உறவு உங்களை நாடியே வர லாம். இவ்வார இறுதியை கவனமாகக் கழிக்கவும் மகா விஷ்ணுவை வழிபடவும்.

### மீனம்

தொழில்துறையில் தொல்லை களுக்கு இடமுண்டு திடீர் முடிவுகளை தவிர்த்துக்கொள்ள வும் சிந்தனையின் தாக்குதல் உடல் நிலையைப் பாதிக்கும் பொருள் விரயத்திற்கும் இட முண்டு. சூரியபகவானை வழி படவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

---

## ஓர் அமெரிக்க

(7ம் பக்கத் தொடர்ச்சி)

'பிளக்ஸ்ராலியன்' என்ற மற்றத்திரைப்படம் 'அப் போகலிப்சே நௌ' வைவிடச் சற்று வேறுபட்டது. சிக்க லான கதைப்போக்கையும், ஏராளமான பாத்திரங்களை யும் கொண்ட மிகவும் பொருட்செலவுடன் அப் போகலிப்சே நௌ' எடுக்கப் பட்டிருக்கிறது. மாருக 'பிளக் ஸ்ராலியன்' எளிமையான கதைப்போக்குடன் மென்மை யான உணர்வுகளை வெளிப் படுத்துவதாகக் குறைந்த பாத்தரங்களையே கொண் டது. சிறு பையன் ஒருவனும் குதிரையொன்றுமே முக்கிய பாத்திரங்கள், அவர்களி டையே ஏற்படும் அந்நியோன் யமும் அவர்கள் வெளிப்படுத் தும் உணர்வுகளும் அழகிய லோடு வெளிப்படுத்தப்படு கின்றன.

கடலில் பயணம் செய்து கொண்டிருந்த கப்பல் ஒன்று விபத்துக் குள்ளாகின்றது. அதில் பயணம் செய்த ஒரு சிறுவனும் குதிரையொன்றும் மட்டுமே தப்பி வட ஆபிரிக் கக் கரையொன்றை அடை கின்றனர் கப்பலிலேயே அந்தச் சிறுவனுக்குக் குதிரை மேல் ஈடுபாடு ஏற்பட்டிருந் தது யாருமற்ற கடற்கரை யில் மேலும் அவர்களது ஈடு பாடு நெருக்கமடைகின்றது. தளராத பயிற்சியின் பின்னர் அக்குதிரையுடன் மாபெருங் குதிரைப் பந்தயமொன்றில் கலந்துகொள்கிருன். சிறுவன் அங்கு அக் குதிரையே முதலி டம்பெறுகின்றது சிறுவனின துணிவையும் ஆற்றலையும் கண்டு மக்கள் ஆச்சரியமும் மகிழச்சியும் அடைகின்றனர்.

திரைப்படம் என்பது முக்கி யமான ஒருகட்புலக் கலாசி ருஷ்டியே. இது புரிந்து கொள் ளப்படாமலே இன்று பெரும் பாலும் இவ்வூடகம் கையா ளப்படுகின்றன. இந்த நிலை யில் இத்திரைப்படங்கள் இரண்டும் ஓவியார்த்தமாக உள்ளன. 'இப்போகலிப்சே நௌ' வில் புகையும் நெருப் பும், இருளினூடே மெல்லிய ஒளியில் உணர்ச்சிகளைக்காட் டும் மனித முகங்களும், யுத் தக்காட்சிகளும் மனதில் படி கின்றன. 'பிளக் ஸ்ராலிய னின்' முதல் அரைப்பகுதி பெரும்பாலும் பேச்சுக்களற் றதாக சிறுவனுக்கும் குதி ரைக்கும் இடையிலான உற வும்உணர்வும் வெளிப்படுத்தப் படுகின்றன ஆபிரிக்கக் கடற் கரையும், நீரரித்த கற்பாறை களும், நீளவானமும் மிகவும் அற்புதமாக இருக்கின்றன

---

## அவலங்கள்

7ம் பக்கத் தொடர்ச்சி)

அதிர்ஷ்டம் இந்திரனிடமே இன்று சென்று விட்டது கட் டாயம் சுமந்தே ஆகவேண்டிய வளுகிவிட்டாள்.

இதற்கெல்லாம் அவன் உழைப்பு ஈடுகொடுக்க மாட் டாது.

மாடுமாதிரி உழைத்துக் கழுதைபோல் சுமந்துவந்து கொட்டிஞல்தான் இந்தப் பள்ளங்களை நிரப்பலாம்.

அம்மா, அக்கா, மாமி, ரேகா, தர்மினி... இவர்கள் எல்லாம் அவன் கண்முன் அடிக்கடி தோன்றி மறை கிருர்கள்......

தன்னைபார்த்து இரந்து நிற் பதுபோல் ஒரு மாயை. கண் களை இறுக மூடிக்கொள் கிருன்...

புவியைப் பிளந்துகொண்டு வருவது போன்று வெப்ப அலைகள், இந்த இரவிலும் வீசிக்கொண்டு இருக்கிறது. அக்கம் பக்கத்து மரங்கள் எவையும் அசையவில்லை.

பிரகாசித்துக் கொண்டிருக் கிற அந்த வெண்ணிலவு அவ னுக்குப் பிடிக்கவில்லை. அதன் குளிர்மை மனதைப் புளகாங் கிதம் அடையச்செய்யவில்லை. அதன் வனப்புகூட அவனைக் கவரவல்லை

கண்சிமிட்டிப் பூத்துநிற்கும் நட்சத்திரங்கள் கூட இப் போது அழகாக இல்லை

அவன் மன நிலை இவைகளை யெல்லாம் இனி ரசிக்காது. ஒரு சூனிய உலகில் சஞ்சரிக் கத்தான் அவன் விரும்புகிருன். அதுதான் தனக்கு அமைதிதரும் என்றும் நம்புகின்ருன். எல் லாமே வெறுமையாக இருக்க வேண்டுமென்ற மனப்பாங்கு

நிலவை - மட்டுமல்ல - மலை, கடல், ஆறு, குளம் இன்னே ரன்ன இயற்கைகளைமட்டுமல்ல. வாழ்விற்கு நிறைவு தரும் எத்தனையோ செயற்கைகளை யெல்லாம் கண்டிருக்கிருன்: களித்திருக்கிருன். கவிதை என் றும் கட்டுரை என்றும் வடித்து மகிழ்ந்திருக்கிருன்.

அந்த இன்பமே தனி இன்ப மென்று சுவைத்திருந்தவனு க்கு இன்று இவையெல்லாம் ஏனே தானேஎன்ற வெற் றுணர்வு.

அவன் தன் எண்ணம் போனபடியே போய்க்கொண் டிருந்தான்.

(அடுத்தவாரம் முற்றும்)

---

ஒருமண்புழு விளையாடு வதற்குத் துணையின்றித் தவித்துக்கொண்டிருந்தது. அங்கும் இங்கும் சுற்றி அலைந்து கடைசியில் அதைப் போலவே ஒரு புழுவைக் கண்டு, மகிழ்ச்சியுடன் வினு விற்று 'என்னுடன் கொஞ் சம் விளையாட வருகி ருயா?'

அந்த மற்ரெரு மண் புழுவோ சிரித்துக் கொண்டே பல் சொன் னது; ''கேலி செய்யாதே, நான் உன்னுடைய வால் ('டிட்பிட்ஸ்' நூலிலிருந்து)

கா. யோ. கிரிதரன்

---

## ஒலிம்பிக்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வும் அவரது கோரிக்கையா கும்.

எனவே அந்த உயர்ந்த இலட்சியங்கள் தொடர்ந்து உலகில் வாழவும் 'ஒலிம்பிக்' அமைப்பு சிதைந்து போகா மல் இருக்கவும் பாடுபடுவதே உலகநாடுகள் அனைத்தினதும் அதிமுக்கிய கடமையாகும்.

(தொடரும்)

---

## கடல்கோட்டை

[9ம் பக்கத் தொடர்ச்சி]

வீரர்கள், யாழ்ப்பாணக் கோட்டையை நோக்கிச்சென் றிருந்தார்கள். அவர்களை விரட்டியபடி ஒல்லாந்தரின் படை விரைந்து வருகின்ற செய்தி, யாழ்ப்பாணத்தில் பீதியைக்கிளப்பிவிட்டிருந்தது.

எதிர்பார்த்தது நடந்தது.

ஒல்லாந்தர் படை, பறங் கித்தெருவில் பிரவேசித்த போது, தேவாலயம் (சர்ச்) ஒன்றிலிருந்து, முதலாவது துப்பாக்கி வெடித்தது, வன் கோயனின் அருகில் வந்து கொண்டிருந்த ஒல்லாந்த வீரன் ஒருவன் குண்டடிபட்டு சுருண்டு விழுந்தான்!

ஆதாரம்;-

(1) Commissary Rycklof Van goen's Letters. The Dutch Power in Ceylon. P. E. Pieris.

(2) A True and Exact Description of Ceylon- By. P. Baldaeus- 1672.

(தொடரும்)

---

நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!
இவை உங்கள் முதலீட்டிற்கு உத்தரவாதம்
நிலையான வைப்பிற்கு யாழ். நகரில் அதிஉயர் வட்டி 30% வழங்கும் ஒரே நிறுவனம்·
SHABRA
துரிதமாகவும், துலக்கமாகவும் பிரதிகள் செய்யவும், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் உடனுக்குடன் தட்டச்சு செய்யவும் நாடவேண்டிய இடம் "ஷப்ரு"
61, நியூ புலர்ஸ் வீதி
கொழும்பு - 4-
தொ. பேசி. இல: 589310
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி. இல: 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியார் மயில்வாகனத்தின் வாழ்வும் பணிகளும்

பெரியார் மயில்வாகனம் யாழ்ப்பாணத்தில் தோன்றிய அதிஉத்தம புதல்வர்களில் ஒருவராவர். அவரது தொண்ணூற்றுக்கு மேற்பட்ட வாழ்வு கடைசி இரண்டொரு வருடங்கள் தவிர மறுகாலம் எல்லாம் தொண்டில் ஈடுபட்ட வாழ்வாகும்.

அளவெட்டி செல்லப்பாவுக்கு மகனாகத் தோன்றிய திரு. மயில்வாகனம் அவர்களுக்கு வழிகாட்டிகளாகவும் சகாக்களாகவும் கல்வி, ஒழுக்கம் சமயத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் வழிகாட்டிகளாகவும் சகாக்களாகவும் விளங்கினர். இவர் இந்துக்கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் இவருக்குவழிகாட்டியாகவிருந்தவர் நாகமுத்து ஆசிரியராவர். நாகமுத்து ஆசிரியர் அப்பொழுது கல்லூரி விடுதிச்சாலைக்கு மேற்பார்வையாளராகவும் இருந்தார். இவர் இந்துக்கல்லூரி முகாமையாளரோடு ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இந்துக்கல்லூரியை விட்டு விலகினார். இவரோடு விலகியவர்களில் பெரியார் மயில்வாகனமும் ஒருவராவர்.

## வைத்தீஸ்வராவில்

## ஆசிரியர்

இந்துக்கல்லூரியை விட்டு விலகிய பின்னர் திரு. நாகமுத்து சிவன்கோவில் வடக்கு வீதியில் அக் கோயிலுக்குச் சொந்தமான மெத்தை வீட்டில் வைத்தீஸ்வரவித்தியாலயத்தை 1913ல் ஆரம்பித்தார் இதில் சிறிதுகாலம் சிவராவும் ஆசிரியராக இருந்தார் என்பது கூறத்தக்கது. இங்குதான் பெரியார் மயில்வகனமும்முதல் முதல்ஆசிரியரானார். ஆரம்பத்திலிருந்து இது கலவன் பாடசாலையாக இருந்து வந்தது போலும். ஏனெனில் டாக்டர் வி ரி. பசுபதியின் மனைவி மயில்வாகனமாஸ்ரரிடம் இங்கு கல்வி கற்றதாகக் கூறுவர். அரசாங்க உதவியில்லாது ஐந்து வருடங்களுக்கு மேல் இவ்வித்தியாலயம் நடைபெற்றபடியால் ஆசிரியர்களுக்கு சம்பளம் செவ்வையாக கொடுபட்டிருக்க முடியாது. ஆகவே அங்கு அக்காலத்தில் கற்பித்த ஆசிரியர்கள் தியாகிகளாக இருந்திருக்க வேண்டும். சிறிதுகாலத்துக்குப்பின் விடத்தல் தீவுப்பிள்ளையார் கோயிலுக்குச் சொந்தமானதும் மெத்தை வீட்டுக்கு அருகில் இருந்த காணியில் வித்தியாலயத்திற்கு என ஒரு மண்டபம் அமைக்கப்பட்டது இந்த இடத்தை கொடுத்து உதவியவர் விநாசித்தம்பி உடையார் ஆவார்.

## யோக சுவாமிகளை

## தரிசித்தமை

பெரியார் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் படிப்பித்த காலத்திலேயே யோக சுவாமிகளைச்சந்தித்தார். இவர்களின் நண்பரான கலைப்புலவர் நவரத்தினமும் இவரும் சுவாமிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்கள். சுவாமிகளுக்கு சீடர்கள் இருந்தால் (சுவாமிகள் வெளிப்படையாக ஒருவரையும் சீடர்கள் என்று கொள்ளவில்லை) பெரியார் மயில்வாகனமும் கலைப்புலவர் நவரத்தினமுமே முதல் சீடர் என கொள்ளவேண்டும், இந்த காலத்தில்தான் பெரியாருக்கு விவாகம் நடந்திருக்கவேண்டும். விவாகம் நடந்த பின்னர் உத்தியோகத்தின் பொருட்டு குடும்பத்துடன் றங்கூன்சென்றார். இவருடைய மகன் ஸ்ரீகாந்தா பிறந்த சிறிதுகாலத்தில் மனைவியார் இறந்துவிட்டார். மனைவியார் இறந்தபின் குழந்தையுடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அதற்குப்பின் இவர் விவாகம் செய்யவில்லை. மகனுக்கு சிறந்த கல்வி கொடுத்தார். மகனும் அரசாங்க உத்தியோகததில் இருப்பவருக்குக் கிடைக்கக் கூடிய அதி உயர்ந்த நிரந்தர காரியதரிசிப் பதவியை வகித்தார். மகனுக்கு தக்க இடத்தில் (வைத்தியர் முத்துக்குமாருவின் மகள்) விவாகம் செய்து வைத்தார். மேல் கூறிய வற்றால் தந்தை மகனுக்கு செய்ய வேண்டிய கடமைகளைத் தவறாது செய்தார்.

## பால சந்நியாசி

றங்கூனில் இருந்து திரும்பியதும் பெரியார், இராமநாதன் கல்லூரியில் ஆசிரியர் ஆனார். அங்கு அவர் கழித்த வாழ்க்கை ஒரு உன்னத வாழ்க்கை என்றுகூற வேண்டும். சேர். இராமநாதன் இவரை பாலசந்நியாசி என்று கூறுவார். ஏன் என்றால் இவர் இளம் வயதில் மனைவியை இழந்தும் மறு விவாகம் செய்யவில்லை. அதோடு சீரிய வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்.

**ச. அம்பிகைபாகன்**

இந்தக்காலத்தில் சுன்னாகம் செல்லாச்சி அம்மையாரோடும் யோக சுவாமியோடும் பெரியார் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கிடைத்தது. மருதனாமடச் சந்தியில் ஒரு அறையில் வாழ்ந்துவந்தார் அங்கிருந்து அம்மையார் வீட்டுக்கு அடிக்கடி போய்வருவார். சுவாமியும் செல்லாச்சி அம்மையார் வீட்டுக்கு போகும் வழியில் பெரியார் இருக்கும் அறையில் தங்கிப்போவார், வசதியான நேரங்களில் இருவரும் சேர்ந்து வேதாந்த சித்தாந்த நூல்களைப்படிப்பார்கள். சுவாமியின் இன்னும் ஒரு அன்பரான சோமசுந்தர பண்டிதரும். இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராகவிருந்தார். அங்கு அவர் சமயமும் தேவாரமும் (பண்) கற்பித்துவந்தார். பண்டிதர் சுவாமியின் குருவான செல்லப்பா சாமியை நன்கு அறிந்தவர். இராமநாதன் இக்கல்லூரியை ஆரம்பித்த தினத்தில் செல்லப்பா சாமி ஒரு விசிறியைச் சேர். இராமநாதனுக்கு கொடுத்து ஆசீர்வதித்து சென்றார் என பண்டிதர் இராமநாதன் கல்லூரி சஞ்சிகை ஒன்றில் எழுதியுள்ளார் சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் பெரியாரிடம் பேரன்புவைத்திருந்தார்.



நான் பெரியார் மயில்வாகனத்தை 1926-27ம் ஆண்டுகள் வரையில்தான் சந்தித்தேன். நான் அப்பொழுது இந்துக்கல்லூரியில் சீனியர் வகுப்பில் படித்துக்கொண்டு இருந்தேன். பெரியார் சைவ வித்தியாவிருத்திச்சங்கத்தில் கடமையாற்றிக் கொண்டு இருந்தார். அப்பொழுது இவர் கஸ்தூரியார் முத்துக்குமாருவீட்டுக்கு தெற்குப்பக்கத்தில் ஒரு சிறு விடுதி நடாத்தினார் அதில் அவர் தம்பியார் சரவணமுத் வும்வேறு இரண்டு ஒரு பையன்களும் இருந்தனர். இவர் மகன் ஸ்ரீகாந்தா பொழுதுபட வந்து இரவு விடுதியில் தங்கி காலையிலும் படித்துவிட்டு சிராம்பி அடியில் இருந்த பேத்தியார் வீட்டுக்குப்போவார். பெரியாருடைய அனுமதியுடன் நானும் அங்கு தங்கிப்படித்தேன் இதனால் நான்அடைந்த பயன் சொல்லில் அடங்கா. வைத்தியர் முத்துக்குமாரின் மகன் கதிரவேலுப்பிள்ளை மருமகன் காராளசிங்கம் எனது நண்பர் ஆகினர் எனக்குப் பல துறைகளிலும் வழிகாட்டியாக விளங்கிய கலைப்புலவர் நவரத்தினத்தையும் இவரே எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். நான் பரீட்சை எடுத்தபின்பு புத்தகங்கள் வாசிக்க விரும்பினேன். அப்பொழுது பெரியார் ஒரு 'புத்தகப்பித்தனை' உனக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன் எனச்சொல்லி கலைப்புலவரை அறிமுகம் செய்து வைத்தார்.

யோக சுவாமிகளும் அடிக்கடி நாமிருக்கும் விடுதிச்சாலைக்குவந்து அதனைப் புனிதப்படுத்துவார். ஒருமுறை நாமிருந்த விடுதியில் மகா சிவராத்திரியைக் கொண்டாடினோம். சுவாமிகளும் வந்திருந்து சிறப்பித்தார் பெரியார் மூலம் வண்ணார்பண்ணை பிரமுகர்களான எம் எஸ். இளையதம்பி, ரி. என் சுப்பையா, சி. சி. சோமசேகரம் த முத்துசாமிப்பிள்ளை முதலியோரை அறிந்துகொண்டதுடன் மேலே கூறப்பட்டவர்களும் வேறு சிலரும் மாலையில் சுப்பையா வீட்டுத் திண்ணையில் கூடிப்பல விஷயங்களைப் பற்றி உரையாடுவார்கள். பக்கத்திலிருந்த தில்லைப்பிள்ளை கிளப்பிலிருந்து காப்பி யாராவது ஒருவர் வாங்கி எல்லோருக்கும் வழங்குவர். இது 19ம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்த காப்பிக் கிளப்புக்களை ஞாபகப்படுத்தும்.

## சிவதொண்டன்

## பத்திரிகை ஆரம்பம்

சுவாமிகள் 1934ம் ஆண்டளவில் சிவதொண்டன் பத்திரிகையைஆரம்பித்தார் சுவாமிகளின் கேள்விப்படி அஷ்டவக்கிர கீதையைக் குறிப்புரையுடனும் மேற்கோள்களுடனும் தமிழில்ப் பெயர்த்து சிவதொண்டனில் வெளியிட்டார். இம்மொழி பெயர்ப்பை நூலாக வெளியிடும் நோக்கத்துடன் பழைய சிவதொண்டன் இதழ்களைத் தேடிப் பெற்று முழுவதையும் பிரதி செய்து வைத்துள்ளார். அவர் காலத்தில் இதனை வெளியிடச் சாத்தியப்படவில்லை இப்பொழுது அவருடைய ஞாபகார்த்தமாக அதனை நூலாக வெளியிட்டால் நன்றாயிருக்கும்.

செல்லப்பாச் சுவாமிகள் யோகசுவாமிகளுக்கு உபதேசம் செய்த மகாவாக்கியங்களான ''ஒரு பொல்லாப்புமில்லை'' ''எப்பவோ முடிந்த காரியம்,, ''யாம் அறியோம்'' ,'முழுதும் உண்மை'' என்பவற்றுக்கு வேதாந்தசித்தாந்த பரமாகவும் வியாக்கியானம் எழுதி சிவதொண்டனில்வெளியிட்டார். இவை 'இன்பம்' என்னும் தலைப்பில் சிவதொண்டன் பதிப்பாக வெளிவந்தது. இதன் ஆங்கிலமொழிபெயர்ப்பு (இதனை ஆங்கிலத்தில் எம். பாலசுந்தரம் எம்.பி.என்பர்) ''Eternal Bliss'' என்னும் தலைப்பில் வெளிவந்தது.

## தினகரன்

## ஆசிரியராக....

பெரியவரின் பத்திரிகைத் தொண்டைப்பற்றி குறிப்பிடும்பொழுது அவரும் வை. இராமநாதனும் தினகரனுக்கு ஆரம்ப ஆசிரியர்களாக இருந்தார்கள் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

மகன் உத்தியோகத்தில் அந்தக்காலந்தொடங்கி அவருடன் இருந்து வந்த பெரியார் 1938ம் ஆண்டு தொடக்

(12ம் பக்கம் பார்க்க)


நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

கொழும்பு சென்று பயணச் சீட்டுக்களைப் பெறுவதில் உள்ள

★ தாமதம் ★ வீண் செலவு

ஆகியவற்றைத் தவிர்த்து யாழ். நகரிலேயே உங்கள் பயணச்சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச் சீட்டுகள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல் தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவுசெய்து கொள்ளலாம்.

FLY
To many parts of the world
at Unbeatable Rates

TFC
த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
போன்: 23680


## என்னத்தான் என்ன சொன்னர்?

அன்புடன் அத்தான் என்னை
தன்னுடன் அணைத்துக் கொண்டு
என்னத்தான் அன்று சொன்ன
வார்த்தைகள் பற்றி நானும்
இன்றும்தான் எண்ணிப் பார்த்து
வியப்புடன் பாடும் பாட்டை
அன்பர்காள் பாடிப் பார்ப்பீர் !
என்னதான் நினைக்கின்றீரோ?

★

கருங்குழல் முகிலே என்றார்!
நுதலது பிறையே என்றார் !
இருவிழி கயல்கள் என்றார்!
புருவங்கள் வான்வில் என்றார்!
இருவிழி பணிகள வானில்
சுழன்றிடும் சுடர்கள் என்றார்!
இரவிக்கு மலர் வதான
கமலம்உன் முகமே என்றார்!

★

முகதினைப் பார்த்த அத்தான்
சங்கதோ கழுத்தோ என்றார்!
கைகளைத் தொட்டுப் பார்த்துச
செவ்வாழைத தண்டே என்றார்!
கைவிரல் வருடிப பார்த்துக்
காந்தள்தான் இவைகள் என்றார்!
கன்னததை மென்பட்டு என்றார்!
மயிலது குரல்தான் என்றார்!

அதரங்கள் கொவ்வை என்றார்!
பற்களோ முத்து என்றார்!
இதம்தரும் தனங்கள் இரண்டும்
செவ்விள நீர்கள் என்றார்!
இடையினை உடுக்கை என்றார்!
மானது நோக்கு என்றார்!
நடையினைப் பார்த்த அத்தான்
பிடியது தோற்கும் என்றார்!

★

அன்புடன் அத்தான் சொன்ன
இவைகளைக் கேட்ட போது
என்னுள்ளே சிரிப்புத் தோன்ற
மென்னகை புரிந்து கொண்டேன்!
''புன்னகை ஏனோ?' என்றார்!
' என்னைநான மறைக்கவில்லை!
என்னையேன் பிரமன் பாரில்
இப்படிப் படைததான்?'' என்றேன்!

★

''இவ்விதம் சலிபபு ஏனோ?
என்றுஎன் அத்தான் கேட்டார்!
''ஒவ்வொன்றில் கொஞ்சம் கொஞ்சம்
எடுத்துஏன் படைததான் எனை?
இவ்விதம் படைத்த எனனில
எனக்கென்று என்ன உண்டு?''
இவ்விதம் கேட்ட போதில்
''கிளிமொழி உனது'' என்றார்.

ச. முருகையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

[5ம் பக்கத் தொடர்ச்சி]

பொம்மையுமாயிருக்க வேணும் ஆனபடியால்தான் இந்த மாதிரி கணவன் வேறு மனேவி வேறு குழந்தை வேறு என்று குடும்பத்தை அக்கு வேறு ஆணிவேருகப் பிரித்து வீசிக் கொண்டிருக்கிருர்கள். அவங்கள் பள்ளிக்கூடப்பிள்ளேகளின்ரை நன்மையையும் பார்க்கிறேம் என்கிருங்கள். உவாத்திமாரின்ரை பிள்ளேகளுடைய நன்மையைப் பாக்கிருங்களில்லே. ''அப்பா! அப்பாவெண்டு என்மேலே உயிரையே வைச்சுக்கொண்டு என்னே அரைநிமிஷமும் பிரிய முடியாமல் அழுகிற என் மகன் இனிமேல் நிரந்தரமாக அப்பா இல்லாதவனுக வளரப் போகிருனே!'' என்று தன் மனத்தினது தீர்மானத்தோடு கலந்து யோசித்தபோது அவன் கண்கள் கலங்கின.

வீதியில் தன்னே மறந்து கடந்தவன் எதிரே நடந்த ஜோடிப் பார்வையில் தைக்கவே சுய நினைவையடைந்தான். கைகளேப் பிடித்தபடி காற்றுப்புகாத நெருக்கமாக ஒருவரோடொருவர் உரசியபடி அவர்கள் நடந்தனர். ''சீ மிருகங்கள்... இதுகள் மாதிரி நாயளாலேதானே மற்ற இளசுகளும் பார்த்துக்கெடுகுது. இப்பநான் பார்த்த மாதிரி இன்னெரு கல்யாணம் பண்ணுதவன் பார்த்தால் அவன் மனம் என்னபாடுபடும் என்று ஏதோ தான் பெரிய துறவி என்பதுபோல் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். ஆனல் அவன் மனம்- ''அந்தா! அவள் அவனுடைய மனைவியாய் இருக்க முடியாது. அதுதான் வீதியில் ஜோடிபோடுதுகள். இது எனக்கு ஒரு மனேவியிருந்தும் ......ஹூம்!'' என்று சொல்லிக்கொண்டது. அவனுடைய மன உழைச்சலே இடையில் தடுக்கிற மாதிரி எதிரில் வந்த சுந்தரமூர்த்தி பேச்சுக்கொடுத்தார்.

''என்ன மிஸ்டர் நிர்மலன்.. மிஸிஸ் போய் விட்டாவோ?'' என்று அவர் கேட்டதனை அவனுடைய நமட்டுச்சிரிப்பு ஆமோதித்தது.

''அப்ப இனி உங்கபாடு கடையிற் சாப்பாடுதான்'' என்று சுந்தரமூர்த்தியின் பக்கத்தில் நின்ற அவர் மனேவி சொன்னுள். அவள் கையில் ஒருகூடை. அவளது கணவனுடைய கையில் ஒரு கூடை. இரண்டினுள்ளும் காய்கறிகள். அவற்றினமேல் நிர்மலனின் கண்கள் படபடத்தன. ''நாங்கள் மாக்கெற்றுக்குப் போயிற்றுவாறம். இனி நாளேக்கு ஒபீஸ் நாள். இவருக்கு நேரமிராது அதுதான் இண்டைக்கே கொஞ்சம் வாங்கிக்கொண்டுபோய் வச்சால் ஒரு கிழமையைச் சமாளிக்கலாம். மனுஷன் உழைக்கிறதே முக்கியமாய் சாப்பாட்டுக்காகத்தானே. அதை ஒழுங்காக்காமல் ஓடியாடி உழைச்சுத் தான் என்னபலன். என்று அந்தப்பெண் சம்பந்தா சம்பந்தமில்லாமல் சிரித்தபடி பேசினுள். ''நாங்கள் வருகிறேம்'' என்று அவர்கள் விடைபெற்றுப் போனபின்னர், தொடர்து வீதியில் நடந்த போதும் தன்மனம் பெரிய இழப்பை நினைந்து வருந்துவதாக உணர்ந்தான். படமாளிகையில் 'ரிக்கெற்' வாங்கிக் கொண்டுபோய் இருக்கையில் அமர்ந்து சற்று ஆறுதலாக யோசித்தபோது மனத்தில் துயரத்தின் தன்மையை இனம் காணமுடிந்தது.

மனேவியை ஒரு சேவை செய்யும் தாதியாக அன்றுட வாழ்வில் பங்கு கொள்ளும் தோழியாக அடையமுடியாமற்போய் வாசனேமலராக மணம் வீசவேண்டிய திருமணம் தன்வரையில் காகிதப் பூவாகிவிட்டதை அவன் உணர்ந்தான். அவளே வேலேக்குப் போகாதே என்று வீட்டில் வைத்துப்பராமரிக்கும் தற்றுணிபு தனக்கில்லாமலிருப்பதை மட்டும் அவனல் எண்ணிப்பார்க்கமுடியவில்லே. அவன் அவ்வாறு குழம்பிக் கொண்டிருக்கும் போதே படத்தின் பெயர் திரைமுழுவதும் விழுந்தது. அவன் மனக்குழப்பத்திலிருந்து விடுபட்டு வாசிப்பதற்கிடையில் அது அழிந்துவிட்டது. என்னவோ ரத்தம் என்ற சொல்தான் அந்தப் படத்தின் பெயர் என்று அரைகுறையாக மனதில் படிந்தது. ஆரம்பத்தில் தலேவிரிகோலமாக உருக்கொண்டு சாமியாடுவதுபோல் ஒரு பெண் ஆடிக்கொண்டிருந்தாள். பின்னர் பெண்களும் ஆண்களுமாக அரைகுறை நிர்வாணத்துடன் படத்தில் ஓடியாடிக்கொண்டிருந்தனர். இடையிடையே பாடல்களும் இருக்கத்தான் செய்தன. தியேட்டர் முழுவதும் விசிலடி பரவிய அந்தப்பாடலேக் கேட்டநிர்மலனுக்கு வியப்பாயிருந்தது.

''அடே! இந்த மாதிரிப் பாட்டுக்களேயெழுதக்கவிஞரா தேவை. எங்கடை சந்திச் சாத்திரியார் போதாதா? இதுக்கு இசையமைக்க இசையமைப்பாளர் தேவையா? எங்க வீட்டுக்கு எதிர்வீட்டுச் சிறுவன் வாய்ப்பாடு பாடமாக்குகிறமெட்டு இதைவிடப் பரவாயில்லேயே!'' என்று அவன் மனம் சொல்லியது.

அந்தச் சாத்திரியார் நினைவு சற்றுநேரம் மனதைவசப் படுத்தியது. அந்தமனிதர் ஏதோ கொஞ்சம் படித்தவராயிருக்கவேண்டும் சந்தியிலுள்ள தேநீர்க்கடைவாயிலில் பகலும் இரவும் நிற்பார். அந்தப்பக்கம் வருவோர் போவோரை விடவேமாட்டார் சாத்திரம் சொல்கிறேன் என்று பிடித்துக்கொள்வார். அசுசையான வார்த்தைகளேச்சில நாகரிக வார்த்தைகளுள் பொதித்து அடுக்குமொழி வாக்கியங்களே அமைத்து அவர் சொல்லும் போது அதுவும் கவிதையுருவம் பெறும். கேட்பவர்காது சகிக்காமல் சில சில்லறைகளே அவரிடம் விட்டெறிந்துவிட்டு விலகிக்கொள்வார்கள். அந்தச் சாத்திரியாரிடம்தான்அகப்பட்டசந்தர்ப்பங்களேயும் தன்கண்முன் பிறர் அகப்பட்ட சந்தர்ப்பங்களேயும் எண்ணிச் சற்று நேரம் தனக்குத்தானே சிரித்தான். அவனுடைய ஆசனத்துக்குமுன் வரிசையில் அவனுக்கு முன்பதாக இருந்த இரு பெண்கள் ''சீ! அசிங்கம்'' என்று பெரிதாக முணுமுணுக்கவே மனதுள் ஒடுங்கியிருந்த அவன் சிந்தனையை விட்டு வெளியேறி வெள்ளித் திரையில் பார்வையைப்பதித்தான். ஒரு பெண்ணின் அரை உருவம் ஆடையில்லாமல் வெள்ளித்திரையின் முக்காற்பகுதியைப் பிடித்துக்கொண்டு நின்றது அதன் மேல் அவனுக்கு அங்கிருக்க மனம் பிடிக்கவில்லே. வாயிலில் நின்றவனிடம் ''தலேவலிக்கிறது என்னே வெளியே போக விடு'' என்முன்.

''படம் முடியப்போகுறது இன்னும் கொஞ்ச நேரம் இருந்து பாருங்களேன்'' என்ருன் காவல்காரன்.

''இல்லே... தலேவலி பொறுக்கமுடியவில்லே'' என்று வெளியே வந்தான். ''சீ அசிங்கம்'' என்று கதவோரமிருந்த வேறு பெண்களும் முணுமுணுப்பது அவன் வெளியேறும்போது காதில் விழுந்தது மானசீகமாக அந்தப் பெண்களுடன் தத்துவம் பேசினுன். திரையில் தெரியும் அதுவும் பெண்ணுரு. [illegible] மாலதியும் பெண்ணுரு. [illegible]ளும் பெண்ணுருக்கள்' இதிலெது உசத்தி. எது அசிங்கம்... எல்லாப் பெண்ணுருவும் ஒன்றுதான்' என்று அவன் மனம் சொல்லியது.

அவன் மறுபடி வீட்டினுள் வந்து விழுந்தபோது வீட்டுச் சொந்தக்காரரெல்லாரும் தங்களுடைய மாடிப் பகுதியில் அடங்கிவிட்டிருந்தனர். அவனுடைய அடுத்த அறைப் பெண்களும் தமது அறையுள் அடைந்து விட்டனர். ஹாலில் அமர்ந்து ஏதோ சனவுகண்டு கொண்டிருந்தாள் ஷீலா. இந்த ஷீலாவும் ஒரு பெண் உருவம் என நிர்மலனின் மனம் சொன்னது. அவளேப் பார்த்து மெதுவாக ''உஸ்'' என்ருன். திடுக்கிட்டவளாய் அவனேப்பார்த்த ஷீலாவின் கண்கள் ''ஏன்?'' என்று கேட்டன.

''ரீச்சர்... நான் தமிழில் படிக்கவில்லே ஒழுங்காக எழுத வராது. ஆனல் ஒரு அவசரக்கடிதம் தமிழில் எழுதவேணும்'' என்ருன்.

''அதற்கென்ன காலேயில் எழுதித்தருகிறேன்'' என்ருள் அவள்.

''சின்னக்கடிதம் தான், இப்ப எழுதினுலென்ன?'' என்ருன் அவன்.

''சரி தாளேயும் பேனவையும் கொண்டு வாருங்கள்' என்ருள் ஷீலா. ஏன் ரீச்சர் என்ரை அறைக்குள்ளேயே வந்திருந்து எழுதினுலென்ன?'' என்றவனே நிமிர்ந்து பார்த்தாள். அவன் கண்களிருந்த உணர்ச்சிக் குறிப்பைப்பார்த்ததும் அவளுக்கு அருவருப்பு ஏற்பட்டது.

''சீ! நீயும் ஒரு மனிதனு?'' என்று ஒரு பார்வையை வீசிவிட்டுத் தன் அறையுள் வேகமாக நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்ட ஷீலா தன் காதலனுக்கு ஒரு கடிதம் எழுதத் தொடங்கினுள்.

''அன்பரே! நான் வேலேயை ராஜிநாமாச் செய்து விட்டுவருகிறேன். என்னே ஒரு வேலேக்காரியாக ஏற்றுக்கொண்டால் போதும்'' என்று எழுதத் தொடங்கியவள் ''ஒருவேளே இத்தனே காலதாமதம் நான் செய்ததால் அவரும் நிர்மலன் போல் மனம் மாறி இருந்தால் ...'' என்று எண்ணிப் பார்த்தாள். நெஞ்சு வலித்தது. ''இல்லே! நான் அவரை விடமாட்டேன். மாறவிடமாட்டேன்'' என்று முணுமுணுத்தபடி எழுதி முடித்தாள். ராஜினமாக்கடிதத்தையும் எழுதினுள். அது முடிந்ததும் பெட்டி படுக்கைகளே அடுக்கினுள். 'நாளேக்குக் காலமை ஆறுமணிக்கு வெளிக்கிட்டால் மத்தியானம் அவ[illegible] மனம் மிகவும் மகிழ்ந்தது.

(யாவும் கற்பனே)

# பாவகை பாடிய வாயால்

# கோவை ஒன்று பாடினர்

நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பாலப் பருவத்திலேயே பைந் தமிழ்ப் பாவலனுய்த் தனிப்பாடல்கள்பாடியதோடு, கல்வளேயந்தாதி, மறைசையந்தாதி என்னும் இரு பிரபந்தங்களேப் பதினேத்து வயதுக்

## க.சி. குலரத்தினம்

குள் பாடிமுடித்தபின்; பருளே விநாயகர் பள்ளு என்னும் மக்கள் இலக்கியத்தையும் பாடினுர். அதன்பின் நாலு மந்திரி கும்பி என்னும் நூலேயும் நயந்ததும்பப்பாடி முடித்தார் என்பது பிரமிப்புக்குரிய பிரயத்தனமாகும்.

இங்ஙனம் பிள்ளேப்பராயம், குமாரப்பராயம் முழுவதும் பாடல்கள் பாடியவண்ணம் வளர்ந்த புலவருக்கு; உணவு உடை உறைவிட வசதிகள் யாவும் உறுதியாக இருந்தன. தாமுண்டு தமிழுண்டு என்று தமிழ்த்தொண்டு செய்துவந்த புலவரிடம் நண்பர்கள் பலர்

### சின்னத்தம்பிப் புலவரின் பள்ளுப்பிரபந்தம்

கடந்த வாரம் வெளிவந்த ஈழத்தவரின் உள்ளத்தைத் தொட்ட பள்ளு என்னும் பந்தியில் இரண்டு வரிகள் விடப்பட்டுப் போயின. அவற்றை இங்குத் தருகிறேம். கதிரைமலேப் பள்ளு, ஞானப் பள்ளு பருளே விநாயகர் பள்ளு, மாந்தைப்பள்ளு, குருவிப் பள்ளு, கனகராயன் பள்ளு எனப்பல பள்ளுகள் பிரதேசங்கள் தோறும் எழுந்துள்ளன.

டாரக்குளத்தடி நெல்வயலேச் சின்னத்தம்பிப்புலவருக்கு நன்கொடையாக எழுதிக்கொடுத்துப் பாராட்டினுர் என்ப.

வயலேப் பெற்றுக்கொண்ட புலவர், கணேசஐயர் மீது நயந்ததும்பும் பாடலொன்று பாடினுர் என்ப. கொங்கணர்களுள் தலேவராய ஐயர் அன்று காளிங்கன் என்னும் பாம்பின் தலேயில் நடனமாடிய கண்ணனே நிகர்த்தவர் என்னும் பொருளில், ''நச்சுப்படவரவின் நடனம்புரி திம்ம ராசகணேச நரேந்திரனே'' எனப்பாடியுள்ளார்.

### கரவெட்டி

### வேலாயுதனுர் வைபவம்

வடமராட்சியில் கரவெட்டியூரில் வாழ்ந்த பெருங்குடும்பத்தைச் சேர்ந்த இருபெரியவர்கள் ஏதோ காரணமாகத் தம்முள் மாறுபட்டுப் பொருமையும் போட்டியும் மேலிட ஒருவரை ஒருவர் தூற்றியும் பகைத்தும் வாழ்ந்தார்கள்.

## தமிழ்தந்த தாதாக்கள்

வந்து தமிழ் உண்டு போனுர்கள். அக்காலத்தில் வண்ணுர் பண்ணேயில் வாழ்ந்த பெருஞ் செல்வரும் படிப்பாளியுமான கணேசையர் என்பவர் மனேயில், கற்றவர்கள் கூடிக்கலந்துரையாடிப் போவது வழக்கம். ஒருநாள் கம்பராமாயணச் செய்யுள் ஒன்றை விரித்து நயம்பட உரை கூறி விமர்சனஞ்செய்து சின்னத்தம்பிப் புலவரின் சாமர்த்தியத்தை மேதாவிலாசத்தை அனுமானித்த ஐயர் அவர்கள், அன்புமிகுதியால் தமது பண்

அவர்களுள் ஒருவர் வேலாயுதபிள்ளே. அவர் சேதுநிலேயிட்ட மாப்பாணமுதலியாரின் செல்வமைந்தர், அவர் பெருஞ் சிறப்புகள் பரிசனங்களோடு தமிழ்நாடெங்கும் தலயாத்திரை செய்துபெருமை பெற்றிருந்தவர் புதுநாச்சி என்னும் சகோதரியாரையும் சிற்றம்பலம் என்னும் மைந்தனேயும் தவப்பேருகக் கருதி வளர்த்தவர்

தமது ஊரில் பலவிதமான தானதருமங்கள் செய்து ஏழைகளுக்கு நல்வாழ்வளித்தவர். அவர்தமதுபகுதிகளில் ஏழிடங்களில் பெருமடங்கள் அமைத்துப் பெருஞ்சோறளித்து எல்லோரையும் காத்தவர். அவர்

(14-ம் பக்கம் பார்க்க)

## கைலாசபதி

(6 ம்பக்கத் தொடர்ச்சி)

இஷ்ட தெய்வமான நாகபூஷணி அம்பாளே நினேந்து உருகிப்பாடினுரோ எனத்தெரிகிறது

தமிழ் மணம்

என்ற பாடல்

இதன்பின் தமிழர் வாழ்வில் தமிழ்பெறவேண்டும் என்ற கருத்தினே அழுத்திக் கூறும் 'தமிழ் மணம்' என்ற பாடல் நன்கு இசைக்கப்பட்டது. தொடர்ந்து பஜனும், திருப்புகழும் இடம்பெற்றன.

கர்நாடக பிரபல இசை வித்துவான் ஆகிய மதுரை சோமு அவர்களின் பிரதம சிஷ்யர்களில் ஒருவராகப் பயின்று ''சங்கீத பூஷணம்'' பட்டம்பெற்ற திரு. நவரத்தினம் தமது குருநாதரின் இசைப்பாணியினேத் தமது கச்சேரியிலே திறம்பட வெளிப்படுத்தினுர் மதுரை சோமு அவர்களே இளமைப் பொலிவுடன்வந்து பாடினுரா என்று பலருக்கும் எண்ணத்தோன்றிற்று இக்கச்சேரிக்குத் தக்கவாறு, வயலின், மிருதங்கம், மோர்சிங், தம்புரா ஆகியவற்றை முறையே இசைத்த திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி, திரு ப. கிருபாகரன், எஸ். இராசா, செல்வி எஸ். சிவரஞ்சினி ஆகியோர் பாராட்டுக்குரியர்,

கைலாசபதி கலே அரங்கிலே நல்லதோர் சம்பிரதாய பூர்வமான இன்னிசை விருந்து நடைபெற்றதெனக் கூறி ரசிகர்கள் மகிழ்ந்தனர்; கலேஞரை வாழ்த்தினர்.

## பெரியார்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் தமது பிறப்பிடமான அளவெட்டியில் வசிக்கத் தொடங்கினுர். அக்காலத்தில் கும்பழாவளே கோயில் சம்பந்தமாக ஐயர்மாருக்கும் ஊரவர்களுக்குமிடையில் நெடுங்காலமாக ஒரு வழக்கு இருந்து வந்தது பெரியாரின் விசேட முயறசியால் இருசாராருக்கும் ஏற்ற உடன்படிக்கை ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கைக்கு அமைவாக பெரியார் தர்மகர்த்தா சபைக்குத் தலேவராகத் தெரிவு செய்யப்பட்டார் அக்காலந் தொடங்கி 1983 ம் ஆண்டு வரை அவரே தலேவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இக்காலத்தில் கோயில் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்தது. இவர் காலத்தில் கட்டப்பட்டவையும் புதுப்பிக்கப்பட்டவையும் பின்வருவன; தண்ணீர்த் தாங்கி, இராஜகோபுரம், வெளிமண்டபம், தேர்முட்டி, மணிக்கூட்டுக்கோபுரம் முதலியன

ஊருக்கு நன்மை பயக்கும் பின் வரும் சபைகளுக்குத் தலேவராகவும், போஷகராகவும் இருந்துள்ளார். அளவெட்டி சைவ வாலிபர் சங்கம், அளவெட்டி கிராமமுன்னேற்றச் சங்கம், அளவெட்டி இசைக் கலே மன்றம் முதலியன

இப்படிப் பல்லாற்ருனும் தொண்டாற்றிய பெரியார் 22-6-84 ல் சிவபதபடைந்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சொல்லோவியம்

''திருவிளையாடல்'' திரைப்படம் முருகபுரம் கிராமத்துப் படமாளிகையில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருந்தது. பண்டிதர் பரமசிவம் திரைப்படம் பார்க்கப்போவதுமில்லை, திரைப்படப் பாடல்களைக் கேட்டுச் சுவைப்பதும் இல்லை. இருந்தும் தன் மனைவி மக்கள் திரைப்படம் பார்ப்பதைத் தடுப்பதுமில்லை. மாதத்தில் ஒருமுறை பண்டிதர் பரமசிவத்தின் குடும்பத்தினர் திரைப்படம் பார்க்கப் போவது வழக்கம். அப்போதெல்லாம் பண்டிதர் அவர்களுக்கு நிறையப் பணம் கொடுத்து அனுப்புவார். தான் மட்டும் வீட்டிலிருந்து திருவாசகம் படித்துப் பேரின்பக் கடலில் மூழ்குவார்.




பார்க்கப்போகும் படலத்தைத் தொடங்கியது.

''பண்டிதர் பரமசிவம்
படம் பார்ப்பார்
இண்டைக்கு மழைவரும்
ஓம், வரும்''

எனக் குறும்புக்காரப் பையன் ஒருவன் தாளம்போட்டுப் பாடினான். கண்ணாடி விளக்கு, நெருப்புப் பெட்டி ஆகியவைகளுடன் பரமசிவம் புறப்பட்டார். கமுக்கட்டில் ''திருவாசகம்'' ஒரு புத்தகம் இருந்தது. கொட்டகைக்கு வந்ததும் எல்லோருக்கும் பரமசிவம் நுழைவுச் சீட்டு எடுத்துக் கொடுத்தார்.

''இந்தா அப்பா! நீங்கள் எல்லோரும் படம்பார்த்து விட்டு வாருங்கள். நான் இப்படி இருக்கிறேன்'' என்றார் அவர். அவரின் குணம் தெரிந்த மனைவி எதுவும் பேசவில்லை. படம் தொடங்கி வெற்றிகரமாக ஓடியது. பண்டிதர் பரமசிவம் தூரத்தே போய்த் தன் கண்ணாடி விளக்கை ஏற்றினார். திருவாசகத்தில் ஒன்றிப்போனார். படம் முடிந்தது. எல்லோரும் வெளியே வந்தனர். பண்டிதர் தன் விளக்கு வெளிச்சத்தின் துணையோடு குடும்பத்தினருடன் வீடுபோய்ச் சேர்ந்தார். அவருக்கு வாழ்வில் வெளிச்சம் தருவது திருவாசகம்.

இது நடந்தது பல ஆண்டுகளுக்கு முன். இப்போது பண்டிதரின் குழந்தைகள் வளர்ந்து விட்டனர் ஆகவே அவர்

# திரைப்படம் பார்த்த கதை

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நிகழ்ச்சி. அப்போது முருகபுரத்தில் நிரந்தரமான படமாளிகை இருக்கவில்லை. ஆண்டுக்கு ஒருமுறை திரைப்படக் கொட்டகையொன்று அமைக்கப்படும் இந்தக் கூடாரத்தில் படங்கள் காட்டப்படும். ஏதோ ஒரு படம் காட்டப்பட்டது பண்டிதரின் மூன்று குழந்தைகளும் ''படம் பார்க்கப் போகின்றோம்'' எனச் சிணுங்கி அழுதன. பண்டிதர் பரமசிவம் பிள்ளைப் பித்தன். தன் குழந்தைகள் அழுவதை அவர் விரும்பவில்லை. முருகபுரம் கிராமத்தில் எல்லோரும் அந்தக் கூடாரத்தில் படம் பார்த்துவிட்டனர், பண்டிதரின் குடும்பம் மட்டுமே போகவில்லை. 'திரைப்படம் பார்த்தல் என்பது சுத்த மாயை'' என்பது பண்டிதரின் கருத்து.

களின் தூண்டுதலின் பேரில் பண்டிதர் ''திருவிளையாடல்'' படம் பார்க்கப் போனார். அங்கே படமாளிகையில் பண்டிதர் திருவிளையாடல் புரிந்தார். வெள்ளித் திரையில் மதுரை மீனாட்சியம்மை கோயில் வந்தது. தன்னை மறந்தார் பண்டிதர். சால்வையை எடுத்து அரையிலே கட்டினார். எழுந்து நின்றார். கண்களில் கண்ணீர் மல்கியது. ''அம்மையே! அப்பா! மதுரை மீனாட்சித் தாயே! எந்தையே சொக்கநாதா! சரணம்! சரணம்! சிவனே போற்றி! போற்றி'' என்றார். படத்தை விட்டுவிட்டு எல்லோரும் பண்டிதரைப் பார்த்தனர். படமாளிகை முகாமையாளர் ஓடி வந்தார். வந்து மின்சூழ் வெளிச்சத்தில் பண்டிதரைப் பார்த்தார். முகாமையாளர் பண்டிதரின் மாணவன். பண்

**த. சண்முகசுந்தரம்**

அயல்வீட்டுப் பிள்ளைகளும், பெண்களும் திரைப்படம் பார்த்து விட்டுவந்து கதையைச் சொன்னார்கள்; காட்சியை வர்ணித்தனர்; பாடலின் இனிமையை எடுத்துச் சுவைபடக் கூறினர் இதனால் பண்டிதரின் பிள்ளைகளின் அழுகை மேலும் கூடியது. செய்வது இன்னதென்று அறியாத பண்டிதரின் மனைவி பண்டிதரின் முகத்தைப் பார்த்தாள் பரிதாபத்துடன்.

''நல்லது! இன்றைக்கு இரவு நாங்களும் படம பார்க்கப் போவோம்'' என்றார் பண்டிதர். பண்டிதரின் மனைவிக்கு ஒரே மகிழ்ச்சி. குழந்தைகளின் உடுப்பையெல்லாம் தோய்த்துக் காயவிட்டு மடித்துவைத்தார் பண்டிதர். மனைவியோ நேரத்துடன் சமையலை முடித்துவிட்டார் ஆறு மணிபோலப் பண்டிதரின் குடும்பம் படம்

டிதரின் குணம் அவருக்குத் தெரியும். நன்றி மறவாத மாணவன் பண்டிதரின் கையைப் பிடித்துத் தன் கண்ணில் ஒற்றினான்.

''பண்டிதர் ஐயா! இப்படி வரவேண்டும்'' எனப் படமாளிகையின் பின்புறமாக நாற்காலி ஒன்றைப் போட்டு அவரைத் தன்னந் தனியே இருந்து படம் பார்க்கவைத்தார்.

ஆனந்தக் கடலில் ஆழ்ந்த பண்டிதர் பரமசிவம் படத்தைப் பார்த்து அழுதார்; சிரித்தார்; புலம்பினார்.

''இங்கே கதை பிழை. திருவிளையாடற் புராணத்தில் இப்படியில்லை ஒரே கொலை! நாவலரின் திருவிளையாடற் புராண வசனத்தில் இப்படி நிகழ்ச்சி இல்லை'' எனக் கண்டனக் குரலும் எழுப்பினார்.

படம் முடிந்தது. எல்லோரும் வெளியே வந்தனர்.

# ஆத்மீகம்-அறிவு-சமாதானம்

# சிவமகாராஜ்ஜின் குறிக்கோள்



ஸ்ரீ பாலசிவ யோகேந்திர மகராஜ் அவர்கள் இன்று இந்தியாவில் தலைசிறந்த ஆத்மீக ஞானியாக விளங்குகிறார். அல்லலுறும் உலகிற்கு ஆன்மீக ஒளிகாட்டும் அவதார புருடராகத் திகழ்கின்றார். சுவாமிகள் இலங்கையில் நடைபெற்ற உலக இந்து மாநாட்டிற்கு வருகை தந்து மாநாட்டிற்கே ஒரு தனிச் சிறப்பை ஏற்படுத்தினார். அம்மாநாட்டிலும், வேறுபல நிகழ்ச்சிகளிலும் அநேக அற்புதங்களைக் காட்டி

**எஸ். ஐ. தனபாலசிங்கம்**
செயலாளர், ஸ்ரீபாலசிவ சர்வதேச சமாதான ஸ்தாபனம், யாழ்ப்பாணக் கிளை

மக்களைத் தெய்வீக உணர்ச்சிக்குள்ளாக்கினார். தமது அட்டசித்திகளின் வலிமையால் மழையை வரவழைத்து அதனை நிற்பாட்டினார். கண்ணிலே தோன்றிய தீப்பொறிகளால் பஞ்சை எரிய வைத்தார். அதன் மூலம் ஹோம குண்டத்தில் தீ மூட்டினார். பக்தர்களுக்கு உருத்திராக்கம், விபூதி, சந்தனம், குங்குமம், தீர்த்தம் முதலான சிவ சின்னங்களைக் கை அசைவினாலே வரவழைத்துக் கொடுத்தார். இவற்றையெல்லாம் அறியாதார் இலர்.

**ஒரே நேரத்தில்**

**எங்கும் காட்சி**

நோய்வாய்ப்பட்டுத் துன்பமுறும் தமது பக்தர்களுக்கு ஆறுதல் கூறி நோயைக் குணப்படுத்தும் காருண்ய சீலர் ஒரே நேரத்தில் பல இடங்களில் காட்சி கொடுத்து அன்பர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்குகின்றார் இத்தகைய மகாபுருடர் வேதாந்த தத்துவ அடிப்படையில் சர்வதேச சமாதானத்தையும் நல்வாழ்வையும் நிலைநாட்டுவதற்கு அயராது உழைத்து வருகின்றார் இந்நோக்குடனேயே சுவாமிகள் ஸ்ரீபால சிவ சர்வதேச சமாதான நிறுவனத்தை உருவாக்கியுள்ளார். இந்நிறுவனம் விசாகபட்டணம் பெங்களூர், ஹைதரபாத், டெல்கி, சென்னை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கிளைகளைப் பரப்பி பெருந் தொண்டாற்றி வருகின்றது. மக்கள் பணியே மகேஸ்வரனுக்குச் செய்யும் பணியென்னும் இலட்சியத்துடன் இந்நிறுவனத்தின் கிளைகள் பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு மக்களுக்குப் பெருந் தொண்டாற்றுகின்றன.

**சுவாமிகள் அவதாரம்**

ஆந்திர மாநிலத்தில் கடப்பை மாவட்டத்திலுள்ளநெல்லூரிலே தம்மணுப்பள்ளி என்னும் கிராமத்தில் 27-7-54ல் சிவபக்தியில் சிறந்த இலட்சுமி அம்மையாருக்கும், ரேசையா என்பவருக்கும் புதல்வராக 'ஈஸ்வரபிரசாத்' என்னும் பெயருடன் அவதரித்தவர் தான் இன்று அவனி போற்றும் ஸ்ரீ பால சிவயோகேந்திர மகாராஜ் அவர்கள் அந்நாள் முதல் சுவாமிகளின் அற்புத மகிமையினால் பிணியாளர் பலர் சுகம் பெற்றனர் தீராத வியாதிகள் பல சுகப்படுத்தப்பட்டன.

கல்வி, மருத்துவம் ஆத்மீகம் ஆகியதுறைகளில் மனித குலத்தின்சேவைக்காக தம்மை அர்ப்பணித்த சுவாமிகள், இரண்டு. பட்டப்படிப்புக் கல்லூரிகளையும், இரண்டு 'யூனியர்' கல்லூரிகளையும், ஒரு உயர் நிலைப் பாடசாலையையும் ஆரம்பித்து தமது தலைமையின் கீழ் இயக்கி வருகின்றார். தொழுநோய், சுவாசக்குழாய் தொடர்பான தொய்வு நோய் கண்ணோய்கள் ஆதியாம் நோய்களைக் குணப்படுத்தக் கூடிய மருந்து வகைகளையும் சுவாமிகள் தமது யோக மகிமையினால் கண்டுபிடித்துள்ளார் வயதில் குறைந்தவரான சுவாமிகள் விஞ்ஞானப் பட்டப் படிப்பை மேற்கொண்டவர். தெலுங்கு, ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலாம் மொழிகளில் சரளமாகப் பேசுவார், கவிதைகள் இயற்றுவார். ''நான் ஒரு சின்ன சுவாமி குழந்தை சுவாமி என்னிடம் வாருங்கள்; உங்கள் குறைகளைச் சொல்லுங்கள்'' என்று தமிழிலே புன்சிரிப்புடன் சொல்வதைப் பக்தர்கள் மறக்க மாட்டார்கள்.

**பிறந்தநாள் விழா**

பகவான் பாலசிவாவின் 29வது பிறந்தநாள் விழா 27-7-84ல் விசாகப் பட்டினத்தில் குர்நூலுக்கு அண்மையிலுள்ள குலதூர்த்தி என்னும் கிராமத்தில் கொண்டாடப்பட இருக்கிறது. சுவாமிகளது மகிமையை உணர்ந்தவர்கள் நேரிலே அநுபவித்தவர்கள் இலங்கையில் அநேகர் உளர். இவர்களும் இங்கு அமைதியான, ஆடம்பரமற்ற முறையில் விழா எடுக்கின்றனர்,

''டேய்! பண்டிதர் பரமசிவத்திற்கு மூளையிலே தட்டிப் போட்டுது; கிலா!'' என்றான் ஒரு பையன்.

''அவருக்கு இப்போது முப்பது வருஷமாகத்தானே விஷர்'' என்றான் மற்றவன்.

''இல்லையடா! அது விசர்ப் பிறவி'' என்றான் மூன்றாவது பையன்.

[யாவும் கற்பனை]

## உருத்திராட்ச சோலை

அமெரிக்க சைவசித்தாந்திகளின் தலைமையகமான ஹவாய்த்தீவு ஆதீனத்தில் அங்குள்ள தொண்டர்களால் 1978ம் ஆண்டில் 154 உருத்திராட்சக்கன்றுகள் நாட்டப்பட்டன. அவற்றுள் 17 கன்றுகள் 1982ல் வீசிய புயலொன்றினால் சேதமடைந்தன. எஞ்சிய 137 கன்றுகளும் 35 அடி உயர மரங்களாக நீண்டு வளர்ந்துள்ளன மேலைநாடுகளில் உள்ள ஒரேயொரு உருத்திராட்ச மரச்சோலை இதுவாகும். விரைவில் இம்மரங்களிலிருந்து உருத்திராட்ச காய்கள் உதிர்ந்து விடும் என்று தெரிவிக்கப்பட்டது.

தகவல்: திருநெறி

அதிர்ச்சி ஆனல் உண்மை

**காகிதாதிகள்**

பாடசாலை உபகரணங்கள்,
மின்சாரப் பொருட்கள்,
அழகுசாதனப் பொருட்கள்,

யாழ். நகரில் குறைந்த விலையில் தரமான பொருட்களை வழங்கும் ஒரே ஸ்தாபனம்

**அம்பலவாணர் அன் சன்ஸ்**

(கடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்பாக)
196, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24291

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவகை

(12ம் பக்கத் தொடர்ச்சி)

அமைத்த மடங்களுள் தம்பான் மடம், தாளங்குழிமடம் என்பன நீண்டகாலம் நிலவிவந்தன என்பர். இவர் இவ்வகையாகத் தானதருமஞ்செய்வதற்குத் திரைகடலோடித் திசவியந்தேடியவர் இவரிடம் சொந்தமாகக் கப்பல்கள் இருந்தன. அவை திரைகடற்புரவி, சிங்காரப்புரவி எனப்பெயர் பெற்றனவாகும் கப்பலோட்டிய தமிழன் எனப் புகழ்ப் பெற்ற அவர் தமிழ்ப்பற்று, சைவப்பற்று மிகுந்தவர்.

## வல்லரசு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டபோது, இந்திய எண்ணெய்க் கார்ப்பரேஷன் அதற்குக் கொடுக்க முன்வந்த தொகை ஏனைய உலகக் கம்பனிகள் கொடுக்க முன்வந்த தொகையைவிட அதிகமாக இருந்தும், அந்தக் குத்தகை இந்தியாவுக்குக் கொடுக்கப்படாது' ஸ்விட்ஸர்லாந்தைத் தளமாகக் கொண்ட ஒரு பாகிஸ்தானிய நிறுவனம்- மேற்கு ஜேர்மன் நிறுவனம்- சிங்கப்பூர் நிறுவனம் என்பவற்றின் கூட்டுக் கம்பனிக்கு கொடுக்கப்பட்டதையிட்டு சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது இந்த அணியின் சிங்கப்பூர்க் கம்பெனி பல்வேறு சட்டப் பிரச்சினைகளுக்கு உள்ளான ஒருகம்பெனி என்பதோடு, அமெரிக்க சி ஐ ஏ உளவு ஸ்தாபனத்தின் ஒரு மாரீசத் தோற்றமே என்று சந்தேகமும் பல காலமாக இருந்து வந்துள்ளது.

எண்ணெய்த் தாங்கிகளுக்கான ஒப்பந்தத்தில் இராணுவக் கப்பல்களுக்கு அல்லது இராணுவ நோக்கங்களுக்கு எண்ணெய் வழங்குவதைத் தடைசெய்வதற்கான சரத்துக்கள் கண்டிப்பான முறையில் அமைந்திருக்கவில்லை.

இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்து இலங்கை இன்னொரு டிகோ கார்சியாவாக மாறிவருவதை புதுடில்லியிலிருந்து இங்கு வரும் செய்திகள் உறுதிப்படுத்த முற்படுகின்றன.

# நெஞ்சில் நிறைந்த

[3ம் பக்கத் தொடர்ச்சி]

தில் திரு. கதிரவேலுப்பிள்ளை பேசும் சந்தர்ப்பம் கிட்டியது. ''ஈழத் தமிழ் மக்கள் பிரிவினை கேட்கவில்லை பிரிட்டிஷார் இந்த நாட்டைக் கைப்பற்றிய பின் தமது ஆட்சி நிர்வாக வசதிக்காகச் சில மாற்றங்களைச் செய்தார்கள். வெள்ளையரின் வருகைக்கு முன்பு தமிழ் மக்கள் தம்மைத் தாமே நிர்வகித்து ஆட்சிசெய்து வந்தனர். அதனையே நாம் மீளக் கேட்கின்றேம். நாம் புதிதாகப் பிரிவினை கேட்கவில்லை. எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட தமிழ் ஈழத்தையே மீட்டுக்கொள்ள முனைகின்றேம்'' என்று அவர் விளக்கம் கொடுத்தார்.

இப்பொழுது 'சற்றடே றிவியூ' ஆசிரியராக இருக்கும் அன்பர் திரு காமினி நவரத்தின முன்பொருதடவை யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தபோது திரு கதிரவேலுப்பிள்ளையைச் சந்திக்கவேண்டும் என்று விரும்பினர் அவரிடம் கூட்டிச் சென்றபோது நடந்த உரையாடலில், ''தமிழ் ஈழக் கோரிக்கை பங்களாதேஷாக நிறைவேறுமா? பயாப்ரா மாதிரி முடிந்துவிடுமா?'' என்று நான் கேட்டேன்.

''மலேசியா - சிங்கப்பூர் போன்றுஏற்படக்கூடாதோ?'' என்று பதில் கேள்வி கேட்டார் திரு கதிரவேலுப்பிள்ளை!

மேடைகளிலும் சரி பாராளுமன்றத்திலும் சரி கவர்ச்சியாகப் பேசவேண்டும். வார்த்தை ஜாலங்கள், அங்க சேஷ்டைகளால் மக்களைக் கவரவேண்டுமென்று திரு. கதிரவேலுப்பிள்ளை கருதியதில்லை தமது கருத்தைத் தெரிவிக்கவேண்டும்; மக்களுக்கு அது விளங்கவேண்டும் என்பதே அவரது நோக்கம்

பாராளுமன்ற விவாதம் ஒன்றில் திரு கதிரவேலுப்பிள்ளை கலந்துகொண்டு உரையாற்றிக் கொண்டிருந்தார். திருமதி விவியன் குணவர்த்தன பாராளுமன்றத்தில் இருந்தால் சும்மா இருக்கமாட்டார் ஏதாவது எழுதிக்கொண்டோ படித்துக்கொண்டோ இருப்பார். இதே சமயம் விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துபவர்களுக்கு இடையிடையே குறுக்கீடும் செய்வார். ஒருதடவை திருமதி விவியனின் கணவர் திரு. லெஸ்லி குணவர்த்தனவே தமது மனைவியின் குறுக்கீட்டைச் சமாளிக்க முடியாமல் சபாநாயகரிடம் முறைப்பட்டுக்கொண்டாரென்றல் வேறு என்ன சொல்லவேண்டும்? திரு. கதிரவேலுப்பிள்ளை அன்று பேசும்போதும் திருமதி விவியன் குணவர்த்தன குறுக்கிட்டார். பொதுவாகக் குறுக்கீடுகளுக்குக் காது கொடுக்காத திரு. கதிரவேலுப்பிள்ளை அன்று சகிக்கமுடியாத நிலையில் — ''சில சமயங்களில் பெண்கள் இல்லாமல் நாம் எதையும் செய்ய முடியாது. சில சமயங்களில் பெண்களுடன் எதையும் செய்யமுடியாமலுள்ளது (''Some times we cannot do without the women, Some times we cannot do with the women'') என்றரே. சபையில் சிரிப்பொலி! விவியனும் சேர்ந்து சிரித்தார்!

சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபடாதிருந்த போது 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்' உருவானது, மாவிட்டபுரத்தில் ஆலயப்பிரவேசப் போராட்டம் யாழ்ப்பாணத்தையே கலக்கு கலக்கென்று கலக்கிக்கொண்டிருந்தது.

ஆலயப்பிரவேசம் சம்பந்தமான வழக்குகளில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் சார்பில், உயர் சாதியினரின் வாக்குகளைப் பற்றிக் கவலைப்படாமல் தமது இலட்சியத்தையே நோக்கமாகக்கொண்டு திரு. கதிரவேலுப்பிள்ளை வாதாடி வெற்றி பெற்ருர்.

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு ஹர்த்தாலின் போது யாழ் நகர் மெயின் வீதியிலிருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அலுவலகக் கட்டிடத்தில்பறந்துகொண்டிருந்த நீலநிறக் கொடியைச் சில இளைஞர்கள் அறுத்துக்கொண்டு போய்விட்டனர் கொடியை அறுத்த இளைஞர்கள் இரண்டாம் குறுக்குத் தெருவிலிருந்த தமிழரசுக் கட்சி அலுவலகத்துக்குள் புகுந்துகொண்டதாகப் பொலிசாருக்குத் தகவல் கிடைத்தத. தமிழரசுக் கட்சி அலுவலகத்தைப் பொலிஸார் முற்றுகையிட்டனர். சிலர் துப்பாக்கியையும் தயார் படுத்திக்கொண்டனர். இதே சமயம் கட்சி அலுவலகத்தின் பின் பக்கத்தில் நின்ற இளைஞர்கள் சிலரும் எதிர்நடவடிக்கைக்கு ஆயத்தமானுர்கள்.

இந்நிலையில் அலுவலக வாசலில் 'பொட்டர், திரு சு. நடராசா கடுமையான போக்கில் பொலிஸ் அதிகாரிகளுடன் வாதாடுகிறுர் திரு கதிரவேலுப்பிள்ளை தமக்யேுரிய அமைதியுடன் தத்துவம் பேசிப் பொலிஸ் அதிகாரிகளைச் சமாளிக்கிறுர்.

சிறிது நேரத்தின் பின்னர் பொலிசார் திரும்பிச் செல்கின்றனர். பெரியதொரு நெருக்கடி அமைதியாகத் தீர்ந்துவிடுகிறது.

இறந்த சிவில் வழக்கறிஞரான அவர் தொழிலில் கண்ணியமும் கண்டிப்புமிருந்தன.

1961ஆம் ஆண்டுச் சத்தியாக்கிரகத்தினைத் தொடர்ந்து தடுப்புக்காவலில் இருந்த போது உமர்கய்யாம் பாடல்களைத் தமிழில் ஆக்கி பின்னர் அதை நூலுருவில் வெளியிட்டுத் தமது தமிழ் அறிவையும் வெளிப்படுத்தினுர்.

ஒரு சமயம் நண்பர் காமினி நவரத்தினவின் தந்தையாரும் சகோதரியும் நண்பர்களும் நயினதீவைத் தரிசிப்பதற்காக வந்தபோது திரு கதிரவேலுப்பிள்ளை தமது மோட்டார்க் காரைக்கொடுத்துதவினுர்.

இதுபற்றி காமினி பின்னர் எழுதியஒருகட்டுரையில் 'உதய சூரியன்' கொடி பறந்துகொண்டிருந்த காரில் தனது தந்தையும் நண்பர்களும் உல்லாசமாகப் பயணம் செய்தனர்'' என்று பெருமைப்பட்டுக் கொண்டார்.

பெருமைக்குரியவர் திரு.கதிரவேலுப்பிள்ளை!

(தொடரும்)

# மெய் சிலிர்க்க வைக்கும்

# ஹவாய்ஆதீனநடைமுறைகள்!

ஹவாய்த் தீவிலுள்ள சைவ சித்தாந்த ஆதீனத்தில் இறைவழிபாடும், ஏனைய கருமங்களும் மிகவும் நேர்த்தியான முறையிலேயே நடைபெறுகின்றன.

அதிகாலை 4மணிக்கு ஆதீனத்திலுள்ள கடவுள் கோயிலில் விநாயகப் பெருமானுக்கு விசேட பூசைகள் இடம்பெறுகின்றன. இதில் கலந்து கொள்வதற்கு இங்குள்ளவர்கள் யாவரும் அதிகாலை 3மணிக்கே துயில் விட்டெழுந்து விடுகிறுர்கள்.

முதலில் யோகாசனப்பயிற்சிகளை செய்த பின்னர், காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சரியாக 4மணிக்கே கடவுள் கோயிலுக்கு வந்து விடுகிறுர்கள்.

காலை ஆறு மணிக்கு இவர்கள் அனைவரும் தத்தம் பணிகளைச் செய்ய புறப்பட்டு விடுவர். பூப்பறித்தல், மாலைகள் கட்டுதல், கோயிலைக் கழுவுதல், பூசை ஆயத்தங்களை இருவர் கவனிக்கின்றனர். பூந்தோட்ட, காய்கறித் தோட்ட வேலைகளை மூவர் கவனிப்பர். தேனீ வளர்பபு, உணவு தயாரிப்பு, ஆதீன பராமரிப்பு முதலியவற்றில் நால்வர் ஈடுபடுவர். கடிதங்கள், பத்திரிகைகள், பாடத்திட்டங்கள் ஆகியவற்றைப் படிப்பதில் ஐநது பேரும், கம்பியூட்டர் சாதனங்களை இயக்குவதில் ஆறு பேரும் ஈடுபடுவர்.

ஒரு நேரம் பூசை செய்பவர் அடுத்த பூசை நேரம் வரைக்கும் கோயில் மண்டபத்திலிருந்து சைவப்பாடங்கள் படித்துக் கொண்டும், மந்திரங்களை உச்சாடனம் செயது தியானித்துக்கொண்டும் இருப்பார்.

இதுவே ஹவாய் சைவசித்தாந்த ஆதீனத்தின் நாளாந்த நடைமுறையாகும். மேற்குறிப்பிட்ட பணிகள் யாவற்றிலும் அமெரிக்கர்களே ஈடுபட்டுள்ளனர் என்பதை அறியும்போது ஒருகணம் மெய்சிலிர்க்கிறதல்லவா?

தகவல்: 'திருநெறி'

## இலக்கிய உலகு

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் வளம்பெறச் செய்வதுடன் நல்லதொரு பயண இலக்கியத்தை நமக்குத் தருமெனவும் நம்பலாம்.

பத்திரிகையாளர்

### மறைவு

'தினகரனி'ல் மூன்று சுப்பிரமணியங்கள் பத்திரிகையாளர்களாகப் பணியாற்றினர்கள். 'கோட்சூட்' காரரான எம் ஆர் இப்போதும் வாரமலருக்குப் பொறுப்பாக இருந்து பணியாற்றுகிறுர். மற்ற இருவரில் 'ஈ வி' யைக் கடந்த வருடம் இழக்க நேரிட்டது. சமீபத்தில் அளவெட்டி வி சுப்பிரமணியம் மறைந்த செய்தி நம்மைத்துக்கத்தில் ஆழ்த்தியது. அடக்கமாக இருபதாண்டுகளுக்கு மேல் பணியாற்றி ஓய்வுபெற்ற நாஷனல் வேட்டிக்காரரான இவருடன் பக்கமாக இருந்து ஒரு காலத்தில் பணியாற்றிய நினைவுகளை இரை மீட்கிற போது அவரது அடக்கமான பண்புகளும், நகைச்சுவைகளும் மனத்திரையில் வந்து போகின்றன நீண்டகாலத்தைப் பத்திரிகைத்துறைக்கு அர்ப்பணித்தவர்.. அவர்!

### 'களம்'

மட்டக்களப்பிலிருந்து முதலாவது 'களம்' தரமாக வந்திருக்கிறது களம் கலை இலக்கிய வட்டத்தின் வெளியீடு இது. 'இலைமறைகாயாக வாழும் திறமையுள்ள படைப்பாளிகளை ஊக்குவிப்பது கிழக்கிலங்கையைப் பற்றிக் கூடுதலாக அறிந்துகொள்ள வைப்பதுபோன்ற நோக்கங்களை விழிப்புறச் செய்கின்றபோதிலும், 'களம் சஞ்சிகை தனது செயற்பாட்டினைப் பிரதேச வரையறைகளுக்குள் அடக்கிக் கொள்ளவில்லை. தரமான ஆக்கங்களுக்கு நிச்சயம் 'களம்' அமைத்துக் கொடுப்போம்'' என்ற தனது முதற்பக்கக் குறிப்போடு தன்பணியைக் களம் ஆரம்பித்துள்ளது.

களம் தன் இலக்கியப்பணி தொடர வாழ்த்துகிறேம்!

### தமிழ் ஒலி

தமிழ் ஒலி வானொலி நேயர் மன்றத்தின் வெளியீடான 'தமிழ் ஒலி' சஞ்சிகை ஏப்ரல் - செப்டம்பர் வெளிவந்தள்ளது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவைப் பணிப்பாளரின் படத்தை அட்டையில் தாங்கி வந்திருக்கிறது. இவ் இதழ் எஸ் உமாகாந்தன் இந்தச்சஞ்சிகையின் ஆசிரியர். சஞ்சிகை 'கனமாக'வே உள்ளது உமாகாந்தன், கே. எம் வாசகர், தம் ஜெயா, தேவதாஸ், பாமா ராஜேந்திரன் பிரேமராஜன் ஆயோரின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன

### மீண்டும் 'சின்ரா'!

மீண்டும் 'சின்ரா' வரத் தொடங்கியுள்ளது! தமிழர் பிரச்னைகளை ஆங்கிலத்தில் தெளிவுறத் தரும் மாதம் இருமுறை வெளிவரும் இந்த இதழை தமிழ், தேசிய விவகாரங்களுக்கான இலங்கை நிலையம் நடாத்துகிறது. சட்டத்தரணி அண்டலூட் மணிவாசகமும் 'பெரி'யும் சேர்ந்து 'சிறப்புற' 'சின்ரா' இதழ்களை வெளிக் கொண்டு வருகிறுர்கள்.

## இவ்வாரப் பொன்மொழி

''மற்றப் பறவைகளை விட முதலாவதாக விடிகாலையிலேயே எழுந்து சுறுசுறுப்புடன் இரையைத் தேடி, பறந்து செல்லும் பறவைக்குத்தான் சுவையான பெரிய புழுக்கள் சுலபமாகக் கிடைக்கின்றன''


# தொழிலாளர்கள் தேவை

பின்வரும் துறைகளில் மிகத் திறமையும் தேர்ச்சியும் உள்ள தொழிலாளர்கள் எங்கள் பாலன் இரும்புப் பெட்டகங்கள் (PAALAN IRON SAFES) அலுமாரிகள் (CABINETS) தயாரிப்பு தொழிற்சாலைக்கு உடன் தேவை.

**கடைச்சல் வேலையாட்கள் (Lathe Operators)**
**ஒட்டுனர்கள் (Welders)**
**பொருத்துனர்கள் (Fitters)**

விண்ணப்பதாரர்கள் மூன்று வருடங்களுக்கு குறையாத தொழில் அனுபவம் உள்ளவர்கள் ஆகவும், சுயமாக வேலை செய்யக்கூடியவர்கள் ஆகவும் இருத்தல் வேண்டும்.

வெளியூர் வேலையாட்களுக்கு இலவச தங்குமிட வசதியுண்டு. சாப்பாட்டு வசதியும் செய்து கொடுக்கப்படும்.

சம்பளம் பேச்சுவார்த்தை மூலம் தீர்மானிக்கப்படும். மிகத் திறமையுள்ளவர்களுக்கு கூடுதலான சம்பளம் வழங்கப்படும். ஓவர் ரைம் (OVERTIME) உண்டு.

விண்ணப்பம் செய்ய விரும்புவோர் நற்சான்றிதழ், கல்வித் தகைமை மற்றும் தேவையான பத்திரங்கள் உடன் இம்மாதம் 21, 22, 23-ம் திகதிகளில் (சனி, ஞாயிறு, திங்கள்) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை எங்கள் தலைமைக் காரியாலயத்திற்கு நேரில் வரவும்.

**A.C. பாலன்**
பூட்டுப் பெட்டக பொறியியலாளர்களும் தயாரிப்பாளர்களும்,
பஸ் நிலைய முன்பாக,
நெல்லியடி, கரவெட்டி.

PAALAN

**A.C. PAALAN**
LOCK AND SAFE ENGINEERS AND MANUFACTURERS
NELLIADY,
KARAVEDDY.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**ராணி** (யாழ். நகர்)
இன்னும் சில தினங்கள் மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
**ராமன் தேடிய சீதை**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
MY BLOODY VALENTINE

**சாந்தி** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30
மட்டும்
மேஜர் - தேவிகா
**ஆலயம்**
(புதிய பிரதி)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி - கே. ஆர். விஜயா
**ராமன் எத்தனை ராமனடி**

**றீகல்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30 6-00
கமலஹாசன், ஆலம்,
வை. விஜயா
K. பாலசந்தரின்
**மன்மதலீலை**
[புத்தம் புதிய வண்ணப் பிரதி]

**வின்சர்** (யாழ் நகர்
தினசரி 5 காட்சிகள்
13 முதல் 22 வரை
Armand Assante
Barbara Carrera
எதிர்பாராத தாக்கங்களும்-இன்பக் கிளர்ச்சியும் நிறைந்த ஆங்கிலப்படைப்பான
**'I The Jury'**
பார்க்கத் தவறாதீர்கள்.
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்குமட்டும்)

**ஹரன்** (யாழ். நகர்)
10-30, 12-30, 2-30
4-30, 6-30, 8-30
Sylvia Kristel
Nicholas Clay in
LADY CHATTERLEY'S LOVER
(strictly for adults)
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்
கொழும்பில் 130 நாட்கள் ஓடி சரித்திரம் படைத்த ஆங்கில திரைக்காவியம்

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
**மாணவன்**
Coming soon
BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
**தனிப்பிறவி**
(புதிய பிரதி)

## இதுவும் ஒரு விசித்திரக் கதைதான்

# 'லாயம்' லயமாகமாறியது!

**வேலை** முடிந்து வரும் வீரமுத்துவிடம், ''எங்கே செல்கின்றாய்?'' எனக் கேட்டால், ''லயத்துக்குப் போறேன்'' என்றுதான் சொல்லுவான். மாறாக, ''வீட்டுக்குப் போறேன்'' என்று சொல்லமாட்டான். இதன் மூலம் ''லயம்'' என்னும் இந்தச் சொல் மலையக மொழி வழக்கில் எத்துணை தூரம் இரண்டறக் கலந்துள்ளதென்பது புலனாகின்றது 'லயம்' என்பது மலையகத் தொழிலாளர்களின் வீட்டையே குறிக்கும்.

'லயம்' என்னும் இந்தச் சொல் லாயம் என்னும் சொல்லின் திரிபாகும். லாயம் என்றால் ''குதிரைக் கொட்டில்'' எனப்படும்.

குதிரைகள் யாவும் லாயங்களிலேயே அடைத்துவைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு சிறு அறையுடன் கூடிய நீண்ட மண்டபங்கள் என்று இதனைக் கூறலாம். இந்த அறைகளைத் தோட்டப் பகுதிகளில் ''காம்புறா'' என்றுதான் சொல்லுவார்கள். ஒவ்வொரு 'லய'மும் பத்துப் பதினைந்து காம்புறாக்களைக் கொண்டதாகக் கட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு காம்புறாவும் பத்தடி நீளமும் எட்டு அடி அகலமும் கொண்டதாகஇருக்கும் ஒவ்வொரு காம்புறாவிலும் ஒவ்வொரு குதிரை யாகக் கட்டப்படுவதுண்டாம். இது வெள்ளைக்கார நாட்டில்.

இலங்கையில் அந்நாளில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கும் இந்த அடிப்படையிலான 'லாயங்களே (குதிரைக் கொட்டில்) வெள்ளைத் துரைமாரால் அமைத்துக் கொடுக்கப்பட்டன பல 'லாய'ங்கள் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டன. அவ்வாறு தோட்டத் தொழிலாளர்களைக் கூட்டாக ஓரிடத்தில் குடியிருக்கச் செய்தமை நிருவாகத்தினர் அவர்களைக் கண்காணிக்க வாய்ப்பாக இருந்தது.

இந்த 'லாய'த்து வாழ்க்கையில் குதிரைக்கும் மனிதனுக்குமிடையில் சிறு வித்தியாசம் காணப்பட்டது அதாவது; ஒரு 'காம்புறா'வில் ஒரு குதிரை மாத்திரமே கட்டப்பட்டதாம். தேயிலைத் தோட்டங்களைப் பொறுத்தமட்டில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பல அங்கத்தவர்கள் இந்த ஒரு 'காம்புறா'வில்தான் முடக்கிவைக்கப்பட்டார்கள். தாய், தகப்பன் உட்பட வயதுக்குவந்த மகன், மகள் அனைவரும் இந்தக் காம்புறாவில்தான தங்குவார்கள். வயதுவந்த பெண்கள் இருக்க திருமணம் முடித்த அண்ணன் குடும்பம் நடத்துவதும் இந்த பத்து X எட்டு காம்புறாவில்தான் என்றால், குதிரைக்குக் கொடுக்கப்பட்ட மரியாதையாவது இந்த 'மனிதர்'களுக்குக் கொடுக்கப் படவில்லையே என்றுதான் எண்ணத் தோன்றும்.

வெள்ளைத் துரைமாரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட அந்த 'மரியாதை வாழ்க்கை'யுடன்தான் இன்னும் மலையகம் இருக்கின்றது!

[கடந்த வாரம் தோட்டப் பாடசாலைகளின் தோற்றம் பற்றிய கட்டுரை வெளியாகியிருந்தது].

**✶ மாத்தளை ஆ. இராஜலிங்கம்**

# நடப்பு

**ஈழ-காண**

**இ**ரண்டாவதுஉலக மகாயுத்தம் என்றால் சர்வாதிகாரி ஹிட்லரும்- ஹிட்லர் என்றால் இரண்டாவது உலகப் போருமே ஞாபகத்திற்குவரும்.

உலகம் முழுவதும் தமது கைகளுக்குள் சிக்க வேண்டும் என்ற நப்பாசை கொண்டிருந்த ஹிட்லரின் படைகள் தமது படையெடுப்பின் போது குறுக்கிட்ட ஆறுகள், மலைகள் பள்ளத்தாக்குகளை கடக்கப் பாலங்களை அமைத்த வாறுதானே முன்னேற வேண்டும்.

அவ்வாறு முன்னேறியவேளையில் ஹிட்லரும் படுதோல்வி காண போரும் முடிந்தது. அப்புறம் அந்தப் பாலங்களின் தேவைகளும் அவசியமற்றதாகிவிட்டன.

தேவை முடிந்து 'பிடுங்கி அடுக்கி' வைக்கப்பட்டிருந்த அந்தப்பாலங்களின் மேல் இனிமேல் எமது ரயில்கள் ஓடப் போகின்றன.

ஆம் அந்தப்பாலங்கள் இப்போது எமது ரயில்வேதிணைக்களத்திற்கு ஜெர்மனின் உதவியாக வழங்கப்பட்டுள்ளன- தேவையான இடங்களில் அவை அமைக்கப்பட்டும் வருகின்றன.

அன்றுஜெர்மனியின் போர்த் தேவைக்கு உதவிய பாலங்கள் இப்போது எமது போக்குவரத்துக்களைச் சமாளிக்கின்றன.

★

**உ**தவித் திட்டம் ஒன்றின் கீழ் இலங்கையில் பணிபுரியும் வெளிநாட்டு நிபுணர் ஒருவர் அண்மையில் கொழும்பிலிருந்து யாழ்சென்றுவிட்டுத் திரும்பும் வழியில் சாவகச்சேரியிலுள்ள தேநீர்க்கடை ஒன்றில் தாக சாந்தி செய்வதற்காகச் சென்றார்

கடையிலிருந்த சிற்றுண்டிகளையும் நன்கு சுவைத்த அந்த நிபுணர் அவற்றுக்குப் பணத்தைக்கொடுத்தபோது அதற்கு 'பில்' வேண்டும் என்றார்.

எமது தேநீர்க்கடைகளில் சாப்பிடுவதற்கு எங்கே 'பில்' கொடுக்கிறார்கள்.

ஆனால் அந்த நிபுணருக்கு எங்கே தெரியப்போகிறது. பில் கேட்டு பெரும் 'பிரளயம்' ஒன்றையே நிகழ்த்திவிட்டார்.

தாம் பணி புரியும் வெளிநாட்டு உதவி நிறுவனத்திற்கு தமது செலவுக்குரிய சகல 'பில்'களையும் சமர்ப்பிக்க வேண்டும் என்பது அவரது நிலை. 'பில்' கொடுக்கும் வழமையேயில்லாத கடைக்காரர்தான் என்ன செய்வார்?

அவருடன் வந்த உள்ளூர்க்காரருக்கும் கடைக்காரருக்கும் நிலைமையைச் சமாளிப்பது பெரும்பாடாகிவிட்டது.

★

**தி**.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதிக்கு அண்மையில் அவரது பிறந்த நாளையொட்டி தி.மு.க.தொண்டர்கள் 61 முயல்க் குட்டிகளைப் பரிசாக வழங்கியிருந்தார்கள்.

எதையுமே சுவைபட எடுத்துக்கூறும் கலைஞர், இந்த அன்பளிப்புக் குறித்து ஒரு பொதுக்கூட்டமொன்றில் பின்வருமாறு வர்ணிக்கிறார்-

''மாற்றான் எனக்குத் தருவது புயல்—

''எனது உடன் பிறப்புக்கள் எனக்குத் தருவது முயல்—

''எனது உடன் பிறப்புக்கள் முயல் போன்றவர்கள் என்பது எனக்குத் தெரியும் ஆனாலும் முயல் தூங்க ஆமை வென்ற கதையையும் எனது உடன் பிறப்புக்கள் மறக்கக் கூடாது''

# விளைவேலி துர்க்கை அம்மனுக்கு லட்சார்ச்சனை

லலிதா பூஜை, பெண்கள் அனுட்டித்து வரும் பல பூஜைகளில் விசேஷ பூசையாக மதிக்கப்பெற்று வருகிறது. குத்து விளக்குப் பூசையென்றும், மங்கையர் பூசையென்றும், பௌர்ணமி பூசையென்றும் லலிதா பூசையை அழைப்பார்கள். லலிதா தேவியை நோக்கிச்செய்யும் பூசையாதலால் லலிதா பூசையென்றும் மங்கையர்களால் அனுட்டித்து வரும் பூசையாதலால் மங்கையர் பூசையென்றும், மாலை நேரத்தில் குத்துவிளக்கேற்றி வழிபடும் பூசையாதலால் திருவிளக்குப் பூசையென்றும் அழைக்கப் பெறுகிறது.

மாலை நேரத்தில் மலரும் வெண்நிறப் பூக்களே லலிதா பூசைக்கு உவப்பானவை.

லலிதா பூசை அம்மன் கோவிலிலே சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. சிவன்கோவில் ஆசிரமம் ஆதீனங்களிலும் பெரும்பாலும் லலிதா பூசை நடைபெறுகிறது.

### துக்கம் துடைக்கும்

### துர்க்கை அம்மன்

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் திருவிளக்குப் பூசைதனிச் சிறப்பு வாய்ந்தது.

சாவகச்சேரித் தொகுதியிலே நுணுவில் மேற்கில் விளைவேலி என்ற கிராமத்தில் துர்க்கை அம்மன் கோவில் அமைந்துள்ளது. இவ் அம்மன் விஷ்ணு துர்க்கைவடிவிலமைந்தது.

1805ம் ஆண்டு இவ்வாலயம் பரமசாமிக்குருக்கள் (சந்தனக் குருக்கள்) பரம்பரையினரால் ஸ்தாபிக்கப்பெற்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முப்பெருமையும், மிகப்பழமையும் ஒருங்கே அமையப்பெற்ற தாளையம்பதி என்னும் திவ்விய திருத்தலத்தின் வடக்கு நோக்கி அம்மன் காட்சி தந்து வீற்றிருக்கின்றாள்.

ஸ்தல விருட்சம் தாழை இவ்விருட்சம் கோவில் தோன்றிய காலந்தொடக்கம் உற்பத்தியாயிருக்க வேண்டுமென்று அறியப்படுகிறது. கோவிலின் கிழக்குப்பக்கமாக அமைந்திருக்கும் இத்தாழைகளில் எக்காலமும் தாளம் பூ வாசனை கம கம என்று வீசிக்கொண்டிருக்கும். இத்தாழைகளில் காணப்பெறும் விசேஷம், பூப்பதன்றிக் காய்ப்பதில்லை.

மேலே கூறிய தாழைமரங்களை அண்மித்து கன்னியாவில் அமைந்துள்ள ஏழு வெந்நீர் ஊற்றுக்கிணறுகள் அளவு ஒரு தண்ணீர் ஊற்றுக்கிணறு அமைந்துள்ளது. அள்ள அள்ளக்குறையாத தண்ணீர் ஊற்று அது. இதுவே இவ்வாலயத் தீர்த்தக்கிணறாகும்.

தாளையம்பதி துர்கை அம்மன்கோவில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் தவறாது லலிதா பூசையை ஒரு பெண் செய்வித்து வருவது வழக்கம். இப்பெண்ணுக்கு ஒரு வெள்ளைக்கார மருமகள் உண்டு. சுசி என்ற வெள்ளைக்கார பெண் ஒரு பட்டதாரி பிரஸ்தாபபெண் லலிதாதேவியின் மகத்துவத்தைப் பற்றி மாமியாரிடம் கேட்டு அறிந்து கொண்டார். சைவசமய மகத்துவத்தை அறிந்திருந்த இப்பெண் சைவசமய முறைகளை அனுட்டித்து வந்தார். நெற்றியில் குங்குமம் தரிப்பார்.

உத்தியோகத்தின்பொருட்டு இங்கிலாந்துக்குச் சென்ற இப்பெண்ணுக்கு ஒரு பெண் குழந்தை திருவருளால்கிடைத்தது அக்குழந்தைக்கு லலிதா தேவி என்ற நாமஞ்சூட்டிப் பெற்றோர் அழைத்து வருகிறார்கள் லலிதாதேவியை நினைவில் பெற்றிருந்த வெள்ளைக்காரப்பெண், தனது குழந்தைக்கு லலிதாதேவியென்று பெயர் சூட்டினார்.

இவ்வாலயத்தில் நித்திய பூசையும் பத்துநாட்கள் அலங்

(16-ம் பக்கம்பார்க்க)

## 10ம் வருட நினைவஞ்சலி

**திருமதி அருள்சிலி பெர்னாண்டோ**

(காலஞ்சென்ற V. S. மாணிக்கம் பெர்னாண்டோ அவர்களின் மனைவி)

**பிறப்பு : 9-7-25 இறப்பு : 22-7-74**



மாசற்ற நல்லமுதே
மாணிக்கத்தின்
மரகதமே
பேசற்கரிய
பெருங்குணத்தின்
பெட்டகமாம்
பெண்ணமுதே
நேசமுடை
நெஞ்சினளாய்
நினைவினிலே
நிலைப்பவளே
ஈசனுக்கருகேக
எமை மறந்து
போனாயோ

பிறப்பினில்
பெரியதாம்
பேசரிய
தன்மையதாம்
சிறப்பான மானிடத்தின சிகரமாய்த தாயன்பு
அறக் கொடையும் ஆன்ற பெருங் கருணையதும்
சிறந்தாளைப் பறிகொடுத்து செயலற்றுப் போனோமே,

**மக்கள், மருமக்கள், சகோதரர், பேரப்பிள்ளைகள்.**

1028

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மக்கள் பீதியின்றி நடமாட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மக்கள் பீதியின்றி நடமாடக்கூடிய நிலையைத்தோற்றுவிக்க நேற்று யாழ். செயலகத்தில் நடந்த உயர்மட்ட மகாநாட்டில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன. யாழ். செயலகத்தில் இந்த மகாநாடு நடந்தது.

யாழ். பிரஜைகள் குழுவின் கோரிக்கையில் இம் மகாநாடு கூட்டப்பட்டது.

நேற்று முன்தினம் பலர் கைது செய்யப்பட்டது சம்பந்தமாக யாழ். பிரஜைகள் குழுவினருக்கு முறையிட்டதாகவும். அதனைத்தொடர்ந்து பிரஜைகள்குழுச் செயலாளர் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்துடனும் வடபகுதி இணைப்பதிகாரி பிரிகேடியர் நளின் செனிவரத்தினுவுடனும்தொடர்புகொண்டதாகவும் தெரிவித்த பிரஜைகள்குழு செயலாளர் கைது செய்யப்பட்ட பலர் துரிதகதியில் மேற்கொண்ட விசாரணையின் பேரில் விடுதலை செய்யப்பட்டதாகவும் சொன்னர்.

இம் மகாநாட்டில் யாழ். பிரஜைகள் குழு உறுப்பினர்கள் வட பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர், பொலிஸ் அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வடபகுதியில் இன்று மக்கள் பலவித கஷ்டங்களை அனுபவிக்கின்றூர்கள் என்று பிரஜைகள் குழு சார்பில் எடுத்துரைக்கப்பட்ட அதே நேரம் பாதுகாப்பு அதிகாரிகளும் தங்கள் கஷ்டங்களை மகாநாட்டில் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (மா)

## யாருடையது

சழிபுரம் பண்ணுகத்தைச் சேர்ந்த திரு. பாலசிங்கம் கணேசன் என்பவருடைய அடையாள அட்டையையும், பேர்ஸினையும் இ. போ. ச. பரிசோதகர் திரு. வி. இராசதுரையும், ஜனுப் மீராலெப்பே முகமது சலீம் என்பவருடைய அடையாள அட்டையை திரு. எஸ். ஜெயரெட்ணமும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்துபெற்றுக்கொள்ளவும்.

## விளைவேலி

[15ம் பக்கத் தொடர்ச்சி]

கார உற்சவமும் செவ்வாய்க் கிழமைதோறும் விசேட அபிஷேகம் திருவுலாவும் நடைபெறுகின்றன. தினமும் சாதி மதபேதமின்றி மக்கள் வழிபாடு செய்துவருகின்றனர்.

இலட்சார்ச்சனை விழா 22-7-84 முதல் தினமும் காலை ஏழுமணி முதலும் மாலை மூன்றுமணி முதலும் இலட்சார்ச்சனை ஆரம்பமாகும். காலை இலட்சார்ச்சனைக்குப் பதினைந்து பர் உபயகாரராகவும், மாலை இலாட்சார்ச்சனைக்குப் பதினெட்டுப்பேர் உபயகாரராகவும் பொறுப்பேற்றுள்ளனர்.

பிரதிஷ்டா வித்தகர் சிவாகம ஞானசாகரம் சிவஸ்ரீ தி. சோமசுந்தரக்குருக்கள் இலட்சார்ச்சனை வைபவத்தை நடாத்தி வைப்பார்கள்.

க. க. ஐயாத்துரை

65 ப. நோ. கூ. சங்க முகாமையாளர்கள்:

# வவனியாவில் இன்றுகூடுகிறூர்கள்

(நெடுந்தீவு)

வடக்கு, கிழக்கு மகாணங்களிலுள் 65 பலநோக்குக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பொதுமுகாமையாளர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை வவனியாவில் கூடுகின்றனர்.

கூட்டுறவுச் சங்கங்களின் பொதுமுகாமையாளர்கள் ஒருங்கிணைந்த அமைப்பு ஒன்று நாளைய கூட்டத்தில் உருவாக்கப்படவுள்ளது.

வவனியா தேசிய கூட்டுறவுக்சபைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தை சிரேஷ்ட கூட்டுறவு ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் ஆரம்பித்து வைக்கவிருக்கிறூர். இதற்கான ஏற்பாடுகளை வவனியா ப. நோ. கூ. சங்கபொதுமுகாமையாளர் திரு கே.சபாரத்தினம் மேற்கொண்டுள்ளார்.

## மாணவர்களை ஆயுதப்படை கூட்டிச்சென்றது

[இரா. உதயகுமார்]

மட்டக்களப்பு புனித. மிக்கேல் கல்லூரியைச் சேர்ந்த பலமாணவர்கள் ஆயுதப்படையினரால் கூட்டிச்செல்லப்பட்டனர்.

கல்லூரிக்கருகில் உள்ள கிளப் ஒன்றில் வைத்து இவர்கள் கூட்டிக் செல்லப்பட்டு ஒருவரைத் தவிர மற்ற அனைவரும்விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமையன்று சென். சிஸிலியா மகளிர் வித்தியாலய ஆசிரியையும், கன்னியாஸ்திரியுமான அருட்செல்வி திறேஸ்ராணி 2 மணிநேரம் ஆயுதப்பபடையினரால் விசாரிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

இது இவ்வாறிருக்க மட்டக்களப்பில் டீசல், பெற்ரூல், முதலியவை வாகனங்களைக் கொண்டு சென்றால் மாத்திரமே வழங்கப்படுகின்றது. பொலிசாரின் ஆலோசனையின் பேரில் இவ்வாறு செய்யப்படுகின்றதாம். திருமண வீடுகள், மரணவீடுகளுக்கு எரிபொருள் தேவைப்படுபவர்கள் பொலிசாரின் அனுமதிபெற வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

## ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

இம்மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த அஞ்சல் தொலை தொடர்புகள் சேவைசங்ககூட்டம் நாள் குறிப்பிடப்படமல் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அச்சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

# மீன்பிடிக்கச் சென்றஇளைஞர் கடலில் சூடுபட்டு மரணம்!

(புலோலி)

மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்ற இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி மரணமானுர்.

பொலிகண்டியைச் சேர்ந்த அழகேசு (வள்ளுவன் வயது19) என்பவரே மரணமானவராவர். இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது:

பொலிகண்டியைச் சேர்ந்த எஸ். அழகேசு, ஏ. வள்ளுவன் கே.ரவிக்குமார் ஆகிய மூவரும் தும்புக் கண்ணுடி வள்ளத்தில் பொலிகண்டிக்கரையிலிருந்து மீண்பிடிப்பதற்காகச் சென்றனர். சற்றுத் தூரம் சென்றதும் வலையை வீசிவிட்டு மீன்அகப்படுவதற்காகக் காத்திருந்தனராம். அப்போது குப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாம் இதனைத்தொடர்ந்து வள்ளுவன் காயமடைந்தார். உடனடியாக அவர் கரைக்குக்கொண்டு வரப்பட்டு மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டார். பின்னர் அங்கு அவர் மரணமானுர்.

இறந்தவரது பிரேதபரிசோதனையை மந்திகை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் மேற்கொண்டார். பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை காங்கேசன் துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் ஸ்தல விசாரணைகளை மேற்கொண்டு இறந்தவர் மீன் பிடிக்கச் சென்ற வள்ளத்தையும் பார்வையிட்டனர்.

பிரேதபரிசோதனையின் போது இறந்தவருக்குத் துப்பாக்கியால் ஏற்படுத்தப்பட்ட காயம் நெஞ்சில் காணப்பட்டது. நெஞ்சினூடாக சென்றிருந்த துப்பாக்கிக்குண்டு நுரையீரலையும் தாக்கிக் கொண்டு முதுகுப்புறமாக வெளியேறியிருந்ததகத் தெரிவிக்கப்பட்டது. இத் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (கி)

## அஞ்சலி சுவரொட்டிகள்

(புங்குடுதீவு)

கடந்த 18-ம் திகதி மரணமடைந்த பிரபல கராட்டி வீரரும் நெடுந்தீவினை பிறப்பிடமாகக்கொண்டவருமான திரு. மணிவாசகம் (24 வயது) என்பவருக்கு அஞ்சலி தெரிவித்து புங்குடுதீவில் சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

## இன்றுதிருச்சுரூபபவனி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் ஆலயத்தின் வருடாந்த திருச்சுரூப பவனி இன்று நடைபெறுகின்றது.

திருநாட்பாடற் பூசைவழமை போல் 25-ம் திகதி நடைபெறுமென்றும் மேற்படி ஆலய பங்குத் தந்தை வண. பிதா பீற்றர் துரைரத்தினம் கூறினுர். (வி)

# "சமூகப் பணிகளில் யாழ். ரேட்டறிக்கழகத்தின் ஈடுபாடு'

[யாழ்ப்பாணம்]

"ரேட்டறிக் கழகம் சமூக நலப்பணிகளில் தீவிர ஈடுபாடு கொண்டு செயல்பட்டுவருகிறது. இக்கழகத்தினுல் இது வரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் பலருக்கும் உறுதுணையாய் அமைந்துள்ளன என்று முன்னுள் ரேட்டறிக் கழகத் தலைவரும், யாழ். சிறைச்சாலை அதிபருமான திரு. எஸ், சத்தியமூர்த்தி கூறினுர்.

யாழ. ரேட்டறிக் கழக ஆதரவில் யாழ். சட்டநாதர் வீதியில் இளங்கலைஞர் மன்றபாலர் பாடசாலை திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டுபேசுகையிலேயேதிரு. சத்தியமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

வடபிராந்திய போக்குவரத்து சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் தலைமையில் இத் திறப்பு விழா நடைபெற்றது. திரு. சத்தியமூர்த்தி தொடர்ந்துபேசுகையில் குறிப்பிட்டதாவது: "பாலர் பாடசாலை இளங்கலைஞர் மன்றத்தினரால் இசைக் கல்லூரியில் அமைவதுமிகபொருத்தமாகும் பாலரின் களங்கமற்ற உள்ளம் தெளிந்த நீரோடை போன்றது. இந்த உள்ளத்தில் இசை இதய சுத்தியை ஏற்படுத்துகிறது. இப்பாலகர்கள் தான் எதிர்காலத் தலைவர்களாவர் நல்ல உள்ளமும், உடற்கட்டும்தான் இன்றைய இளைய சமுதாயத்துக்குதேவையாகும்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் டாக்டர் பி. எஸ். பாரதி மங்கள விளக்கேற்றி வைத்தார்.

கோப்பாய் முன்னுள் எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரமும் யாழ். ரேட்டறிக் கழகத் தலைவர் திரு. பாலேந்திராவும் ஆசியுரை வழங்கினர்.

இளங்கலைஞர் மன்றத்தலைவர் திரு பொன் சுந்தரலிங்கம் நன்றியுரை நிகழ்த்தினுர்.

சிறப்பு நிகழ்ச்சியாக புல்லாங்குழலிசை இடம் பெற்றது. யாழ். ரேட்டறிக் கழகத்தினர், மேற்படி பாடசாலைக்கு தளபாட உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கினர். (சூ-மா)

## இந்திரா கடிதம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் பிரிட்டிஷ் பிரதமர் இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து ஜனதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்திருந்த கருத்துக்கள் தொடர்பாகத் திருமதி இந்திராவுக்கு எழுதியிருந்த கடிதத்திற்குப் பதிலாகவே இந்திரா இக்கடிதத்தை எழுதியுள்ளார். (சூ)

## சாத்வீகப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காக உழைக்கும் எல்லாக் கட்சிகள், அமைப்புகள் ஆகியவற்றின் மத்தியிலும், எல்லாமட்டத்திலும் பூரணஒற்றுமையை ஏற்படுத்துவது.

[2] சாத்வீக சட்டமறுப்பு இயக்கம், அமைதியான எதிர்ப்பு, ஒத்துழையாமை, அரசின் செயற்பாடுகள் மற்றும் அமைப்புகள் எல்லாவற்றையும் பகிஷ்கரித்து, போராட்டத்துக்கான திட்டத்தை வகுத்து செயற்படுத்துதல்.

[3] பயங்கரவாதத் தடைச் சட்டம், மரண விசாரணையின்றி சடலங்களை அடக்கம் செய்ய வழிவகுக்கும் அவசர காலச் சட்டங்கள் போன்ற அடக்குமுறைச் சட்டங்களை எதிர்த்து மக்கள் போராட்டமென்றை ஆரம்பித்தல்.

[4] தமிழ்ப்பேசும் மக்களுடைய பிரதேசத்தைப் பாதுகாத்து அவர்களது உயிர், உடைமைக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அவர்களின் பிரதேசங்களில் சிங்கள ஆக்கிரமிப்பை நிறுத்தவும், வழிவகுக்கவேண்டிய அடிப்படைக் கொள்கைகளை அங்கீகரிக்காத எந்த பேச்சு வார்த்தையும் பயனற்றது என்ற தனது நிலைப்பாட்டை கூட்டணி மீண்டும் உறுதிப்படுத்தவும்; இதற்கான திட்டங்களை வகுத்து செயற்படுத்துவதற்கும் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் ,செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம், திருமலை முன்னுள் எம். பி. ஆர். சம்பந்தன் ஆகிய மூன்று அரசியவ் குழு உறுப்பினர்களுடன் திரு வே. கைலாசபிள்ளை, திரு. பூ. கணேசலிங்கம், திரு. த. இராஜலிங்கம், ஜனுப் எஸ். ஏ. இமாம் ஆகியோரையும் சேர்த்து எழுவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

"கூட்டணியின் அலுவலகப் பொறுப்பாளர் திரு. எஸ். தர்மலிங்கத்துடன், திரு. ந. இராஜேந்திரனையும் நியமித்து இராணுவ நடவடிக்கைகளினுல் கைதானேர், தாக்குதலுக்குள்ளானேர், பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய விபரங்களை உடனடியாகத் திரட்ட நடவடிக்கை எடுப்பதென்றும் ஒவ்வொரு பொதுச்சபை உறுப்பினரும் தத்தமது பகுதிகளில் இவைபற்றிய விபரங்களை அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு உடன் திரட்டிக்ாகாடுக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது."

## ரெட்பானு மரநடுகை இயக்கம்

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகள் மத்தியில் மரம் நடுகைப் பிரசார இயக்கம் ஒன்று எதிர்வரும் 23ந் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்படும்.

ரெட்பானு ஸ்தாபனத்தின் ஆதரவுடன் முல்லைத்தீவு தமிழ் கலவன்பாடசாலையில் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு கே. கே. ஞானச்சந்திரன், முல்லைத்தீவு பிராந்திய கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம்.எம். மன்சூர், ரெட்பானு திட்ட இணைப்பாளர் திரு. ஏ. ஜி. எஸ். பாலச்சந்திரன் ஆகியோரால் இவ்வியக்கம் 23ந் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

இவ் ஆரம்ப வைபவத்தில் முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கு மரம் நடுகையை ஊக்குவிக்கும் வகையில் பல பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கப்படும். (கி)

## ஆடிப்பூர உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு இராமநாதன் தெரு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரசுவாமி கோயில் ஆடிப்பூர உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து வரும் 31ம் திகதி வரையும் நடைபெறும்.

இந்நாட்களில் அபிஷேகம், யந்திர பூசை, தீபாரதனை முதலிய நிகழும்.

## நல்லின தென்னங்கன்றுகள்

(புலோலி)

புலோலி கமநலச்சேவை நிலையப்பகுதிகளில் தென்னைவள அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கிணங்க இப்பகுதி மக்களுக்கு நல்லின தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இத் தென்னங்கன்றுகளைப் பெற விரும்புபவர்கள் அவ்வப்பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுடன் தொடர்பு சொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜுலை மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org